

BALTHAZAR'S, RANGOON.

INSURANCE, SHIPPING & FORWARDING AGENTS, SURVEYORS & APPRAISERS, BANKERS, IMPORTERS, EXPORTERS. AUCTIONEERS. ESTATE AGENTS.

ABSTRACT

OF

SIXTEEN

INSURANCES.

நாநாவித

இன்ஷூரன்ஸுகளின்

விவரங்கள்.

இஃது

ஆங்கிலபாஷையில் பற்பலவிற்பண்ணர்களால் எழுதப் பட்ட புஸ்தகங்களிலிருந்து தற்காலம் நடைபெற்றுவருகிற பலவிதமான இன்ஷூரங்களின் முக்கிய சாராம்சங்களை, ஆராய்ந்து சி. ஆர். என். மணி, என்பவரால் தமிழில்மொழி பெயர்க்கப்பட்டது.

முதல் பதிப்பு 1500.

இம்பீரியல் பிரஸ், இரங்கோன்.

1927.

உங்கள் திரவியங்களை நீங்களே காப்பாற்றிக்கொள்ள

விரும்பினால்

கிரேட் ஈஸ்டர்ன் லைப் அஷூரன்ஸ்

கம்பெனியில்

நீங்கள் லைப் இன்ஸூரன்ஸை செய்யுங்கள்.

அப்படி செய்வதினால் உங்கள் பணத்துக்கு எப்போதும்

மோசம் வராது ஏன்?

பல்தாஜர் கேரண்டி.

தவிர இன்னம் அநேக கம்பெனிகளுக்கும் ஏஜண்டுகள்

நெருப்பு, மோட்டார்கார், திருட்டு, எல்லா

விதமான இன்ஷூரம்

ஒப்புக்கொள்ளக்கூடிய அநேக நல்ல கம்பெனிகளுக்கு

பூரா உத்திரவாதத்துடன் ஏஜண்டாயிருக்கும்

பல்தாஜர்

மூலமாய் இன்ஸூர் செய்பவர்களுக்கு எப்பொழுதும்

எவ்விதமான ஹானி ஏற்படாது.

BALTHAZAR'S, RANGOON

முகவுரை.

ஐயன்மீர்!

இன்ஷூரன்ஸ் என்னும் தலைப்பெயர் வாய்ந்த இப்புஸ்தகம், வெளிவருவதற்குக் காரணம், எனது நண்பர்களில் அநேகர் வெகுகாலமாய் இம்மாதிரி சத்துக்களடங்கிய பல விதமான இன்ஷூரன்ஸ்களின் சாராம்சங்களை தெளிவாய் அறிந்துகொள்ளும்பொருட்டு அவைகளை ஒரு புத்தகமூலம் எழுதும்படி என்னைக்கேட்டுக்கொண்டதுதான், நானும் என் சிற்றறிவுக்கெட்டியவரை என் அனுபவத்தைக்கொண்டு நேயர்களின் வேண்டுகோளுக்கிணங்கி இதை அச்சியற்றி வெளியேற்றுகின்றனன். இன்ஷூரன்ஸ் விஷயங்களில் தேர்ச்சி அடைந்தவர்களுக்கும் அனுபவமுடையவர்களுக்கும் இப்புத்தகம் யாதொரு பயனையும் தரா. ஆனாலும் அநேக மேதாவிகளால் தொன்றுதொட்டு நாளதுவரை நடந்துவரக்கூடிய பலவிதமான இன்ஷூரன்ஸ் புத்தகங்கள் பலபேர்களால் எழுதப்பட்டவைகளை எல்லாம் ஆராய்ந்து சோதித்து அவைகளின் முக்கிய சாராம்சங்களை தற்கால நிலமைக்கும், அனுபவத்திற்கும் ஒட்டியவாறு ஒவ்வொரு இன்ஷூரன்ஸ்களின் சட்டதிட்டங்களையும் அவைகளை செய்யக்கூடிய மாதிரியையும் எனது நண்பர்கள் எளிதில் அறிந்துகொள்ளக்கூடிய மெல்லிய தமிழ்நடையில் மிகவும் தெளிவாக எழுதப்பட்டிருக்கிறது. தவிர இதில் காணப்படும் பலவிதமான இன்ஷூரன்ஸ்களின் விபரங்களைத் தெரிந்துகொள்ள, நண்பர்கள் ஒவ்வொருவரும் பிரியமுடையவர்களாயிருக்கிறபடியால் அவைகளின் முக்கியமான விஷயங்களையும் அந்தந்த தலைப்பெ

யரின்கீழ் தெளிவாக விவரிக்கப்பட்டிருக்கிறது. மேற்படி விஷயங்களை அறிய விரும்பும் ஒவ்வொருவருக்கும் இப்புத்த கம் கூடியவரை உதவிசெய்யுமென்பதில் எவ்வித சந்தேகமு மில்லை. இம்மாதிரி சத்தான சங்கதிகளடங்கிய புத்தகம் இதுவரை வெளிவந்திரா. மேலும் எவ்வளவோ நண்பர்கள், விபரங்கள் தெரியாமல் பலபேர்கள் சொல்லும் வார்த்தை களை நம்பி இன்ஷுரம் செய்து, பின் நஷ்டஈடு கொடுபடா மல், வழக்குகள் தொடர ஏற்பட்டு அடிக்கடி கச்சேரிக்குப் போவதுமாயிருக்கிறார்கள். இதன்காரணம் என்னவென்றால் மேற்படி இன்ஷுரன்ஸ் விதிகள் இன்னதுதான் என்று அவ ர்கள் பூரணமாய் அறிந்துகொள்ளாததேயாகும். அப்படி அவர்கள் அறிந்து இன்ஷுரன்ஸ் செய்வதாயிருந்தால் அவர் கள் கோர்ட்டுக்குப் போகாமலே தங்களுக்குண்டான பாத் தியா பாத்தியதைகளை, இன்னவிதமாகத்தான் அடைகிறது. அதற்கு இன்னின்னவிதமாகத்தான் இன்ஷுரம் செய்ய வேண்டியதென்பதை தெறிந்து நன்றாக ஆலோசித்து முன் ஜாக்கிரதையாக வழக்குகளுக்கு இடமில்லாதபடி இன்ஷு ரன்ஸ் செய்துகொள்ள அருகராவார்கள். ஆகையால் நேயர் களே சிறியேன் எழுதிய நானுவித பல இன்ஷுரங்களின் குணங்களை கிரஹித்து குற்றங்களை நீக்கி என்னை ஆசீர்வதிப் பீர்களென நம்புகிறேன்.

இப்படிக்கு,

சி. ஆர். என் மணி.

உள்ளுரை.

நெம்பர்.		பக்கம்.
(1)	உயிர் இன்ஸூரன்ஸ் ...	1
	பொது நிபந்தனைகள், வைத்தியபரிசோதனை	2
	வைத்திய கட்டணம் ...	3
	பத்திரசெலாமணித் துவக்கம் ...	4
	வயதைக்குறித்த அத்தாட்சிகள் ...	5
	பத்திரசெலாமணி விவாதத்துக்கிடமில்லாமை	6
	யாத்திரைவாசம் தொழில் முதலியன	7
	கப்பல்படை ராணுவம் முதலியன ...	8
	ஸ்திரீகள் இன்ஸூரன்ஸ் சந்தா செலுத்தும்விதம்	9
	பிரிமியத்துகைக்கு வருமானவரி இல்லாமை	10
	தயாவிஷயமாய்க் கொடுக்கும் தவணை	11
	பத்திரபாத்தியதை இழந்துபோகாமை	12
	ரொக்கத்துகை வாங்கிக்கொண்டு பாலிஸியை ரத்து செய்தல்	17
	கடன் வாங்குதல் ...	18
	தவறிப்போன பாலிஸியை திரும்பவும் நிலை நிறுத்துவது	19
	உரிமைத்தொகை தீர்ப்பது ...	20
	பாலிஸி சுதந்தர மாற்றுதல்	24
	பாலிஸியை வேறுபாடு செய்வது ...	26
	இன்ஸூரன்ஸை அதிகப்படுத்துவது	28
	பிரப்போசல் விபரம்	29
(2)	பிராணிகளின் உயிர் இன்ஸூரன்ஸ்	36
	வகுப்புகள்	37
	முக்கிய குறிப்பு	39
	பாலிஸி அல்லது பீமாபத்திர நிபந்தனைகள்	40

உள்ளுரை தொடர்ச்சி.

நெம்பர்.			பக்கம்.
(3)	வண்டிகளின் இன்ஸுரன்ஸ் வகுப்புகள்		43
	கட்டணங்கள்	....	45
	பாலிஸி	....	,,
(4)	மோட்டார் இன்ஸுரன்ஸ் வகுப்புகள்		47
	பிரபோசல் விபரம்	....	48
(5)	காம்பரஹேன்சிவ் மோட்டார் இன்ஸுரன்ஸ்		50
	பாலிஸி அல்லது பீமாபத்திரம்	...	15
	நிபந்தனைகள்	...	53
	நஷ்ட ஈடு அடைவது	...	56
	திருட்டு	....	57
(6)	பேர்சனல் ஆக்ஸிடெண்ட் இன்ஸுரன்ஸ்		58
	வகுப்புகள்	...	59
	பிரபோசல் விபரம்	...	60
	பாலிஸி அல்லது பீமாபத்திரம்	...	63
	பாலிஸி நிபந்தனைகள்	...	66
(7)	வோர்க்மேன் காம்பன்சேஷன் அல்லது கூலியாட்கள் இன்ஸுரன்ஸ்		68
	வகுப்புகள்	...	69
	இன்ஸுர் செய்கிற விதம்	...	70
	நஷ்ட ஈடு அடைவது	...	71
(8)	கேரண்டி அல்லது ஜாமீன் இன்ஸுரன்ஸ்		72
	வகுப்புகள்	...	73
	பிரபோசல் விபரம்	...	74
	பாலிஸி அல்லது பீமாபத்திரம்	...	75

உள்ளுரை தொடர்ச்சி.

நெம்பர்.		பக்கம்.
(9)	பர்க்லரி அல்லது திருட்டு இன்ஸுரன்ஸ்	77
	வகுப்புகள் ...	78
	இதர விபரங்கள் ...	79
	கட்டணம் ...	80
	பாலிஸி அல்லது பீமாபத்திரம் ...	81
(10)	பிளேட்டு கிளாஸ் இன்ஸுரன்ஸ்	83
	பிரபோசல் விபரம் ...	84
	பாலிஸியின் நிபந்தனை கட்டணம் ...	85
(11)	மெரைன் அதாவது கப்பலில் ஏற்றும் சரக்குகளின் இன்ஸுரன்ஸ்	86
	வகுப்புகள் ...	87
	கட்டணம். பாலிஸி ...	88
(12)	பேக்கேஜ் இன்ஸுரன்ஸ் ...	89
(13)	பயர் அல்லது நெருப்பு இன்ஸுரன்ஸ்	90
	வகுப்புகள் ...	91
	விபரங்கள் ...	92
	கட்டணங்கள் (இரங்கூனில்) ...	93
	பர்மா கட்டணங்கள் ...	94
	ஜில்லாக்களில்	
	நஷ்ட ஈட்டின் உடன்படிக்கை ...	99

உள்ளுரை துடர்ச்சி.

நெம்டர். —— — பக்கம்.

(14) அரிசி குதாம்பு இன்ஷூரன்ஸ் 100

(15) மரக்குதாம்பின் இன்ஸூரன்ஸ் ... 108

(16) பருத்தியறைக்கும் மில் இன்ஷூரன்ஸ் 111

பர்மாவிலுள்ள எல்லா இன்ஸூரன்ஸ் கம்பெனிகளின் ஏஜண்டுகளின் பெயர்களும் 113

மெமோராண்டம் அல்லது ஞாபகக்குறிப்பு 120

THE NORTHERN ASSURANCE Co., Ltd.,

Incorporated In Great Britain.

AGENTS;

V. ZOLLIKOFER & Co.,

13, Merchant Street, Rangoon.

தி நார்தன் அஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

லண்டனில் ரிஜிஸ்டர்செய்தது.

எல்லாவிதமான இன்ஷூரன்ஸூம் செய்து கொடுக்கப்படும்.

ஏஜண்டு:- வி. ஜாலிகாபர் அண்டு கம்பெனி,

13-நெ. மெர்ச்செண்டு வீதி,

தபால்பெட்டி 144. இரங்கோன்.

LIFE INSURANCE.

உயிர் இன்ஷூரன்ஸ்.

நாம் முகவுரையில் பலவிதமான இன்ஷூரன்களைப் பற்றி விபரிப்பதாகச் சொன்னோம். முதல் முதல் உயிர், இன்ஷூரம் என்பது என்ன என்று தெரிவோம். இவ்விதமான இன்ஷூரன்ஸ் இன்னதென்று அறியாத சிலபேர்களிடம் சென்று அவர்களை உயிர் இன்ஷூரம் செய்கிறீர்களா? என்று கேட்டால், அதற்கு அவர்கள் உயிர் இன்ஷூரமா? அதென்ன, சாகிரதற்காக இன்ஷூர் செய்வது என்று பொருள்படாமல் யோசிக்கிறார்கள். ஆகையால் அதன் முக்கிய விபரங்களையும், காரணங்களையும், விதங்களையும்பற்றிக் கூறுவோம். இவ்வகை இன்ஷூரத்தின் கருத்து என்னவென்றால் ஒருமனிதன் தன் அந்தியகாலத்தில் தான் சம்பாதிக்க திறமையற்ற காலத்தில் ஊர்ஜிதமாய் சகாயத்தை அடைவது. அல்லது தன் குடும்பத்தவர்களுக்கு பாதுகாப்புக்காக சேர்த்துவைக்கும் திரவியம். அல்லது தனக்கு ஏதாயினும் திடீரென ஏற்படும் அகஸ்மாத்தான எதிர்பாராத கஷ்டங்களுக்கு உடனே உபயோகிக்கக்கூடிய திரவியம். இவ்விதமான இன்ஷூரத்தை பல கம்பெனியார் பலமாதிரியாக நடத்திவருகிறார்கள். அதன் முக்கியமான விபரங்களையும், கட்டவேண்டிய கட்டணங்களையும், சகலவிதமான விதிகளையும் பிரபோசல் பாரத்தையும் டிரான்ஸ்பர்செய்வது, நிலைநிறுத்துவது, ரத்துசெய்து, சொற்பகாலத்துக்குள் நிலை

நிறுத்துவது, சொற்பகாலத்தில் ரத்துசெய்வது, தொகையைத்திரும்ப அடைவது, முதலிய எல்லா விபரங்களையும் கம்பெனிகளின் பொது நிபந்தனைகளையும் இதனடியிற் கூறுவோம்.

உயிர் இன்ஷூரம்செய்யும் கம்பெனியின் பொது நிபந்தனைகள்.

ஆரம்பச் செலவுகள்.

1. முதன் முதல் பாலிஸி பத்திரங்களைக் கம்பெனியின் புஸ்தகங்களில் தாக்கல் செய்துகொள்வதின்பொருட்டு ஏற்படும் ஸ்டாம்பு வரி, வைத்திய கட்டணம் முதலிய எல்லா விதமான ஆரம்பச் செலவுகளையும் கம்பெனியாரே ஒத்துக்கொள்ளுகிறார்கள். ஆனால், பின் சொல்லப்படும் சில மிகவும் அரிய சம்பவங்களில் மாத்திரமே, அஷ்யூர் செய்கிறவர் வைத்திய பரிசோதனைச் செலவை ஏற்றுக்கொள்ளவேண்டி வரும்.

வைத்திய பரிசோதனை.

2. அஷ்யூர் செய்யப்போகிறவர் கம்பெனியாரால் நியமிக்கப்பட்ட வைத்தியர் ஒருவரால் பரிசோதனை செய்யப்பட்ட பிறகே, அவருடைய அஷ்யூரென்ஸைக் குறித்த ஆலோசனைப் பத்திரம் கவனிக்கப்படும். அநேகமாய் எல்லா

முக்கிய பட்டணங்களிலும் அந்தந்த ஜில்லாவின் சிவில் ஸர்ஜன் அல்லது டிஸ்டிரிக்ட் மெடிகல் ஆபீஸர் முதலிய வைத்திய பரிசோதகர்களை நியமித்திருக்கிறார்கள். ஆயினும் அஷ்யூர் செய்பவர்கள் தங்கள் ஆலோசனைப் பத்திரங்களை சரிவர பூர்த்திசெய்து கம்பெனியின் தலைமை ஆபீஸுக்காவது அல்லது அருகாமையிலுள்ள கிளை ஆபீஸ் அல்லது ஏஜென்ஸிக்காவது அனுப்பவேண்டியது. உடனே வைத்திய பரிசோதனைக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படும்.

வைத்திய கட்டணம்.

3. வைத்திய பரிசோதனையைக் குறித்த யாதாஸ்தானது முற்றிலும் பூர்த்தியாகி வந்தவுடன், பரிசோதகருக்குக் கொடுக்கவேண்டிய கட்டணத்தைக் கம்பெனியாரே நேரிட அனுப்பிவிடுவார்கள். அஷ்யூர் செய்கிறவராவது, அல்லது ஏஜெண்டாவது யாதொருமுகாந்தரத்தைக்கொண்டும் வைத்தியருக்குக் கட்டணம் கொடுக்கவேண்டியதில்லை. ஆனால், சாதாரணமாய் சுக ஜீவியந்தர்களுக்கேற்பட்டிருக்கும் பிரமாணத்தின்படி ஆலோசனைப் பத்திரமானது அங்கீகரிக்கப் பட்டிருந்தும், தாங்கள் ஒப்புக்கொண்டபடி முதல் பிரிமியம் செலுத்தத் தவறினாலும், அல்லது முதல் பிரிமியமாவது முதலில் கட்டும் பிரிமியங்களின் தொகையாவது ரூ. 10-க்குக் குறைவாக விருந்தாலும், அஷ்யூர் செய்கிறவர்களே தங்கள் பொருட்டு ஏற்பட்ட பரிசோதனையின் கட்டணத்தை ஏற்றுக்கொள்ள வேண்டிவரும்.

LIFE INSURANCE.

4. ஆனல், அஷ்யூர் செய்ய உத்தேசித்தவருடைய தேகஸ்திதியாவது அல்லது குடும்பத்தின் சுகாதார சரித்திரமாவது திருப்திகரமாயில்லாத காரணத்தினல், முதலில் கொடுத்த ஆலோசனைப் பத்திரம் நிராகரிக்கப்பட்டிருந்தால் மறுபடியும் வைத்திய பரிசோதனை செய்து அவர் அஷ்யூரென்ஸுக்குத் தகுதியாயிருக்கிருராவென்று ஆராய்ச்சி செய்வதற்குரிய வைத்திய கட்டணத்தை அஷ்யூர் செய்கிறவரே முன் பணமாகக் கட்டவேண்டும்.

பத்திர செலாமணித் துவக்கம்.

5. அஷ்யூரென்ஸ் செய்வதற்குரிய ஆலோசனைப் பத்திரமானது டைரக்டர்களால் அங்கீகரிக்கப்பட்ட தேதியோ, அல்லது முதல்பிரிமியம் பூராவும் செலுத்தி அசல் ரசீது கொடுக்கப்பட்ட தேதியோ. இவைகளில் எது பிந்தியோ அந்தத் தேதி முதல் பாலிஸி பத்திரம் அமுலுக்குக்கொண்டு வரப்பட்டு பூரா செலாமணியுடன் துவக்கம் செய்யப்படும். அந்தத் தேதியிலிருந்தே இரண்டாவது தடவை கட்ட வேண்டிய பிரிமியத்தின் வாயிதாதேதியும் கணக்கிடப்படும். ஆனல், சென்ற குறைந்த வயதுப்படிக்கு பிரிமியம் நிர்ணயிக்கப்படும் அனுகூலத்தையடைய விரும்பினல், மூன்று மாதத்திற்கு மேல்படாமல் பின்னலே தள்ளி ஆரம்பிப்பார்கள்.

வயதைக் குறித்த அத்தாட்சிகள்.

6. அஷ்யூர் செய்கிறவர் தம் ஆலோசனைப் பத்திரத்தில் சொல்லியிருக்கும் வயதை ருசுப்படுத்துகிற வரையில் பாலிஸி பத்திரம் கொடுக்கப்படாதென கம்பெனியார் யாதொரு விதமான ஆக்ஷேபணையும் செய்வதில்லை. ஆனாலும், பாலிஸியின்மேல் உரிமையுண்டாகுங்காலத்தில் வயது ருபிக்கப்படவேண்டியது அவசியமாகையால், அதற்கு முன்பாகவே வயதைக் குறித்த அத்தாட்சியை ஆலோசனைப் பத்திரத்தோடாவது, அல்லது அதற்குப்பிற்பாடாவது, கூடிய சீக்கிரத்தில் அனுப்புவது சிலாக்கியம்.

7. சாதாரணமாய், கீழ்க்கண்டிருக்கும் அத்தாட்சிகள் அங்கீகாரம் செய்ய உரியவைகள்.

(1) ஜனன காலத்தைப் பற்றிப் பதிவு செய்திருக்கும் முனிஸிபாலிடியின் ஜனன யாதாஸ்திலிருந்தாவது, அல்லது ஜனன காலத்தில் தயாரிக்கப்பட்ட வேறு விதமான தஸ்தாவேஜியிலிருந்தாவது எடுத்த உறுதியான ஜாதகக் குறிப்பாவது.

(2) கிருஸ்தவர்களாயிருந்தால் ஞானஸ்நானம் பெற்ற பத்திரிகையில் வயதாவது, ஜனன தேதியாவது கண்டிருந்தால், அந்த அசல் பத்திரிகையாவது.

(3) ஜனனகாலத்தில் தயாரிக்கப்பட்ட ஜாதகத்தின் அசலும், சுதேச பஷையில் வரையப்பட்ட அதன் உறுதியான நகலும்.

(4) பள்ளிக்கூடம் அல்லது கல்லூரியில் ஏற்படுத்திய தஸ்தாவேஜியின் வயதாவது, ஜனன தேதியாவது கண்டிருந்தால், அதிலிருந்து எடுத்த உறுதியான குறிப்பும்.

(5) கிருஸ்துவர்கள் விஷயத்தில் ஜனன பத்திரிகையாவது, ஞானஸ்நானம் பெற்ற பத்திரிகையாவது, அல்லது குடும்பத்திற்குரிய வேத புஸ்தகத்திலிருந்து எடுக்கப்பட்ட உறுதியான குறிப்பாவது மட்டுமே அங்கீகரிக்கப்படும்.

பத்திர செலாமணி விவாதத்துக்கிடமில்லாமை.

8. ஓர் பாலிஸி பத்திரமானது ஆரம்பித்து இரண்டு வருஷங்கள் ஒழுங்காக நடந்தேறிய பிற்பாடு, அஸ்யூர் செய்யப்பட்டவரின் வயதும் அதற்குள் ரூபிக்கப்பட்டிருக்கும பட்சத்தில், மோசடியாக ஏதாவது ஏற்பட்டிருந்தாலொழிய மற்றப்படிக்கு பத்திர செலாமணி விவாதத்துக்கிடமில்லாதது. ஆனால், பாலிஸி தொடங்கி ஒரு வருஷத்திற்குள் அஷ்யூர் செய்யப்பட்டவருக்குத் தற்கொலை சம்பவித்தால் பொதுவாய் பாலிஸியானது செலாமணியில்லாமல் போய்விடும். எனினும், அந்தப் பாலிஸியை நம்பி அடமானமாக வாங்கினவர்கள் சம்பந்தப்பட்ட மட்டில், அவர்கள் மேற்படி சம்பந்

த்தைக் குறைந்தது ஒரு மாதத்திற்கு முன்பாகவே விளம்பரம்செய்து கம்பெனியாருக்குத் தெரியப்படுத்தியிருந்தால், அப்படி பாலிஸியானது ரத்து செய்யப்பட்டதாகக் கொள்ளப்படமாட்டாது.

யாத்திரை, வாஸம், தொழில், இவைகளைப்பற்றி கட்டுப்பாடு இல்லாமை.

9. உயிர் இன்ஷூர பாலிஸி பெற்றவர்களுக்கு பிரயாணம் செய்வதைப்பற்றியாவது, குடியிருப்பதைப் பற்றியாவது, அவர்கள் அமர்ந்திருக்கும் தொழில்களைப்பற்றியாவது, யாதொரு நிர்ப்பந்தமுமில்லை. ஆனால் அஷ்யூர் செய்யப்போகிறவர் பிற்பாடு ஏதாவது ஆபத்து விளைவிக்கக்கூடிய தொழில்களில் அமர்வதாக உத்தேசித்திருப்பதாகவாவது, அல்லது இவ்வுலகத்தின் கண்ணுள்ள குறைந்த ஆரோக்கியமுள்ள எப்பாகத்துக்காவது சென்று வாசம் செய்யப் போவதாகவாவது, ஆலோசனைப் பத்திரம் கொடுக்கும்போதே தெரிவிப்பார்களானால், அந்த சந்தர்ப்பங்களில் ஜாஸ்தியான பிரிமியம் கட்டவேண்டியிருக்கும். மேலும் அஷ்யூர் செய்யப்போகிறவர் ஆலோசனைப் பத்திரம் கொடுக்கும் தேதியில் ஏதாவது ஆபத்து விளைவிக்கக்கூடிய தொழில்களில் அமர்ந்திருந்தாலும், அவர்பொருட்டு கம்பெனியாருக்கு ஏற்படக்கூடிய நஷ்டத்தைக் கவறுமாறு, சாதாரண பிரமாணத்திற்கு மேலே கொஞ்சம் அதிகமான சந்தா செலுத்தவேண்டி வரும். ஆனால், அந்தத் தொழிலை விட்டுவிட்டவுடன் இந்த அதிகமான பிரிமியமும் எடுத்து விடப்படும்

கப்பல் படை, ராணுவம். இவைகளைச்சேர்ந்த உத்தியோகஸ்தர்கள்.

10. மேற்கூறிய உத்தியோகஸ்தர்கள், சண்டை விஷயங்களில் சம்பந்தப்படாமலிருக்குங் காலத்தில், மற்றவர்கள் கட்டுவதுபோலவே சாதாரணமாக ஏற்பட்டபிரிமியங் கட்டிவர இஷ்டமானால், அப்படியே செய்யலாம், அல்லது அஷ்யூரென்ஸ் தொகை ரூ. ஆயிரத்துக்கு ரூ 3 வீதம் அதிகமான பிரிமியம் தாங்கள் உத்தியோகத்திலிருந்து உபகாரச்சம்பளம் வாங்கிக்கொண்டு நீங்குகிற வரையில் கட்டச்சம்மதித்தால், அவர்கள் சண்டைக்குப் போனாலுங்கூட, கம்பெனியாருக்குத் தெரிவிக்கவேண்டிய அவசியமேற்படாது. ஆனால் சாதாரணமான விகிதப்படி பிரிமியம் கட்டிவருகிறவர்கள் அமர்களத்துக்குச் செல்ல நேருமானால், அதற்கு முன்பாகவே அந்த விஷயத்தைக் கம்பெனியாருக்கு அறிக்கைசெய்து, அந்தந்த சந்தர்ப்பங்களுக்குத் தக்கவாறு நிர்ணயிக்கப்படும் அதிகமான பிரிமியம் கட்டவேண்டிவரும்.

ஸ்திரீகள் அஷ்யூரென்ஸ்.

11. கைம்பெண்கள், கன்னியா ஸ்திரீகள், முதலியோர் அஷ்யூர் செய்ய விரும்பும் பக்ஷத்தில், அப்படிப்பட்டவர்கள் உபாத்தினிகள், வைத்தியம் செய்பவர்கள், வியாபார விஷயங்களைக்கைக்கொண்டவர்கள் முதலியவர்களைப்போல்,

தங்களையும், தங்களை ஆதரித்திருப்பவர்களையும் தங்களுடைய வருமானத்திலிருந்தே சம்ரக்ஷணை செய்துகொள்ளும்படியான சக்தியுள்ளவர்களாயிருப்பின் கம்பெனியார் அவர்கள் அஷ்யூரென்ஸைக் குறித்த ஆலோசனைப்பத்திரத்தை கவனிக்கச் சித்தமாயிருக்கிறார்கள் இவ்விதம் அஷ்யூர் செய்யப்பட்ட ஸ்திரீகள், தங்களுக்கு 50 வயது முடிகிற வரையில் அஷ்யூரென்ஸ் தொகை ரூபாய் ஆயிரத்துக்கு ரூ. 5 வீதம் அதிகமான பிரிமியம் கட்டவேண்டும்.

சந்தா செலுத்தும் விதங்கள்.

12. பிரிமியத்தை வருஷத்தில் ஒரே தடவையாகவாவது, ஆறு மாதத்திற்கு ஒரு விசையாகவாவது, மூன்று மாதத்திற்கு ஒரு தடவையாகவாவது, அல்லது மாதாந்தரமாகவாவது கட்டலாம். ஆறு மாதத்திற்கு ஒரு விசையாகவோ அல்லது மூன்று மாதத்திற்கு ஒரு தடவையோ, சந்தா செலுத்தப்பட்டால், அதன் பொருட்டு கம்பெனியார் யாதொரு விதமான கட்டணமும் கேட்பதில்லை ஆனால் மாதாந்தரமாக பிரிமியத்தைக் கட்டிவந்தால், அதனாலேற்படும் வட்டி நஷ்டத்தையும், மாதாமாதம் வசூலிப்பதினால் உண்டாகும் அதிகமான செலவையும் கவனிக்கும்பொருட்டு, வருஷாந்தர பிரிமியத்தில் நூற்றுக்கு ஐந்து விகிதம் ஜாஸ்தியான கட்டணம் செலுத்தவேண்டும். ஆகையால் வீணில் அதிகமான தொகை செலுத்தாமலிருக்கும் பொருட்டு, பிரிமியத்தை

வருஷத்தில் நாலுதடவைக்கு மேற்படாமல் செலுத்த ஏற்பாடுசெய்வது அஷ்யூர் செய்யப்போகிறவர்கள் அடையும் பிரயோஜனமாகும்.

13. பிரிமியங்கள் வருஷத்தில் ஒருவிசைக்கு மேலாகக்கட்டப்படும் பக்ஷத்தில், பாலிஸி வருஷத்தினிடையில் அஷ்யூர் செய்யப்பட்டவருக்கு மரணம் சம்பவிக்குங்கால் நடந்து புருகின்ற வருஷத்தின் பிரிமியத்தில் செலுத்தியது போக பாக்கியிருக்கும் தொகையானது உரிமை தீர்க்குங் காலத்தில், அஷ்யூர் செய்யப்பட்ட தொகையிலிருந்து கழித்துக்கொள்ளப்படும்.

பிரிமியத் தொகைக்கு வருமானவரி இல்லாமை.

14. 1922-ம் வருஷத்திய இந்திய வருமானவரி சட்டத்தின் பிரகாரம், ஒருவர் தம் மேலேயே அஷ்யூரென்ஸ் செய்திருந்தால், அவருக்கு வரி போடத்தக்க அவருடைய வருஷாந்தர வருமானத்தில் ஆறிலொருபங்கு வரையில் அவரால் அந்த வருஷத்தில் செலுத்தப்பட்ட பிரிமியத்திற்கு யேற்படும் வரியானது ராஜாங்கத்தாரால் தள்ளிக்கொடுக்கப்படும். இது மிகவும் முக்கியமான சாதனம். ஏராளமான வருமானமுள்ளவர்களுக்கு, லைப் அஷ்யூரென்ஸுக்குத் தேவையான செலவுகள் இதனுல் மிகவும் குறைக்கப்படுகின்றன. ஆகையினுல், இவ்விஷயத்தை தனவான்கள் ஞாபகத்தில் வைக்கவேண்டியது.

தயா விஷயமாய்க் கொடுக்கும் தவணை.

15. வருஷத்திற்கு ஒரே தடவையாகவாவது அல்லது இரண்டு விசையாகவாவது செலுத்தும் சந்தாக்களுக்கு வாயிதா தினத்திற்குமேல் ஆங்கில் பஞ்சாங்கப்படிக்கு ஒரு மாதமும் (ஆனால் ஒருபோதும் 30 நாட்களுக்குக் குறையாமலும்), வருஷத்தில் நான்கு விசையாகவாவது அல்லது மாதாந்தரமாகவாவது செலுத்தும் சந்தாக்களுக்கு வாயிதா தினத்திற்கு மேல் 15 நாட்களும், தயா விஷயமாய் தவணை கொடுக்கப்படும். ஆனால் மேற்சொல்லிய தயா விஷயமாய்க் கொடுத்த தவணையின் கடைசி நாளானது ஞாயிறுக்கிழமையானாலும், அல்லது பொதுவான விடுமுறை நாட்களில் சம்பவித்தாலும், பாலிஸி தவறாமலிருக்கும் பொருட்டு அதற்கு முந்திய தினத்திலேயே பிரிமியம் கட்டப்படவேண்டும் அனுப்பிய பணம் வந்து சேர்வதில் தபாலாபீஸ் மூலமாகவாவது அல்லது இதர காரணங்களாலாவது யேற்படும் தாமதத்திற்கு கம்பெனியார் ஜவாப்தாரியாகமாட்டார்கள். ஆகையால், வாயிதா தினத்திலேயே பிரிமியங்களைச் செலுத்துவது பாலிஸிதாரர்களுக்கு நலம்.

16 பாலிஸிதாரர்கள் தங்கள் பாலிஸியினாலேற்படும் நன்மையை இழக்காமலிருக்கும்பொருட்டு, கட்டவேண்டிய பிரிமியங்களின் வாயிதா தினங்களைக் குறித்து முன்னாடியே நோட்டீஸ் மூலமாய் அறிக்கை செய்யப்படும். ஆனால் இவ்

விதமான நோட்டீஸ் அனுப்பவேண்டுமென்று கம்பெனியின் மேல் கட்டாயமொன்றுமில்லை. ஆனதுபற்றி, நோட்டீஸ் கிடைக்காததால் பணங் கட்டவில்லையென்ற காரணம் ஒப்புக்கொள்ளமாட்டார்கள்.

பத்திர பாத்தியதை இழந்து போகாமை.

17 எவ்வித கம்பெனியாரால் ஏற்படுத்தப் பட்டிருக்கும், "பத்திர பாத்தியதை இழந்து போகாமை" என்னும் முறையானது, முற்றிலும் பாலிஸிதாரர்களின் அனுகூலத்தையே அனுசரித்ததாயிருப்பதாக யாவராலும் மதிக்கப் பட்டு வருகிறது இம்முறைப் பிரகாரம், பாலிஸி பத்திரத்தில் கண்டிருக்கும் விதிகளின்படி அதுவரையில் செலுத்தப் பட்ட பிரிமியங்களுக்குத் தகுந்ததும், இனிமேல் யாதொரு சந்தாவும் செலுத்தவேண்டிய நிர்ப்பந்தமில்லாததுமான ஓர் குறைந்த தொகையுள்ள பாலிஸி (பெய்டப் பாலிஸி) ஏற்பட்டபிறகு, அதற்கு முன்னால் பாலிஸியைக் கம்பெனியாரிடம் அடமானமாகவைத்து வாங்கியிருக்கும் கடன் தொகையின் வட்டியானது கட்டப்படாமல் நிறுத்திவிடப்பட்ட காரணந்தவிர, வேறு யாதொரு முகாந்தரங்களைக் கொண்டும், இவ்விதமான ஏற்பாட்டுக்கு அழிவு கிடையாது. ஒரு பாலிஸியின் பொருட்டு கட்டவேண்டிய பிரிமியமானது தவணைக் காலத்திற்குள் செலுத்தப்படாவிட்டால், மேலே கட்டவேண்டிய சந்தாக்களின் வாயிதாதினங்கள்தோறும்

கம்பெனியார் அதற்குவேண்டிய தொகையைக் கடனாக பாவித்து தாமாகவே கட்டி வருகிறார்கள். இப்படிக் கட்டப்பட்ட பிரிமியங்களின் தொகையும், அதைச் சார்ந்த வட்டியும் அந்தத் தேதியில் பாலிஸியின் ரொக்க மதிப்புக்கு (ஸரெண்டர் வால்யூ) உள்பட்டிருக்கும் வரையில்தான இந்த கடன் கொடுக்கும் ஏற்பாடு நடைபெறும். ஆனால் தாங்கள் கடனாக பாவித்துக் கட்டியிருக்கும் பிரிமியங்களின் அசலும் வட்டியும் பத்திரத்தின் அன்றைய ரொக்க மதிப்புக்கு மேலே அதிகரித்திருக்கும் பக்ஷத்தில், அந்தப் பாலிஸியைக் கம்பெனியார் தங்கள் பணத்திற்கு ஈடுசெய்து கொண்டுவிடுவார்கள். இவ்விதமாய் பாலிஸியானது முற்றிலும் இழக்கப்படுவதால், பாலிஸிதாரர்களுக்காவது, அல்லது அவர்களுக்கு மரணம் சம்பவிக்குங்கால் அவர்களுடைய வார்சுதாரர்களுக்காவது, கொடுக்கும்படியான உரிமைத் தொகையாதொன்றுமில்லாமல் போய்விடுகின்றது.

18. உயிர் இன்ஸூரன்ஸ் பாலிஸிகளின்பேரில் மூன்று வருஷங்களுக்குக்குறையாமல் சரிவர சந்தா செலுத்தப்பட்டிருந்தால், அதற்குமேல், குறித்த வருஷம்வரையில் பிரிமியம் கட்டப்படாமல், நடுவில் நிறுத்திவிடப்பட்டாலும் ஷை பாலிஸிகள் முற்றிலும் இழக்கப்படா. ஏனெனில், அதுவரையில் கட்டப்பட்ட பிரிமியங்களின் தொகையானது மொத்தம் கட்டுவதாக முதலில் ஒப்புக்கொண்ட தொகையில் எவ்வளவு பாகமிருக்கிறதோ அவ்வளவு பாகம் முதலில் அஷ்யூர் செய்யப்பட்ட தொகையில் கணக்குப்பார்த்து,

LIFE INSURANCE.

அதற்கொத்த தொகையானது பாலிஸியின்பேரில் உரிமை யேற்படும்போது கொடுக்கப்படுமென்ற உத்தரவாதம் பெற்றதும், இனிமேல் யாதொரு சந்தாவுங் கட்டவேண்டிய நிர்ப்பந்தமில்லாததுமான குறைந்த பாலிஸியொன்று தானுகவே ஏற்பட்டுவிடுகிறது. ஆனுல் அப்படி உத்தரவாதம் செய்யப்படும் தொகை ரூ. 250-க்குக் குறையாமலிருக்க வேண்டும். கம்பெனியின் லாபங்களில் பங்குக் கருகமான பாலிஸிகள் விஷயத்தில், பிரிமியம் நிறுத்தப்பட்ட தேதி வரையில் நிர்த்தாரிக்கப்பட்ட லாபங்கள் அந்தத் தேதியில் பாலிஸியோடு சேர்ந்திருக்கும் பக்ஷத்தில், அவைகள்யாவும் இவ்விதமேற்பட்ட குறைந்த பாலிஸியோடு சேர்த்துக் கொள்ளப்பட்டு உரிமையுண்டாகும்போது அத்துடன் கொடுக்கப்படும், ஆனுல் அந்தத் தேதிக்குப் பிற்பாடு கிடைக்கும் கம்பெனியின் லாபங்களில் யாதொரு பங்குங்கிடைக்கமாட்டாது.

19. மொத்தங்கட்டவேண்டிய பிரிமியங்களின் தொகை இவ்வளவென்று நிர்ணயிக்கப்படாமல், ஒருவர் ஆயுள் பரியந்தம் கட்டவேண்டிய சாதாரணமான ஜீவியகாலப் பாலிஸிகளுக்கு இவ்விதமான, "பத்திரபாத்தியதை இழந்துபோகாமை," என்ற முறையானது பொருந்துவதில்லை எனினும், குறைந்தது மூன்று வருஷங்கள் சந்தா செலுத்திய பிள்பாடு, மேலேகட்ட இயலாமல், நிறுத்திவிடும் பக்ஷத்தில், முதலில் கட்டத்தவறிய வாயிதா தேதிமுதல் 12 மாதத்திற்குள் பாலிஸிதார்களுடைய அபிப்பிராயத்தை எழுத்

மூலமாய்க் கம்பெனியாருக்குத் தெரிவித்து, பாலிஸியின் பேரில் இந்த விவரங்களை வரையும்பொருட்டு பாலிஸி பத்திரத்தையும் அனுப்பிவைத்தால், அந்தந்தப் பாலிஸியின் பொருட்டு அவன் பிரிமியங்களிலிருந்து பிரத்தியேகமாய் வைக்கப்பட்ட இருப்பின் மதிப்பை (ரிஸர்வ் வால்யூ) ஆதாரமாகக்கொண்டு கணக்கிட்டு, இனிமேல் யாதொரு சந்தாவும் செலுத்தவேண்டிய நிர்ப்பந்தமில்லாத குறைந்த தொகையுள்ள பாலிஸியொன்று கொடுக்கப்படும். ஆனால் அப்படிக் குறைந்த தொகைக்குக் கொடுக்கப்படும் பாலிஸியானது ரூ. 250-க்குக் குறையாததாயிருக்கவேண்டும். அதுவரையில் அந்தப் பாலிஸிக்குரியலாபங்கள், அந்தத் தேதியில் பாலிஸியுடன் கூடியிருந்தால் அவைகளும் இந்தக் குறைந்த பாலிஸியோடு சேர்த்துக்கொள்ளப்படும். ஆனால் அந்தத் தேதிக்குப்பிற்பாடு கிடைக்கும் லாபங்களில் யாதொருவிதமான உரிமையுமில்லை.

20. குறைந்தது மூன்று வருஷங்கள் சந்தா செலுத்தப்பட்ட பிற்பாடு, மேலே கட்டவேண்டிய பிரிமியங்கள் செலுத்தப்படாமல் பாலிஸியானது தவறியிருக்குந் தருவாயில், முதலில் கட்டத்தவறிய பிரிமியத்தின் வாயிதா தினத்திலிருந்து ஆறு மாதத்திற்குள் அஷ்யூர் செய்யப்பட்டவருக்கு மரணம் சம்பவித்தால், அதுவரையில் கட்டத்தவறிய பிரிமியங்களையும், தவறிப்போன பாலிஸியைத் திரும்பவும் நிலைநிறுத்துவதற்குரிய, பின்னால் சொல்லப்படும், கட்டணத்தையும் கழித்துக்கொண்டு அஷ்யூரென்ஸ் தொகை பாக்கி பூரா

LIFE INSURANCE.

வும் வார்சுதார்களுக்குக் கொடுக்கப்படும். ஆனால், முதல் ஆறுமாதத்திற்குள் அஷ்யூர் செய்யப்பட்டவருக்கு மரணம் நேரா விட்டாலோ, இத்தகை விசேஷ அனுகூலமின்றி பிரிமியம் தவணைக்குள் கட்டப்படாமல் நிறுத்தப்பட்டிருந்தால் பாலிஸியானது எந்த ஸ்திதியிலிருக்குமோ அதே ஸ்திதியில் தானிருக்கும். தவறிப்போன பாலிஸியை மேலே ஆறுமாத காலம் அஷ்யூரென்ஸ் தொகை பூராவுக்கும் செலாமணியில் வைத்திருந்ததின் பொருட்டு கம்பெனியார் யாதொருவித மான கட்டணமும் வசூலிப்பதில்லை பிரிமியம் நிறுத்தப்பட்டதால், பத்திர பாத்தியதை இழந்துபோகாமை யென்ற முறையின் பிரகாரமேற்பட்டிருக்கும் குறைந்த பாலிஸியிலிருந்தாவது, அல்லது தவறிப்போன பாலிஸியின் தற்கால ரொக்க மதிப்பிலிருந்தாவது, யாதொரு தொகையும் கழித்துக்கொள்வதுமில்லை.

21. இஃது ஓர் மிகவும் முக்கியமான சாதகம் ஏதாவது அசௌகர்யமேற்பட்டு தவணைக்குள் சந்தா செலுத்தாததால், பாலிஸியானது திடீரென்று இழக்கப்படாமல், மேன்மேலும் நடந்தேறி வருவதற்குவேண்டிய ஏற்பாடுகள் செய்வதற்கு இதனால் சாவகாசம் வாய்க்கின்றது. சாதாரணமாய் சில கம்பெனிகள், இவ்விதம் பாலிஸியை அதிக நாள் செலாமணியில் வைத்திருந்ததின்பொருட்டு, ஏதாவது கட்டணம் வசூலிக்காமல், இத்தகைய சாதகம் புரிவதற்கு சம்மதப்படுவதில்லை.

ரொக்கத்தொகை வாங்கிக்கொண்டு பாலிஸியை ரத்து செய்தல்

22. ஓர் பாலிஸியின்பேரில் குறைந்தது மூன்று வருஷங்கள் சந்தா செலுத்திய பிறகாவது, அல்லது துவக்கத்தில் பிரிமியங் கட்டிவருவதாக ஒப்புக்கொண்டவருஷங்களில் பத்தில் ஒன்று விதம் கட்டிய பிறகாவது, கையில் ரொக்கமாகப் பணம்பெற்றுக்கொண்டு பாலிஸியை முற்றிலும் ரத்து செய்துவிட பாலிஸிதாரர் அபிப்பிராயப்படும்பக்ஷத்தில், கம்பெனியார் பாலிஸியின் வகுப்பையும், அது எவ்வளவு வருஷம் அமுலிலிருந்து வந்தது என்பதையும் கணக்குப்பார்த்து, அதற்குத் தக்கவாறு தாராளமான ரொக்கத் தொகையைக் கொடுத்து பத்திர ஒப்பந்தத்தை அடியோடு ரத்துசெய்து விடுவார்கள் இவ்விதமாக ரொக்கம்பெற இஷ்டமுள்ளவர்கள் பாலிஸியானது அஷ்யூர்செய்த முழுத்தொகைக்கும் செலாமணியிலிருக்கும் போதாவது, அல்லது சந்தா செலுத்தாததால் பாலிஸியானது தவறியிருக்குங்கால், "பத்திர பாத்தியதை இழந்துபோகாமை" என்ற முறையின் பிரகாரம், ஓர் குறைந்த தொகையுள்ள பாலிஸியாக மாற்றப்படாமலிருக்கும் பக்ஷத்தில், முதலில் கட்டத்தவறிய பிரிமியத்தின் வாயிதா தேதியிலிருந்து 5 வருஷத்திற்குள்ளாவது, கம்பெனியாருக்கு எழுத்துமூலமாய் மனுச்செய்து கொள்ள வேண்டும்.

LIFE INSURANCE.

கடன் வாங்குதல்.

23. பாலிஸிகளை அமுலில் வைத்திருப்பதற்கு வேண்டிய சாதம் புரியும்பொருட்டும், மற்றும் பாலிஸிதாரர்களின் சௌகர்யத்தின் பொருட்டும் யாதொரு கலனுமில்லாத பாலிஸிகளை அடமானமாகக்கொண்டு, அவைகளின் தற்கால ரொக்கமதிப்புக்குட்பட்ட தொகையளவு கடன்வாங்கிக்கொள்ளலாம். கடன் தொகை ரூ. 500க்கு குறைவுபட்டால் வருஷம் ஒன்றுக்கு நூற்றுக்கு 9 விழுக்காடும் ரூ. 500-க்கும் அதற்கு மேற்கொண்ட தொகைக்கும் நூற்றுக்கு 6 வீதமும், வட்டி பிரதி ஆறுமாதத்திற்கொருதரம் செலுத்தி வர வேண்டும் இவ்விதமான வட்டி பல கம்பெனிகளில் பலமாதிரி உண்டு. ஆறுமாதத் தவணைக்குக் குறைந்தாவது, அல்லது காணுமற்போன பாலிஸிகளை அடமானமாகக் கொண்டாவது, கடன் கொடுக்கப்பட மாட்டாது.

24. ஆறு மாதத்திற்கொருமுறை பிரிமியத்துடன் வட்டியையும் தவறுமல் செலுத்திவரவேண்டும். ஏனெனில் பாலிஸியானது அமுலில் வழங்கிவருவதற்கு, கெடுவு நாட்களுள் பிரிமியங் கட்டிவரவேண்டியது எவ்வளவு அவசியமானதோ, அதேமாதிரி வட்டிசெலுத்தவேண்டியதும், அத்யாவசியமாகும். வட்டியானது கெடுவு நாட்களுள் செலுத்தப்படாவிட்டால், ஆறுமாதத்திற்கேற்பட்ட வட்டிக்குமேல் வட்டி கூட்டப்படும். ஆனல், கெடுவுக்குமேல் ஆறுமாதமா

கியும், செலுத்தப்படவேண்டிய வட்டித்தொகை பாக்கி கிடந்துவிட்டாலோ, அடமானப்பத்திரப்பிரகாரம் பாலிஸிதாரர் அப்பாலிஸியை முற்றிலும் கம்பெனியாருக்கே இழந்துவிடக்கடவர்; எனினும், கடன் பத்திரத்தில் கண்டிருக்குமேதேனும் வசதிகளுக்கு மாத்திரம் அருகராயிருப்பார்.

தவறிப்போன பாலிஸிகளைத் திரும்பவும் நிலைநிறுத்தல்.

25. குறித்த தவணைக்குள் பிரிமியம் செலுத்தப்படாததால் நிலைதவறிய பாலிஸிகளை பாலிஸிதாரரின் ஜீவியகாலத்தில் எந்த சமயத்திலும் அஷ்யூர்செய்த முழுத்தொகைக்கும் செலாமணியிலிருக்குமாறு திரும்பவும் நிலைநிறுத்தலாம். அப்படிச்செய்பவர் தங்களுடைய செலவிலேயே கம்பெனியாரால் நியமிக்கப்பட்டிருக்கும் வைத்தியரொருவரால் பரிசோதனை செய்யப்பட்டு, அவருடைய பூர்த்தியான வைத்திய யாதாஸ்து அனுப்பிவைக்கவேண்டும். அத்துடன், கட்டாமல் பாக்கிவிழுந்திருக்கும் பிரிமியங்களையும், தவறிப்போன ஒவ்வொரு பிரிமியத்திற்கும் அதனதன் வாயிதா தினத்திலிருந்து எவ்வளவு காலஞ் சென்றிருக்கிறது என்பதைக் கணக்கிட்டு, அவைகளுக்கு வருஷம் ஒன்றுக்கு நூற்றுக்கு 9 விழுக்காடு பிரதி ஆறுமாதந்தோறும் வட்டிக்கு மேல்வட்டி கூட்டி, அப்படி ஏற்படும் வட்டித்தொகை பூராவும் செலுத்தவேண்டும்.

26. கம்பெனியாரே தங்களால் நியமிக்கப்பட்ட வைத்தியரொருவரால் பரிசோதனை செய்வதற்குரிய ஏற்பாடுகள் செய்வார்கள், வைத்திய கட்டணத்தை பாலிஸிதாரர் முன்பாகவே கட்டிவிடவேண்டும்.

27. ஆனால், முதலில் கட்டத்தவறிய பிரிமியத்தின் வாயிதா தினத்திலிருந்து ஆறுமாதத்திற்குள் பாக்கியிருக்கும் பிரிமியங்களையும், திரும்பவும் ஸ்தாபிப்பதற்குரிய கட்டணத்தையும் செலுத்திவிடுவாரேயானால், வைத்திய பரிசோதனையில்லாமலே பாலிஸியானது திரும்பவும் நிலைநிறுத்தப்படும்,

உரிமைத் தொகை தீர்த்தல்.

28. அஷ்யூர் செய்யப்பட்டவருடைய மரணத்தினால் பாலிஸியின்பேரில் உரிமை யேற்படுமானால், இறந்ததைப் பற்றிய அத்தாக்ஷியும், அந்தப் பாலிஸிதொகையில் வார்சு தாரர்களுக்குரிய சுதந்திரமும் டைரக்டர்களுக்கு திருப்திகரமாய் ரூபிக்கப்பட்டவுடனேயே அவர்களுக்குச் சேரவேண்டிய பணம் யாதொருவிதமான தாமதமுமின்றி கொடுத்துவிடப்படும். முதலில் குறிப்பிடப்பட்ட காலம்முடிய பாலிஸிதாரர் ஜீவித்திருந்து பாலிஸி பூர்த்தியாவதால் உரிமை யேற்படுமானால், அப்படிப்பூர்த்தியாகும் தேதியிலேயே அவருக்குரிய தொகையை காலஹரணமின்றி கொடுத்துவிடுமாறு, கம்பெனியார் அந்தக்குறிப்பிட்ட தேதிக்கு வெகுவாய் முந்

தியே அதைப்பற்றிய பத்திரங்களை பூர்த்திசெய்து அனுப்பும்படி பாலிஸிதாரருக்குத் தெரிவிப்பார்கள்.

29. பாலிஸிதாரர்களும் அவர்களுடைய வார்சுகளும் பாலிஸி தொகையில் தங்களுக்குரிய சுதந்திரத்தை ரூபிப்பதற்குவேண்டிய எல்லாவிதமான சாதனங்களும் புரிவதே கம்பெனியாரின் இடைவிடாத சிந்தனையாயிருந்து வருகின்றது. இவ்விருப்பத்திற்கேற்க, கீழே வரையப்பட்ட விவரங்கள் இப்பொழுது சொல்லப்படுவதுமன்றியில், பாலிஸியின்பேரில் உரிமையேற்படுங் காலத்திலும் வார்சுதாரர்களுக்கு மறுபடியும் தெரிவிக்கப்படும்.

30. கீழ்க்கண்டிருக்கும் பத்திரங்களை அனுப்பிவைத்து அஷ்யூர் செய்யப்பட்டவரின் மரணத்தைக்குறித்த அத்தாக்ஷிகள் ருசுப்படுத்தப்படவேண்டும்:—

(1) இறந்தவருக்கு அந்தியகாலதில் சிகிச்சை செய்துவந்த வைத்தியரிடமிருந்து எந்த வியாதியால், எவ்விதம் மரணம் சம்பவித்தது என்ற விவரங்களைக் குறித்த யாதாஸ்தும்.

(2) மரணங்களைத் தாக்கல் செய்பும் சர்க்கார் உத்தியோகஸ்தரிடமிருந்து அஷ்யூர் செய்யப்பட்டவரின் மரணத்தைக்குறித்த, இடம், தேதி, முதலிய விவரங்களடங்கிய பத்திரமும்.

(3) இறந்தவர் இன்னாரென்று குறிப்பாக நிர்த்தாரிக்கும் பொருட்டு, இறந்தவருக்கு யாதொருவிதமான பாத்திய முமில்லாத வெகுவான அந்தஸ்துள்ளதோர் பிரமுகரிட மிருந்தும், இறந்தவர் உத்தியோகத்தில் அமர்ந்திருந்தா ரேயானால், அவருடைய மேலதிகாரியினிடமிருந்தும், மாஜி நபரின் அங்க அடையாள வர்த்தமானங்களடங்கிய இர ண்டு பத்திரங்களும்.

ஆகிய இவைகளே மரணத்தை ரூபிக்கும் அத்தாக்ஷிக ளாகும்.

31. அஷ்யூர் செய்யப்பட்டவர், தம்முடைய ஜீவிய காலத்திலேயே பாலிஸி சுதந்திரத்தை வேறு எவருக்கும் மாற்றுமலிருக்கும் பட்சத்தில், பாத்யாபேக்ஷகர்கள் தங்க ளுக்கு அப்பாலிஸி தொகையிலுள்ள உரிமையை ஸ்தாபிப்ப தின்பொருட்டு, கீழே சொல்லப்பட்ட பத்திரங்களில் ஏதாவ தொன்று அனுப்பிவைக்கவேண்டும்:—

இராஜதானிகளின் தலைநகர்களில்:—

இறந்தவர் ஏதாவது உயில் எழுதிவைத்திருந்தால், அந்த உயில் நல்லஞாபகத்தோடு இறந்தவராலேயே எழுதப் பட்டது என்று ஹைகோர்ட்டில் ரூபித்ததின்மேல், இறந்தவரின் ஆஸ்திகளைச்சேகரித்து அந்த உயிலில் சொல்லப்பட்டமாதிரியாகப் பங்கிடும்படியாய் ஹை கோர்ட்டாரால் தீர்மானிக்கப்படும் உயிலின் அதிகார பத்திரம் (ப்ரோபேட் ஆப் வில்), அல்லது,

உயிர் இன்ஸூரன்ஸ்.

உயில் யாதொன்றுமில்லாவிட்டால், இறந்தவரின் ஆஸ்திக ளுக்கு யார் யார் உரிமையுள்ளவர்களென்று ஹைகோர் ட்டாரால் நிர்த்தாரிக்கப்பட்டு, அதன்படி ஐவேஜிகள் யாவையும் சேகரித்து வார்சுதாரர்களுக்குக் கொடுக் கும்படியாய் ஹைகோர்ட்டாரால் தீர்மானிக்கப்படும் பாத்யாதிகார பத்திரம் (லெட்டர்ஸ் ஆப் அட்மினிஸ் ட்ரேஷன்), அல்லது,

இறந்தவருடைய பூரா ஐவேஜியும் ரூ. 1000-க்கு மேல்படா மலிருந்தால், அட்மினிஸ்ட்ரேடர் ஜெனரல் என்ற ஹை கோர்ட் உத்தியோகஸ்தரவர்களிடமிருந்து, மிகவும் சுலபமாய்க் கிடைக்கக்கூடிய உரிமைப்பத்திரம், (சர்டி பிகேட் ஆப் டைட்டில்).

ஜில்லாக்களில்:—

உயில் ஏற்பட்டிருந்தாலும், இல்லாவிட்டாலும், இறந்தவரு டைய ஆஸ்திகளுக்கு யார் யார் உரிமையுடையவர்க ளென்று மாஜி நபர் வாசம்செய்த இலாகாவில் அதிகார முள்ள ஜில்லா நியாயாதிபதி அவர்களின் கோர்ட்டால் தீர்மானிக்கப்பட்டு, அவ்விதம் உரிமையுள்ளவர்களுக்கு ஆஸ்திகளைச் சேகரித்து அடையும்படி அதிகாரம் கொ டுக்கப்படும் வார்சு பத்திரம் (ஸக்ஸெஷன் சர்டிபிகேட்.)

ஆகிய இவைகளே பாத்யாபேக்ஷகர்களின் உரிமை யை ஸ்தாபிக்கும் அத்தாட்சிகளாகும்.

32. தேசத்தின் சட்டத்திற் கிணங்கவும், சட்டப்படி உரிமையுள்ளவர்களுக்கே இறந்தவரின் பாலிஸி நிதி சேர வேண்டுமென்பதைக் கரார் படுத்தும்பொருட்டும், பாத்யதா பேக்ஷகர்களுக்கு இறந்தவரின் சொத்திலுள்ள உரிமையை ரூபிக்கக்கூடிய அத்தாட்சிப் பத்திரங்கள் கிடைத்தபிறகே, மற்ற எல்லா லைப் அஷ்யூரென்ஸ் ஸ்தாபனங்களுக்கொப்ப, ஒவ்வொரு கம்பெனியாரும் உரிமைத் தொகை தீர்க்கக்கடவர். ஆகையால் இத்தகைய பாத்யதாபத்திரங்கள் முற்றிலும் அவசியமென்பது நன்ருய் கவனிக்கத்தக்கது.

33 இவ்விதமான நிர்ப்பந்தங்களின்றி, வார்சுதாரர்கள் சீக்கிரத்தில் உரிமைத் தொகையைப் பெறவேண்டுமென்று விரும்பும் பாலிஸிதாரர்கள் யாவரும் தங்களுடைய பாலிஸி நிதியானது யார் யாருக்குச் சேரவேண்டுமென்று பிரியமிருக்கிறதோ அவர்கள்பேருக்கு தங்களுடைய ஜீவிய காலத்திலேயே, பாலிஸி சுதந்திரத்தை மாற்றிவைப்பது நலம். இதற்குரிய சுதந்திரமாற்றுதல் பத்திரத்தின் சலானும் ஏற்பாட்டின் விபரங்களடங்கிய குறிப்பும் பாலிஸி பத்திரத்தோடு அனுப்புவார்கள்.

பாலிஸி சுதந்திர மாற்றுதல்.

34. பாலிஸியின்மேல் தமக்குள்ள சுதந்திரத்தை வேறொருவர்பேருக்கு ஏதாவது பிரயோஜனமடைந்ததின் பொருட்டு உறுதி அடமானமாகவாவது, அல்லது தம்மை அடுத்

திருக்கும் குடும்பவர்க்கத்தில் எவருக்கேனும் அபிமானத்தின் பொருட்டு உதாரத்துவமாகவாவது, பாலிஸிதாரர் மாற்றி வைக்கலாம். இவ்விரண்டுவிதமான சுதந்திர மாற்றுதல்களுக் குமுரிய பத்திரங்களின் சலான் வேண்டுவோர் கம்பெனியா ருக்கு எழுதிப்பெற்றுக் கொள்ளலாம். பத்திரம் கையொப்ப மானதும், பாலிஸிசுதந்திரம் மாற்றப்பட்ட விஷயத்தைக் கம்பெனியாரின் புஸ்தகங்களில் தாக்கல்செய்துகொள்ளும் பொருட்டு கூடியசீக்கிரத்தில் கம்பெனியாருக்கு அறிக்கை செய்யவேண்டுவது மிகவும் முக்கியமானதாகும், ஏனெனில் சுதந்திர மாற்றுதலானது அநேகர்பேருக்கு ஏற்பட்டிருந்து அதனால் அவர்களுள் பாலிஸிதொகையை யடைவதைப் பற்றி விவாதம் நேருங்கால், மாற்றுதலான தேதிகள் யாதா யிருந்தாலும் சரி, அவர்களில் எவரொருவர் தம் பேருக்கு பாலிஸியின் சுதந்திரம் மாற்றப்பட்டிருப்பதைப்பற்றி முதன் முதல் கம்பெனியாருக்கு விளம்பரம் செய்கிறாரோ, அவரு டைய பாத்தியதைதான் ஸ்தாபிக்கப்படும்.

35. கம்பெனியின் புஸ்தகங்களில் தாக்கல் செய்து கொள்ளும்பொருட்டு ஒப்படைப்பத்திரங்களை அனுப்பும் போது, ஒவ்வொரு மாற்றுதலுக்கும் ரூ. 2—8—0 வீதம் மேற்பட்ட கட்டணத்தையும் செலுத்தவேண்டும். ஆனால் பாலிஸிதாரரின் மனைவி பெயருக்காவது, குழந்தைகள் பெய ருக்காவது மாற்றிவைப்பதாயிருந்தால், கம்பெனியார் யா தொரு கட்டணமுமின்றி தாக்கல் செய்துகொள்வார்கள்.

ஒப்படைப்பத்திரத்துடன் அதன் நகலொன்றும் ஆபீஸ் தஸ் தா௵வேஜிகளோடு சேர்த்து வைக்கும்பொருட்டு கம்பெனியா ருக்கு அனுப்பப்படவேண்டும்.

36. பாலிஸி சுதந்திரமாற்றுதலைக் குறித்த பத்திரங் களையாவது அல்லது அவைகளைப்பற்றிய விளம்பரங்களையா வது கம்பெனியார் தங்கள் புஸ்தகங்களில் தாக்கல்செய்து கொண்டாலும், பத்திரம் சட்டத்திற்கிணங்க வரையப்பட்டி ருக்கிறதா, செல்லுமா, என்பதைப்பற்றி யாதொருவிதமான அபிப்பிராயத்தையும் தெரிவிக்கிறதுமில்லை, அதனாலேற்படும் யாதொருவிதமான நிர்ப்பந்தத்திற்கும் அவர்கள் கட்டுப்பட் டவர்களுமில்லை. ஆகையால், பத்திரத்தைக் கம்பெனியா ருக்கு அனுப்புவதற்குமுன், மாற்றுதலின் வகை, ஸ்டாம்பு கட்டணப்பொருமானம், இன்னும் அதைப்பற்றிய மற்ற விஷயங்கள் முதலிய யாவும் சரியாயிருக்கின்றனவாவென்று அவரவர்களேதான் தெரிந்துகொள்ளவேண்டும்.

பாலிஸியை வேறுபாடு செய்தல்.

---

37. அஷ்யூரென்ஸ் வகையில் வேறுபாடுகள் செய்த லினால் அஷ்யூர் செய்யப்பட்டவருக்குப் பொதுவாய் யாதொ ருவிதமான அனுகூலமும் ஏற்படுகிறதில்லை. ஆகையினால் கம் பெனியார் அத்தகைய ஏற்பாட்டுக்கு வெகுவாய் இடங்கொ டுப்பதில்லை. ஆயினும், ஏதாவது சில விசேஷ காரணங்களைக் கொண்டு பாலிஸியில் அவ்விதமான பேதமாவது, வேறுபா

டாவது விரும்பத்தக்கதாயும், சாத்தியமானதாயுமிருக்கும் பட்சத்தில், அதைப்பற்றிக் கம்பெனியாருக்குமனுச்செய்து கொண்டு ஒவ்வொரு வேறுபாட்டின் விவரங்களையும் பகர்வதற்கு ரூ 2—8—0 விகிதம் கட்டணமும் செலுத்தினால், அத்தகைய ஏற்பாட்டின் ஷரத்து நிபந்தனைகளைப்பற்றி அறிந்துகொள்ளலாம் பாலிஸிதாரர் அதற்கு இணங்குவாரேயாகில், அவ்விதமான வேறுபாடுகளை அமுலுக்குக் கொண்டுவருவதின்பொருட்டு வேறு யாதொருவிதமான கட்டணமும் வசூலிப்பதில்லை.

38. ஆனால் ஆயுள் பரியந்தம் சந்தா செலுத்திவர வேண்டிய சாதாரண பூரா ஜீவியகாலப் பாலிஸிகளுக்கு மேலே கட்டவேண்டிய பிரிமியங்களின் தொகையை இவ்வளவென்று குறிப்பிட்டு நிர்ணயிக்க விரும்பினாலும், அல்லது ஒரு வருஷத்திற்கேற்பட்ட பிரிமியத்தை குறைந்த தடவைகளாய்க் கட்டவிரும்பினாலும், அல்லது துவக்கத்தில் தாக்கல் செய்யப்பட்ட வயதானது பிற்பாடு சரியான அத்தாட்சிகளால் குறைந்ததாகவே அல்லது அதிகப்பட்டதாகவோ ரூபிக்கப்படுங்கால், அதன் நிமித்தமேற்படும் பேதங்களை நிவர்த்தி செய்துகொள்ளும்பொருட்டு அவசியமான வேறுபாடுகள் இயற்றவேண்டியிருந்தாலும், இத்தகைய கட்டணம் செலுத்தவேண்டியதில்லை.

காணமற்போன பாலிஸிகள்.

39. ஓர் பாலிஸியானது காணமற்போய்விட்டால், அப்படிக் கைதவறி இழக்கும்படி நேர்ந்த சந்தர்ப்பங்களின்

முழு விவரங்களையும், பத்திரம் அடியோடு அழிந்ததாகத் தெரியாவிடில் அதைத் திரும்பவும் கண்டுபிடிக்க ஏதாவது பிரயத்தனங்க ளெடுக்கப்பட்டிருக்கின்றனவா என்பதைப் பற்றியும், கம்பெனியாருக்கு உடனே தெரிவிக்கவேண்டும். பாலிஸியானது முற்றிலும் அழிந்துவிட்டதென்றும், அதன் மேல் யாதொருவிதமான பலனும் எக்காலத்திலுமேற்பட வில்லையென்றும், கம்பெனியாருக்கு திருப்திகரமான அத்தாட்சிகளால் ரூபிக்கப்பட்டாலொழிய கம்பெனியார் பதில் பத்திரமொன்றைத் தயார்செய்து கொடுக்க ஒப்புவதில்லை, ஆனால், ரூ. 1 கட்டணம் செலுத்தினால், காணமற்போன பாலிஸியின் சாதாரண நகல் மாத்திரம் கொடுப்பார்கள். பதில் பத்திரம் அளிப்பதற்கேற்ற சந்தர்ப்பங்களில் அந்தப் பாலிஸிக்குரிய ஸ்டாம்பு கட்டணமும், மேலே ரூ. ஐந்தும் வசூலிப்பார்கள்.

அஷ்யூரென்ஸை அதிகப்படுத்தல்.

40. தற்காலம் அஷ்யூர் செய்யப்பட்டிருக்கும் தொகையை ஏதாவது அதிகப்படுத்த விரும்பினால், அது ஓர் புதிய அஷ்யூரென்ஸாகவே கொள்ளப்பட்டு, அதற்கு வேறு பாலிஸி கொடுக்கப்படும். அதைக்குறித்த ஆலோசனைப் பத்திரத்தின் தேதியில் பாலிஸிதாரருக்கு கடந்தேறிவரும் வயதுக்கிரமப்படியே, புதிய அஷ்யூரென்ஸின் பிரிமியம் நிர்ணயிக்கப்படும்.

41. முதல் அஷ்யூரென்ஸின் பொருட்டு வைத்திய பரிசோதனை நடந்த ஆறுமாதத்திற்குள், இவ்விதம் அஷ்யூரென்ஸ் தொகையை அதிகப்படுத்துவதாயிருந்தால், சாதாரணமாக, திரும்பவும் புதிதாக வைத்திய பரீக்ஷை தேவையில்லை, ஆனால் அவர்கள் அதுவரையில் நல்ல தேக சௌக்கியத்திலிருந்து வந்ததாக ரூபிக்கும்பொருட்டு டைரக்டர்கள் என்னவிதமான சாட்சியங்கள் வேண்டுமென்கிறார்களோ அவைகள் கேட்கப்படும். ஆறுமாதங்கள் சென்றபிற்பாடு, புதிதாக வைத்திய பரிசோதனை செய்யவேண்டியிருக்கும்.

உயிர் இன்ஸூரன்ஸ் செய்யும் கம்பெனிகளின், பொது பிரபோசல் பாரம்.

அஷ்யூர் செய்யப்படுபவராலேயே அடியிற்கண்ட கேள்விகளுக்கு மறுமொழிகள் எழுதப்படவேண்டும்.

விடைகளைப்பூர்த்தியாகவும், தெளிவான நடையிலும், அபேக்ஷகர் தம் கையெழுத்திலேயே வரயவேண்டும்.

1. உங்களுடைய முழுப்பெயர் ....

உத்தியோகத்தின் விவரம். ....

மேல்விலாசம். ....

2. (*a*) உங்கள் தகப்பனாரின் முழுப்பெயர் ....

....

(*b*) உங்கள்பாட்டனார் முழுப்பெயர் ....

....

3. தாங்கள் பிறந்த இடமும் தேதியும்.

19........ ஹு..மீ ....உயில்

....ஜில்லா ....ல் ஜனனம்.

அடுத்த ஜனன தினப்படி வயது............

4. (a) தாங்கள் பிறந்த தேதியைக்குறித்த முனிசிபாலிடி யாதாஸ்து.

(b) தங்கள் ஜாதகம்.

(c) இல்லாவிட்டால், வயதைக்குறித்த வேறு எவ்வித மான அத்தாக்ஷி.

5. (a) பாலிஸி பத்திர சுதந்திரத்தை இப்பொழுது எவ ருக்கேனும் மாற்றி வைப்பதாக உத்தேசமுண்டா, அல்லது அதை வியாபாரார்த்தமாய் உபயோகப்படு த்தப்போகிறீர்களா?

(b) அல்லது தங்கள் குடும்ப சம்ரக்ஷணார்த்தமே அதைக் கொள்ளுகிறீர்களா?

6. (a) தாங்கள் அமர்ந்திருக்கும் உத்தியோகத்திலிருந்து மாறுவதாக இப்பொழுது உத்தேசமுண்டா? அப்படியானால் எந்த உத்தியோகத்தில் அமர்வதாக உத்தேசம்?

(b) இந்தியா தேசத்தைவிட்டு வெளிநாடு செல்வதாக இப்போது உத்தேசமுண்டா? அப்படியானால் எவ் விடம்?

7. அஷ்யூர் செய்யப்படும் தொகை ரூ. ....

8. இலாபத்துடனா, அல்லது இலாபமில்லாமலா?...............

9. எவ்விதமான அஷ்யூர் செய்யவிருப்பம் என்பதைத் தெ ரிவிக்கவும்.

10. பிரிமியங்களை வருஷத்தில் ஒரு விசையாகவா, இருவிசையாகவா, நாலுவிசையாகவா அல்லது மாதாந்தரமாகவா கட்டப்போகிறீர்?

11. (a) வேறெந்த அஷ்யூரென்ஸ் ஆபீஸிலாவது சேருவதின்பொருட்டு இப்பொழுது ஆலோசனைப் பத்திரத்தை அனுப்பியிருக்கிறீர்களா? அப்படியானால், எந்த ஆபீஸில், எவ்வளவு ரூ. தொகைக்கு?

(b) இதற்குமுன் எப்பொழுதாவது இந்த ஆபீஸ் அல்லது வேறெந்த ஆபீஸுகளுக்காவது, அஷ்யூர் செய்வதற்குரிய ஆலோசனைப் பத்திரத்தை அனுப்பினீர்களா? அப்படியானால், எப்பொழுது எவ்வளவு தொகைக்கு, எந்த ஆபீஸுகளுக்கு என்பதையும், அங்கீகரிக்கப்பட்டிருந்தால், அந்தந்த பாலிஸி நெம்பரையும் தெரிவிக்கவும்.

(c) அப்படிப்பட்ட ஆலோசனைப் பத்திரங்கள் எப்பொழுதாவது நிராகரிக்கப்பட்டனவா? அல்லது தாங்களே பூர்த்திசெய்யாமல் ரத்து செய்துகொண்டதுண்டா? அல்லது சாதாரண விகிதத்தைவிட ஜாஸ்தியான பிரமாணத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டனவா? அப்படியானால் விவரம் தெரிவிக்கவும்,

12. தங்களுடைய தேகஸ்திதியைப் பற்றியும், நடத்தையைப்பற்றியும் மிகவும் நன்றாயறிந்தவரும், தங்களுக்கு உறவினரல்லாதவரும், இந்த அஷ்யூரென்ஸில் எவ்வித சம்பந்தமுமில்லாதவருமான ஒரு சிநேகிதர், அல்லது அறிமுகமுள்ளவரின் பெயர் முதலியவற்றை, தங்களைப்பற்றி விசாரிக்கவேண்டியதின் பொருட்டு, விவரமாகத் தெரிவிக்கவும்,

LIFE INSURANCE.

13. தங்களுடைய சாதாரண தேகசௌக்கியத்தைப் பற்றியும், தற்கால நிலைமையையும், தங்களுடைய பழக்கத்தைப்பற்றியும் விசாரிக்க வேண்டியதின்பொருட்டு, உமக்கு வழக்கமாய் சிகிச்சை செய்துவரும் வைத்தியரின் பெயர் முதலியவற்றைத் தெரிவிக்கவும்.

14. மற்றும் இதர வைத்தியரிடம் உடம்பைக் காண்பித்திருந்தால், அவருடைய பெயரையும், எப்பொழுது எவ்வியாதிக்காக, எவ்வளவுகாலம் அவர் தங்களுக்கு வைத்தியம் செய்தார் என்பதையும் விவரமாய்த் தெரிவிக்கவும்

என்னுடைய ஜீவனை அஷ்யூர் செய்ய ஏற்பாடுசெய்து கொண்டிருக்கும் மேற்கண்ட குறிப்புள்ளவனாகிய..என்ற பெயருள்ள நான், மேலே என்னால் எழுதப்பட்டிருக்கும் வாக்குமூலங்கள் யாவும் உண்மையானதென்று உறுதியாய்ச் சொல்லுகிறேன். மேலும், இந்த வாக்கு மூலங்களும், இந்த உறுதிமொழியும், அத்துடன் இந்த அஷ்யூரென்ஸ் கம்பெனியாரால் நியமிக்கப்பட்டிருக்கும் வைத்தியரால் பரிசோதனை செய்யப்படுங்காலத்தில், நான் இனிமேல் எழுதிவைக்கப்போகும் வாக்குமூலங்களும், இந்த அஷ்யூரென்ஸ் சம்பந்தமாய் அவர் கேட்கும் கேள்விகளுக்கு நான் பகரும் விடைகளும் அதைச் சார்ந்த உறுதிமொழியும், எனக்கும் இந்தக் கம்பெனிக்கும் ஏற்படும் ஒப்பந்தத்திற்கு ஆதாரமாகக்கடவது என்றும், மேலும், அவைகளிலேதாவது உண்மையில்லாமலிருக்கும்பட்சத்தில், இந்த அஷ்யூரென்ஸ் சம்பந்தமாய் என்னால்கட்டப்பட்டிருக்கும் பணம் முழுவதையும் நான் இழந்து விடுவதோடு இந்த அஷ்யூரென்ஸே அடியோடு செலாமணியில்லாமல் பிரயோஜனமற்றுப்போய்விடக் கடவது என்றும் நான் இதன் மூலமாய் உறுதியாக ஒப்புக்கொள்ளுகிறேன்.

உயிர் இன்ஸுூரன்ஸ்.

19......ஹு...............மீ......உயில்...............ல
என்னால் கையொப்பமிடப்பட்டது.

சாட்சியின் கையொப்பம்..................................

உத்தியோகம்..

மேல்விலாசம்..

....

அஷ்யூர் செய்யப்படுபவரின் கையொப்பம்.

இம்மாதிரியான பிரபோசல் பாரத்தை பூர்த்திசெய்து தாங்கள் எந்தவிதமான பாலிஸியை கோரிக்கொள்ளுகிறார்களோ, அம்மாதிரியான பாலிஸிக்குண்டான பிரிமியத்தொகையையும் செலுத்தி கம்பெனியின், பாலிஸியைப்பெற்றுக்கொள்ளவேண்டியது. பிரிமியங்கள் செலுத்தும் விதங்கள் பல கம்பெனியார்கள் பலமாதிரியாக வாங்கிவருகிறபடியால், எல்லா கம்பெனிகளின் திட்டத்தைப்பற்றி எழுதுவது சாத்தியமானதாயில்லை. இது விபரத்தை ஒவ்வொருவரும் தாங்கள் எந்த கம்பெனியில் இன்ஷுர்செய்ய விரும்புகிறார்களோ அந்தக் கம்பெனியாரிடம் பிரிமியம் செலுத்தும் விதத்தை தெரிந்துகொள்ளலாம். ஆனாலும் சிலஇந்திய இன்ஷுரன்ஸ் கம்பெனிகளின் பெயர்களை இதன்பின் கூறுவோம்.

(உயிர் இன்ஸுூரன்ஸ் முற்றிற்று.)

ASK OR WRITE FOR

MULTIPLE BENEFIT POLICY OF BOMBAY LIFE.

Age 25:- Premium Rs.283-7-0 for Rs.5000 will bring after 25 years Rs. 6250, cash and a paid up insurance for Rs. 5000.

or

Increased paid up or insurance for Rs. 15915 or annuity certain for 20 years of Rs. 619-11-0.

or

Annuity for Life of Rs. 751-9-0.

Chief Agents:-

INDO BURMA UNDERWRITERS Ltd.,

Sooniram Building Strand Road, Rangoon.

PHONE NO. 109.

பாம்பே லைப் அஷூரன்ஸ் கம்பெனி.

மல்டிபிள் பெனிபிட் பாலிஸி.

25-வயதுள்ள ஒரு மனிதன் 5000 ரூபாய்க்கு அஷ்யூர் செய்து வருஷம் 1க்கு ரூ 283-7-0 கட்டுவதாயிருந்தால், 25-வருஷத்துக்குப்பின் ரூ 6250 ரொக்கமும், ரூ 5000 செலுத்திய பெய்டு அப்பாலிஸி ஒன்றும் கொடுக்கப்படும்.

20 வருஷத்துக்கு வருஷம் 1க்கு ரூ. 619-11-0 செலுத்துவதாயிருந்தால் ரூ 15915-க்கு இன்ஷூரன்ஸ் பாலிஸியும் கொடுக்கப்படும்

சீப் ஏஜண்டுகள்,

இன்டு பர்மா அண்டேர்ரைட்டர்ஸ் லிமிடெட்,

சுனிராம் பில்டிங், ஸ்ட்ரேண்ட் ரோடு, இரங்கோன்.

போன் நெ. 109.

PHONE 1927.

K. B. ROYCHOWDHURY & Co.,

12, Phayre Street, Rangoon.

AGENTS :

National Insurance Coy., Ltd.,

Universal Fire & General Insurance Coy., Ltd.,

Fidelity-Phenix Fire Insurance Coy.,

(OF NEW YORK. U. S. A.)

Eagle, Star, and British Dominions Insurance Coy., Ltd.,

(INCORPORATED IN ENGLAND)

All Classes of Insurance:- Fire, Marine, Life, Motor Car, Burglary, Personal Accidents Undertaken.

டெலிபோன் 1927.

கே. பி. ராய்சவுதரி அண்டு கம்பெனி,

12 நெ. பேயர்வீதி, இரங்கோன்.

ஏஜண்டுகள்:-

நேஷனல் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

யூனிவெர்சல் பயர் அண்ட் ஜெனரல் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்டு.

பைடெலிடி பினிக்ஸ் பயர் இன்ஷூரன்ஸ் கம்பெனி. ஆப் நியூ யார்க்.

ஈகுல், ஸ்டார் அண்ட் பிரிட்டிஷ் டொமினியன்ஸ் இன்ஷூரன்ஸ் கம்டெனி லிமிடெட்.

எல்லாவிதமான இன்ஷூரமும் செய்துகொடுக்கப்படும்.

Live Stock Insurance.

பிராணிகளின் உயிர் இன்ஷூரன்ஸ்.

நேயர்களே இதுவரை மனிதர்களின் உயிர் இன்ஷூ ரத்தைப்பற்றி சொன்னோம். இனி பிராணிகளின் இன்ஷூ ரம் என்பதைப்பற்றி விவரிப்போம். லைவ் ஸ்டாக் இன்ஷூ ரன்ஸ், அல்லது பிராணிகளின் இன்ஷூரன்ஸ் என்பதையும் கூறுவோம். ஆடு, மாடுகள், குதிரைகள், முதலியவைகளை இன்ஷூர் செய்வது முதல் முதல் இவ்விதமான இன்ஷூ ரன்ஸ் ஏற்படுங்காலத்தில், ஆடு மாடுகள் குதிரைகள் முதலிய வைகளை ஒரு தேசத்திலிருந்து மற்றொரு தேசத்துக்கு கடல் மூலமாய் கப்பலில் அனுப்பும்பொழுது கப்பலுக்கு ஆபத்து ஏற்பட்டு அதினால் கப்பல் முழுகிப்போயோ, அல்லது வேறு விதத்திலோ இன்ஷூர் செய்யப்பட்ட ஆடு மாடுகள் குதிரை கள், இவைகளுக்கு உயிர்ச்சேத முண்டானால் அவ்வித நஷ் டத்தை கம்பெனியார் கொடுப்பதாக ஒப்புக்கொள்ளப்பட் டிருந்தது இது இப்படி நடந்துகொண்டிருக்கையில் 1845 ஸு அக்ரிகல்ட்சரல் கேட்டில் இன்ஷூரன்ஸ் கம்பெனி என்று ஒரு கம்பெனி ஸ்தாபிதம் செய்யப்பட்டு குடியான வர்கள் வைத்திருக்கும் ஆடு மாடு, குதிரை முதலியவைகளு க்கு அகஸ்மாத்தாய் மரணம் ஏற்பட்டால் அதினால் உண்டா கும் நஷ்டத்தை ஈடு செய்வதாக கொஞ்சகாலம் நடந்துவந் தது. இக்கம்பெனி நீடித்தகாலம் நடைபெறவில்லை. அதன் பிறகு 1849ஸு தி நார்பக் பார்மேர்ஸ் இன்ஷூரன்ஸ் அசோ ஸியேஷன் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. இக்கம்பெனி முக்

கியமாய் எல்லா இடங்களிலும், பிராணிகளின் உயிர் இன்ஷூரங்களை நடத்தலாயிற்று. அதன்பிறகு ஏராளமான கம்பெனிகள் ஏற்பட்டு ஒவ்வொரு கம்பெனியும் வெவ்வேறு விதமான மாறுபாட்டுடன் அநேகவிதமாக இன்ஷூரங்கள் செய்துவருகிறது ஆனல் இப்போது அதிகமாகவண்டிகளில் ஓடுகிறதும், ஏரிச்சவாரிசெய்யும் குதிரைகளுக்கு மாத்திரமே அநேக பெரிய பட்டிணங்களில் இன்ஷூரம் செய்யப்பட்டு வருகிறது. அப்படி இன்ஷூரம் செய்கிற குதிரைகளை 6 வகுப்பாக வகுத்து அதஅதற்குத்தக்கபடி கட்டணம் வாங்கி வரப்படுகிறது.

அவையாவன:—

(1) சொந்தவண்டி ஓத்தக்குதிரை.

(2) இரண்டு குதிரைகளால் இழுக்கப்பட்ட இலகுவான வண்டிகளின் ஓடும் குதிரைகள்.

(3) வியாபாரச் சரக்குகள் அடங்கிய நாலுசக்கர வண்டியில் ஓடும் குதிரைகள்.

(4) வாடகை வண்டியில் ஓடும் சவாரி குதிரைகள்.

(5) வாடகை வண்டிகளில் சாமான் ஏற்றி சாமான்களை விற்பனை செய்வதின் பொருட்டாக ஓட்டப்படும் குதிரைகள்.

LIVE STOCK INSURANCE.

(6) பெரிய பாரவண்டிகள், டிராம்கார்கள், ரயில்வே வண்டிகள், முதலியவைகளுக்கு உபயோகப்படுத்தக்கூடிய குதிரைகள் (சிலதேசங்களில் டிராம்வண்டிகள் குதிரைகளால் இழுக்கப்படுகின்றன.)

ஆனால் இப்படிப்பட்ட குதிரைகளை இன்ஷூர் செய்யும்போது, குதிரைகளின் விலை மதிப்புத்தொகையில் மூன்றில் இரண்டுபாக மதிப்புத்தொகைக்குத்தான் கம்பெனியர் இன்ஷூர் செய்துகொள்ளுவார்கள். அப்படி இன்ஷூரம் செய்வதிலும் ஜீவ ஜெந்துவானது, விஷமிட்டுக் கொல்லப்பட்டாலாவது, அல்லது பொறாமையினால் எதிரியினால் எவ்விதச் செய்கை ஏற்பட்டு அதினால் கொல்லப்பட்டாலாவது, இவ்விதமான ஆபத்துக்கு இனைஷூரன்ஸ் பாலிஸி கட்டுப்படமாட்டாது. வழக்கமாக குதிரைகளை இன்ஷூர் செய்யும்காலத்தில், வைத்திய பரிசோதனை டாக்ட்டருக்காக கொஞ்சம் தொகை கம்பெனியாரிடத்தில் டிபாசிட் வைக்கவேண்டும். இந்த தொகையை இன்ஷூரம்முடிந்தவுடன் கம்பெனியார் திரும்பக்கொடுப்பார்கள். ஆனால் இந்த ஏற்பாடும் இப்பொழுது வர வர குறைந்துவிட்டது. இவ்விதமான இன்ஷூரத்தில் கம்பெனிகளுக்கு அதிக லாபமில்லாமல் போனபோதிலும், தற்காலம் ஏராளமான இன்ஷூரக்கம்பெனிகள் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதினாலும், ஒவ்வொரு இன்ஷூரக் கம்பெனியும் நானாவிதமான இன்ஷூரங்களையும் நடத்திவருவதினாலும், இதுவும் அத்துடன் ஒன்றாக அநேக கம்பெனிகள் ஒப்புக்கொண்டு நடத்திவருகின்றது. ஆனால் சில கம்பெனிகள்

பிராணிகளின் உயிர் இன்ஸூரன்ஸ்.

இவ்வித இன்ஷூரன்ஸை ஒரு தனிக்கணக்காகவைத்து, அதன்மூலம் நடந்த இன்ஷூரங்களின் வரவு செலவு கணக்கை, வருஷா வருஷம் கவனித்து வருகிறது. ஆனால் இப்போது இதுவரை நாம் குதிரைகளைப்பற்றியே சொன்னோம். ஆனால் அநேக தேசங்களில் எருதுகளினால் குதிரைகளைப்போலவே எல்லாவிதமான தொழில்களும் நடந்தேறிவருகிறது, ஆகையால் இந்த இன்ஷூரன்ஸ் எருதுகளுக்கும் செய்துகொள்ளலாம். அப்படி செய்வதிலும் மேலே சொன்ன ஆறு வகுப்புபடி எருதுகள்செய்யும் வேலையின் பிரமானத்தின்பேரில், பிரிமியம் வசூல்செய்யப்படும். இதேமாதிரி குதிரைகள்செய்யும் வேலையின் பிரமானத்தின்பேரில், குதிரைகளுக்கும், பிரிமியம் கட்டவேண்டும். தவிர, விலையுயர்ந்த நாய்களுக்கும் இன்ஷூர் செய்யலாம். ஆனால் அநேக கம்பெனிகள் நாய் இன்ஷூரங்களை ஒப்புக்கொள்ளுகிறதில்லை. மேலே சொன்ன குதிரைகள், மாடுகள், இவைகளை இன்ஷூரம்செய்வதில் இத்தனை எண்களுக்குமேல் ஒரே ஆசாமி இன்ஷூரம் செய்தால், அவர்களுக்கு சாதகமான ரேட்டுகுறைவாக ஏற்படுத்தியிருக்கிறது.

முக்கிய குறிப்பு.

இதுவரை இவ்வித இன்ஷூரத்தில் ஆடு, மாடுகள் குதிரைகள் முதலியவைகளை இன்ஷூர் செய்யும் விதத்தையும் அவைகளின் வகுப்பையும்பற்றி சொன்னோம். ஆனால் அப்

படி இன்ஷூர் செய்வதினால் அடையும் பயன் என்ன? அப்பயன் சாதகமா, பாதகமா, என்பதையும் அப்படிச்செய்வதில் ஜெந்துக்களின் சொந்தக்காரர்கள் எவ்விதமான நஷ்டஈடு அடைய எவ்விதமான பாலிஸி பத்திரம் பெறுகிறார்கள். அப்பாலிஸிப் பத்திரத்தின், நிபந்தனைகள், சட்டதிட்டங்கள் இவைகளையறிந்து கொள்ளவேண்டியது அவசியமாகையால் அந்த பாலிஸியின் விர்த்தாந்தங்களையும் இதனடியில் விவரமாய்க்கூறுவோம்

பாலிஸி அல்லது பீமா பத்திரம்.

இப்பத்திரத்தின் ஒப்பந்தமானது ஒருவித நஷ்ட ஈட்டுக்கு உத்திரவாதம் அதாவது, இன்ஷூர் செய்தவர்களின் யாதொரு குதிரையோ, ஆடோ, மாடோ, நாயோ, எவ்விதமான தற்செயலாய் நேரிடும் ஆபத்தினால் மரணமடைந்தாலாவது. அல்லது அகஸ்மாத்தானவியாதி ஏற்பட்டு திடீரென மரணமடைந்தாலாவது அச்ஜெந்துவின் கிரயத்தொகையை கம்பெனியார் ஒப்புக்கொண்டபிரகாரம், இன்ஷூர் செய்தவருக்கு நஷ்ட ஈடாக கட்டிக்கொடுப்பது ஆனால் அதிலும் அநேக நிபந்தனைகள் உண்டு அவைகள் பின்வருமாறு.

நிபத்தனைகள்.

(1) இன்ஷூரம் செய்யப்பட்ட ஜெந்துக்கள், வெய்யில், மழையில், நனையாத ஒரு பந்தோபஸ்தான கட்டிடத்தில், வைக்கப்படவேண்டும்.

(2) அவைகளின், மல மூத்திரங்களை அப்போதைக்கப்போது அப்புறப்படுத்துவதற்குண்டான ஏற்பாடுகளும் செய்திருக்கவேண்டும்.

(3) அவைகளுக்கு செம்மையான ஆகாரம், உணவுமுதலியவைகளும் சுத்தமான தண்ணீரும் கொடுத்துவரவேண்டும்.

(4) ஷை ஜெந்துக்களுக்கு ஏதாவது வியாதி ஏற்பட்டால், அதை தனியாக 50 அடி தூரத்தில் யாதொரு கட்டடமுமில்லாத ஒரு தனிமையான ஜாகாவில் செம்மையாய் வைக்கப்படவேண்டும்.

(5) அப்படிவைப்பதிலும், இன்ஷூர்செய்தவர் தம் சொந்த சிலவில், கிரமமாய் அதிகாரமபெற்ற ஒரு வைத்தியரைக் கொண்டு நன்ருக சிகிச்சை செய்யப்படவேண்டும.

(6) அப்படி சிகிச்சை, செய்வதிலும் பூரா சிரத்தையோடு சிகிச்சை செய்துவரவேண்டும்.

(7) அப்படி பூரா சிரத்தையோடு சிகிச்சைசெய்துவந்ததாக கம்பெனியாருக்கு திருப்திகரமாகும்படி ரூபிக்கப்படவேண்டும்.

மேலேசொன்னபடி ரூபிக்கப்பட்ட பிறகுதான் கம்பெனியார் ஒப்புக்கொண்டபடி இன்ஷூர் செய்தவருக்கு நஷ்டஈடுகட்டிக்கொடுப்பார்கள்.

நாம் அநேக இன்ஷூரங்களின் சாராம்சங்களை தெரியவேண்டியிருப்பதால் ஒவ்வொரு இன்ஷூரத்தையும் அதன தன் தலைப்பின்கீழ் முக்கியமாய் கவனிக்கவேண்டிய விஷயங்களை மாத்திரம் தெளிவாய் எடுத்துரைத்தோம் இதை இத்துடன் நிறுத்தி இனி இக்குதிரைகளைக்கட்டும் வண்டிகளின் இன்ஷூரத்தைப்பற்றிக் கூறுவோம்.

Carriage Insurance.

வண்டிகளின் இன்ஸூரன்ஸ்.

இவ்வித இன்ஷூரன்ஸானது 1876வரு வரை இன்ன தென்றே இங்கிலாந்து தேசத்தில் தெரியாது, ஆனல் 1840 வருஷத்தில் பிரான்சு தேசத்தில் மாத்திரம் கொஞ்சம் அனு ஷ்டானத்திலிருந்து வந்தது. காரணம் என்னவெனில் அக் காலம் பிரான்சு தேசத்தில் வண்டிகளில், அநேக விபத்துக் கள் ஏற்பட்டு அதனுல் ஜனங்கள் பெருத்த நஷ்டத்தை யடைந்ததுதான் அதன்பிறகு 1870வருஷத்தில் இங்கிலாந்தி லும் இம்மாதிரியான கம்பெனிகள் நியமிக்கப்பட்டு 1872 வருஷத்தில் கேரேஜ் இன்ஷூரன்ஸ் கம்பேனி என்றுஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. பிறகு சில கம்பெனிகள் சேர்ந்து ஹார்ஸ் கேரேஜ அண்டு ஜெனரல் இன்ஷூரன்ஸ் கம்பேனி என்று ஸ்தாபிக்கப்பட்டது.

அதன்பிறகு ஏராளமான கம்பெனிகள் ஏற்பட்டு ஒவ் வொரு கம்பெனிகளும் ஏறக்குறைய இம்மாதிரியான இன் ஷூரன்ஸை ஒப்புக்கொண்டுவருகிறது. இந்த கேரேஜ் இன் ஷூரன்ஸ் என்கிறது என்னவென்றுல் எல்லா குதிரைகளால் இழுக்கப்பட்ட, வண்டிகளுக்கு ஆபத்தேற்பட்டால், அவ் வித நஷ்டத்துக்கு பதில் ஈடு கட்டிக்கொடுப்பதுதான். ஆ னுல் இதில் பலமாதிரியான வண்டிகள் உண்டு.

அவைகளாவன:—

வண்டிகளின் இன்ஸூரன்ஸ்.

(1) சொந்தக்காரர்களால் உபயோகப்படுத்தப்பட்ட அடைப்பு அடைத்த வண்டி.

(2) சொந்தக்காரர்களால் உபயோகப்படுத்த அறை அடைப்பு அடைத்த வண்டிகள்.

(3) மேலே சொல்லியபடி யில்லைத்த வண்டிகள்.

(4) நாலுசக்கர வண்டிகள்.

(5) இரண்டுசக்கர வண்டிகள்.

(6) வியாபார விஷயமாக உபயோகப்படுத்தக்கூடிய வண்டிகள்.

(7) குதிரைகளால் இழுக்கப்பட்ட மற்றெவ்விதமான வண்டிகளும்.

இம்மாதிரியான வண்டிகள் சவாரிசெய்யும் காலத்திலாவது, அல்லது சாமான்கள் ஏற்றிச்செல்லும் காலத்திலாவது எதிரே வரக்கூடிய மற்ற வண்டிகளாலோ, அல்லது மோட்டார் வண்டிகள், டிராம் வண்டிகள் முதலியவைகளாலோ தாக்கப்பட்டு அதினால் ஏற்படும் அகஸ்மாத்தான ஆபத்தினால் வண்டிகள் உடைந்துபோனாலாவது, அவ்விதம் உடைந்த பாகத்தை முன்னிருந்ததுபோலவே, சரியான ஸ்தியில் வைத்துக்கொடுக்கவோ அல்லது செய்துகொடுக்கவோ இன்ஷூரம் ஒப்புக்கொண்ட கம்பெனியார்கள் கட்டுப்பட்டிருக்கிறார்கள்.

CARRIAGE INSURANCE.

ஆனால் வண்டியின் பூருத்துகைக்கும் கண்டு இன்ஷூர் செய்துகொள்ளவேண்டும். இதிலும் இரண்டுவிதமான இன் ஷூரங்கள் உண்டு.

அதாவது:—

(1) வண்டிகள்மாத்திரம் ஓட்டப்படுங்காலத்தில் எதிர் வண்டியோடாவது, அல்லது மேலே சொல்லியபடி வேறு எவ்விதத்திலாவது, சேதமுண்டாகி அதினால் நஷ்டமேற்பட் டால் வண்டியைப்பொருத்த மட்டில் நஷ்ட ஈடு கட்டிக்கொ டுப்பது.

(2) அப்படி இன்ஷூரம் செய்யப்பட்ட வண்டியில் சாரத்யம்செய்பவனுக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்தால் அவ் வித ஆபத்துக்கும் கம்பெனியார் கட்டுப்படுகிறார்கள்.

ஆனால் அநேக கம்பெனியார்கள் வண்டிகளுக்கு மாத் திரமே இன்ஷூரம் ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

சாரத்யம் செய்பவனின் இன்ஷூரத்தை அநேக கம் பெனிகள் ஒப்புக்கொள்ளுகிறதில்லை. நாம் இப்பொழுது வண் டியைப்பற்றியும் அதை சாரத்யம் செய்பவனைப்பற்றியும் மா த்திரம் சொன்னோம். ஆனால் வண்டியில் ஏறி சவாரிசெய்ப வர்கள் இன்ஷூரம் செய்யலாமா என்பதைப்பற்றியும் கவ னிக்கவேண்டியதவசியமாகையால் இந்த இன்ஷூரத்தைப் பற்றி (**Personal Accident.**) பெர்சனல் ஆக்ஸிடென்ட் என் னும் தலைப்பெயரின் கீழ் பின்னால் சொல்லப்போகிற இன் ஷூரத்திலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

கட்டணங்கள்.

இம்மாதிரி இன்ஷூரம் செய்யும் வண்டிகள் பட்டணங்களிலிருந்தால் அதற்கு கொஞ்சம் குறைவான கட்டணமும் ஜில்லாக்களாயிருந்தால் அதற்கு கொஞ்சம் ஜாஸ்தி கட்டணமும் கொடுக்கவேண்டும்.

சாதாரணமாய் எல்லா கம்பெனியின் கட்டணங்களும் ஒரேமாதிரியாகத்தானிருக்கும். ஆனால் ஒரே மனிதன் இரண்டு அல்லது மூன்று வண்டிகள் ஒரே காலத்தில் இன்ஷூரம் செய்தாலாவது, அல்லது ஒன்றன்பின் ஒன்றாய் இன்ஷூரம் செய்தாலாவது அவ்வண்டிகளுக்கு செலுத்தும் பிரிமியத்திலிருந்து 100 க்கு இவ்வளவு தள்ளிக்கொடுப்பது என்கிற ஒரு வழக்கத்தையும் கம்பெனியார்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

முக்கிய குறிப்பு.

நாம் இதுவரை வண்டிகளின் வகுப்புகளைப்பற்றியும், அவைகளை இன்ஷூர் செய்யும் விதங்களையும் பற்றிச்சொன்னோம் ஆனால் அப்படி இன்ஷூர் செய்வதினால் அடையும் பயன் என்ன, அதன் பாலிஸியின் நிபந்தனைகளென்ன என்பது அவசியம் தெரிந்துகொள்ள வேண்டியதாயிருக்கிறது.

பாலிஸி.

இவ்வித பாலிஸியின் கருத்தானது வண்டிகள் தெருவில் போகும்போது மாத்திரம், மேலே சொல்லியபடி, வேறு வண்டிகளாலாவது, மோட்டார்வண்டிகள் அல்லது பாரவண்

CARRIAGE INSURANCE.

டிகள், அல்லது டிராம் வண்டிகள் முதலியவைகளால் மோதப்பட்டு அதனால் அகஸ்மாத்தாய் ஏற்படக்கூடிய நஷ்டங்களை மாத்திரம் கொடுக்க கம்பெனியார் கட்டுப்பட்டவர்களாவார்கள். ஆனால் வண்டியை நிறுத்தப்பட்டிருக்கும், ஜாகாவில் நெருப்பு விபத்து ஏற்பட்டு, அதினால் வண்டி எரிந்து போனாலாவது அல்லது செம்மையான சாமான்களினால் செய்யப்படாமல், வண்டி ஓடிக்கொண்டிருக்கும்போது தானாகவே, முறியக்கூடிய அல்லது ஒடியக்கூடிய எவ்வித சாமான்களுக்கும், அல்லது செம்மையாய் அமைக்கப்பட்டு நீடித்த காலம் ஓட்டப்பட்டு, பழயசாமான்களாய் இனி உபயோகிக்க ஏதுவில்லாமல்போய், அதனால் ஏற்படும் நஷ்டத்துக்கும், பொறாமையினாலாவது, விரோதத்தினாலாவது, வண்டி ஓடாமலிருக்கும்போது, வேறு எதிரிகளால் உண்டாக்கக்கூடிய, டாமேஜ் அல்லது எவ்வித நஷ்டத்துக்கும் கம்பெனியார் கட்டுப்படமாட்டார்கள்.

அன்பர்களே! இதுவரை குதிரைகளுடையவும், அவைகளால் இழுக்கப்பட்ட வண்டிகளுடையவும், இன்ஷூரன்ஸ்களைப்பற்றிச் சொன்னோம். ஆனால் குதிரைகள் இல்லாமலே மிஷன்களால் ஓடக்கூடிய மோட்டார் சைக்கிள், மோட்டார் கார் இவைகளுக்கும் இன்ஷூரம் இருக்கிறபடியால் அவைகளின் விபரங்களைப்பற்றியும் முக்கியமான விஷயங்களைக் கூறுவோம்.

(கேரேஜ் இன்ஷூரன்ஸ் முற்றிற்று.)

Motor Car Insurance.

மோட்டார் கார் இன்ஷூரன்ஸ்.

இவ்வித இன்ஷூரன்ஸானது 1896ஹூத்து லோகமாட்டிவ் அமெண்ட்மெண்ட் ஆக்ட்டுக்குப்பின். 1903ஹூ அநேக பட்டணங்களில் மோட்டார் வண்டிகள் செய்யும் கம்பெனிகள் ஏராளமாய் ஏற்பட்டு, ஏராளமான மோட்டார் வண்டிகள் உலகத்தில் பரவ ஆரம்பித்தபிறகு, இம்மாதிரியான இன்ஷூரன்ஸ் அவசியமாகவே அதற்குவேண்டிய சீர்திருத்தங்கள் அப்போதைக்கப்போது செய்யப்பட்டு நடைபெற்று வருகின்றது. அப்படிச்செய்யும் இன்ஷூரங்களையும் பலவிதமாக வகுக்கப்பட்டு பல கம்பெனியார் இன்ஷூரம் செய்து வருகிறார்கள்.

அவையாவன:—

(1) பொதுஜனங்களால் உபயோகப்படுத்தப்படுகிற வண்டிகள், மோட்டார்கள், முதலியவைகளால் தாக்கப்பட்டு அதினால் நஷ்டமேற்படுவது.

(2) அப்படி ஏற்படும் காலத்தில் மோட்டார்வண்டி பூராவும் நாசமடைந்தால் அதன் நஷ்டத்துக்கும்.

(3) தானாகவே நெருப்புப்பிடித்து எரிந்துபோய் நஷ்டமுண்டானால் அவ்வித நஷ்டத்துக்கும்.

(4) வண்டிக்காக ஏற்பட்டுள்ள சாமான்கள் திருட்டுப்போனால் அவ்வித நஷ்டத்துக்கும்.

MOTOR CAR INSURANCE.

(5) ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்கு மோட்டார் வண்டியை கடல்மூலமாவது, ரயில், மூலமாவது அனுப்பும் போது மத்தியகாலத்தில் உண்டாகும் ஆபத்தினால் ஏற்படும் நஷ்டத்திற்கும்.

(6) மோட்டார் வண்டியின் சொந்தக்காரர்களின் வேலைக்காரர்களைத்தவிர மற்றவர்களினால் பொறாமையினாலாவது கெட்ட எண்ணத்தினாலாவது விரோதத்தினாலாவது செய்யப்படும் செய்கையினால் உண்டாகும் நஷ்டத்துக்கும்.

இம்மாதிரியான நஷ்டங்களுக்கு ஈடு கட்டிக்கொடுப்பதாக கம்பெனியார் இன்ஷூரன்ஸை ஒப்புக்கொள்ளுகிறார்கள். அப்படி இன்ஷூர் செய்கிறகாலத்தில், கம்ப்பெனியாரால் கொடுக்கப்படும், பிரப்போசல் பாரத்தில்கண்ட விபரங்களை செம்மையாய் எழுதியனுப்பப்படவேண்டும்.

பிரபோசல் பாரம்.

(1) இன்ஷூர்செய்கிறவருடைய முழுப்பெயர், விலாசம், தொழில் முதலியன.

(2) எம்மாதிரியான வண்டி எந்த வருஷத்தில் செய்யப்பட்டது.

(3) எத்தனை குதிரை இழுக்கக்கூடிய வேகத்தையுடையது.

(4) வண்டியின் கிரையம்.

(5) வண்டியானது சொந்த உபயோகத்துக்கு மாத்திரம் உபயோகப்படுத்தக்கூடியதா?

(6) வண்டியானது எவ்வித ரிபேரையும் கோராத நல்லஸ்திதியிலிருக்கிறதா?

(7) வண்டியானது சொந்தக்காரரினுலே ஓட்டப்படுகிறதா அல்லது டிரைவரினுல் ஓட்டப்படுகிறதா அல்லது சமயோசிதம்போல் இரண்டுபேராலும் ஓட்டப்படுகிறதா?

(8) இதற்குமுன் ஏதாவது மோட்டார் வண்டியினுல் நீர் ஆபத்தடைந்ததுண்டா?

(9) அப்படி ஆபத்தடைந்திருந்தால் எந்தக்கம்பெனியில் இன்ஷ்யூரம் செய்தது. எவ்வளவுதுகை நஷ்ட ஈடு கட்டிக் கொடுக்கப்பட்டது.

(10) எந்தக்கம்பெனியாவது உம்முடைய பிரபோசலை ஒப்புக்கொள்ளமுடியாதென்று சொன்னதுண்டா?

(11) அல்லது எந்தக்கம்பெனியாவது உம்முடைய பாலிஸியை மறுபடியும் புதுப்பிக்கமுடியாதென்று மறுதளித்ததுண்டா?

(12) அல்லது எந்தக்கம்பெனியாவது உம்முடைய பிரிமியத்தை அதிகப்படுத்தவேண்டுமென்று கேட்டதுண்டா?

(13) இந்தக்கம்பெனியில் ஏதாவது இதர இன்ஷ்யூரங்கள் நீர் செய்திருக்கிறீரா, அப்படியானுல் அதன் விபரங்களும்.

MOTOR CAR INSURANCE.

இது பொதுவான பிரபோசல் பாரம், ஆனால் மோட்டார் கார் இன்ஷூரம் செய்வதிலேயே காம்பரஹேன்சிவ் பாலிஸி என்று மற்றொரு விதமான இன்ஷூரன்ஷூம் உண்டு, இம்மாதிரியான இன்ஷூரன்ஷூ செய்ய விரும்புகிறவர்கள் மேலே சொல்லிய பிரபோசல் பாரத்துடன் அடியில் கண்ட கலங்களையும் பூர்த்திசெய்தனுப்பவேண்டும்.

அதாவது:—

மோட்டார் வண்டிக்கு ஆபத்து தவிர மோட்டாரை ஓட்டுகிறவன் ஆபத்தேற்படுகிற காலத்தில், காயமடைந்தாலாவது, கைகால்கள் முறிந்துபோனாலாவது, அல்லது மரணமடைந்தாலாவது, அவ்வித ஆபத்துகளுக்கும்கூட இன்ஷூர் செய்யப்படவேண்டும் என்றும், மோட்டார்வண்டியில் ஏறிச் செல்லும் எஜமானனுக்கோ அல்லது எஜமானிக்கோ அல்லது குடும்பத்தாருக்கோ கைகால்கள் முறிந்தாலாவது காயம் ஏற்பட்டாலாவது அல்லது மரணமடைந்தாலாவது.

அப்படி ஆபத்தேற்படுங்காலங்களில் இன்ஸூர் செய்தவருக்கோ அல்லது அவர் குடும்பத்தவர்களுக்கோ வைத்தியச்சிலவை கம்பெனியார் கொடுக்கவேண்டுமென்றும், இன்ஸூர்செய்தவர் தொடர்ச்சியாய் இரண்டு மாதகாலம் வண்டியை உபயோகிக்காமலிருந்தால் அப்படி உபயோகப்படுத்தாத காலங்களில் வண்டிக்குண்டான சாமான்கள் திருட்டுப் போனாலாவது, அல்லது நெருப்பினால் எரிந்துபோனாலாவது அவ்வித நஷ்டத்துக்கும் கம்பெனியார் கட்டுப்படவேண்டுமென்றும்கண்டெழுதிக்கொடுத்து காம்ரஹேன்ஸிவ் பாலிஸி பெற்றுக்கொள்ளலாம்.

முக்கிய குறிப்பு.

இதுவரை இன்ஸுரம் செய்யும் விதங்களையும் மாதிரிகளையும்பற்றிச் சொன்னோம். இனி அப்படி இன்ஸுர் செய்வதினால் அடையும் பயன் என்ன? அதன் பாலிஸியின் நிபந்தனைகள் என்ன? என்பதைப்பற்றியும் தெரிந்துகொள்ளவேண்டியது அவசியமானதால் அவைகளின் முக்கியமான விஷயங்களையும் கூறுவோம்.

POLICY. பாலிஸி.

இன்னவருஷம் இன்னமாதம் இன்னதேதி இன்ன ஊரிலிருக்கும் இன்னதொழிலையுடைய இன்னார், இன்ன கம்பெனிக்கு எழுதியனுப்பிய பிரப்போசல் பாரப்படி கம்பெனியார் இன்ஸுரம்செய்துகொண்டவருடைய மோட்டார்வண்டியை அடியிற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு இன்ஷுரம் செய்ய ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

(1) இன்ஸுர் செய்தவருடைய மோட்டார் வண்டி ஓடிக்கொண்டிருக்கும்போது, இன்ஸுர் செய்தவருடைய வண்டிக்கோ, ஓட்டுகிறவனுக்கோ, அல்லது அதில் ஏறிச் சவாரி செய்கிறவர்களுக்கோ, அகஸ்மாத்தாய் ஏற்படக்கூடிய ஆபத்துக்களில் சம்பவிக்கக்கூடிய விபத்துக்களுக்கும் மரணத்திற்கும் இவ்வளவு இவ்வளவுதுகை நஷ்டஈடு கொடுப்பதென்றும்.

(2) இன்ஸுர் செய்தவருடைய குடும்பத்தவர்களைத் தவிர ஏறிச்சவாரிசெய்யும் சிநேகிதர்களுக்கு ஏற்படும்ஆபத்தான விபத்துக்கு இவ்வளவு துகை நஷ்டஈட்டுக்கு கொடுப்பதென்றும்.

MOTOR CAR INSURANCE.

(3) இன்ஸூர் செய்யப்பட்டவருடைய மோட்டார் வண்டியின் ஒவ்வொரு பாகங்களுக்கும், டயருக்கும், விளக்குக்கும், ஆபத்தேற்பட்டு நஷ்டமுண்டானால் அவ்வித நஷ்டத்திற்கும்.

(4) இன்ஸூர் செய்தவருடைய மோட்டார் வண்டியை அவருடைய விரோதிகளால், எவ்விதமான சீர்கேடு செய்யப்பட்டால் அவ்வித சீர்கேட்டின் நஷ்டத்துக்கும்.

(5) ஷை வண்டியானது நெருப்புப்பட்டு எரிந்து நாசமடைந்தால் அவ்வித நஷ்டத்துக்கும்.

(6) ஷை வண்டியின் சாமான்கள் திருட்டுப்போனால் அதற்கீடான நஷ்டத்துக்கும்

(7) ஷை வண்டியானது மிஷன் இன்ஜின் இவைகளினால் சீர்கேடு ஏற்பட்டு நாசமடைந்தால் அதினால் ஏற்படும் நஷ்டத்துக்கும்.

(8) ஷை வண்டியை வசதியில்லாத பாழான பாதையில் ஓட்டப்பட்டு அதினால் ரப்பர் டயர்கள் நாசமடைந்தால் அதற்கு 100க்கு 50 விழுக்காடு நஷ்ட ஈடு கொடுக்கக் கட்டுப்பட்டும்.

(9) ஷை வண்டியானது பூகம்பத்தினால் மிஷன் இன்ஜின்கள் கெட்டுப்போய் அதினால் நஷ்டமுண்டானால் அவ்வித நஷ்டத்துக்கும்.

(10) ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்குக் கொண்டு போகும் காலத்தில் அகஸ்மாத்தான ஆபத்து ஏற்பட்டு அதினால் நஷ்டமுண்டானால் அவ்வித நஷ்டத்துக்கும்.

(11) ஷை வண்டிக்கு ஒரு இடத்தில் ஆபத்து ஏற்பட்டு பிறகு தானாகவே ஓடசக்தியற்ற காலத்தில், ஆபத்து

ஏற்பட்ட இடத்திலிருந்து ரிபேர் செய்யவேண்டிய இடத்துக்கு கொண்டுபோகக்கூடிய சிலவையும் கொடுப்பதாகவும்.

(12) அத்துடன் அவசரமான ரிபேர்களுக்கு ரூ. 150க்கு அதிகப்படாமல் இன்ஸுர் செய்தவர் தாமே ரிபேர் செய்துகொண்டு கம்பெனியாருக்கு ரிபேர்செய்த கம்பெனியாரிடமிருந்து ரசீது வாங்கியனுப்பலாமென்றும்.

(13) வண்டியில் சவாரிசெய்யுங்காலங்களில் ஏதாவது ஆபத்தேற்பட்டு இன்ஸுர் செய்தவருக்கோ, அல்லது அவர் குடும்பத்தவர்களுக்கோ, காயமேற்பட்டு அதினால் வைத்திய சிகிச்சை நேரிடுமானால் அப்படி ஏற்படும் வைத்திய சிகிச்சைக்கு ரூ- 300க்கு அதிகப்படாமல் கம்பெனியார் கொடுக்கக்கட்டுப்பட்டவர்களென்றும்.

மேலே சொன்னவிதங்களின் நஷ்டங்களுக்குக் கட்டுப்பட்டு மேலே சொன்னமாதிரி நஷ்ட ஈடு கட்டிக்கொடுப்பதாக ஒப்புக்கொண்டு கம்பெனியாரால் ஏற்படுத்தப்பட்ட மானேஜரோ, அல்லது ஏஜண்டோ கம்பெனியின் பாலிஸி பாரத்தில் கையெழுத்து செய்துகொடுப்பார்கள் ஆனால் இன்ஸுர்செய்பவர் அனுசரிக்கவேண்டிய நிபந்தனைகளும் சிலவுள.

நிபந்தனைகள்.

(1) இன்ஸுர் செய்தவரின் வண்டிக்கோ, ஜனங்களுக்கோ ஏதாவது திடீரென்று ஆபத்தேற்பட்டு அதினால் கம்பெனியாரிடமிருந்து நஷ்ட ஈடு பெற விரும்புங்காலத்தில் அப்படி ஆபத்தேற்பட்ட உடனே இன்ன இடத்தில் இன்ன விதமான ஆபத்து இன்ன காரணத்தினால் நேர்ந்ததென்று கம்பெனியாருக்கு எழுத்து மூலமாய் சாட்சியத்துடன் எழுதியனுப்பிவைக்கவேண்டும்.

MOTOR CAR INSURANCE.

(2) எந்த மனிதனால் இன்ஸூர் செய்தவனுக்கு ஆப த்துண்டாக்கப்பட்டதோ, அந்த மனிதனிடமிருந்து சட்டப்படி பிரதிப்பிரயோஜனம் அடைய கம்பெனியாருக்கு அதிகாரமுண்டு.

(3) தவிரவும் ஆபத்தேற்பட்டு அதினால் சீர்கேடுண்டாக்கப்பட்ட மோட்டார் வண்டியை மறுபடியும் பழய ஸ்திதியில் வைத்துக்கொடுக்க கம்பெனியார் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

(4) இன்ஸூர் செய்தவர் தம்முடைய வண்டியை நல்ல ஸ்திதியில் செம்மையான இடத்தில் வைக்கவேண்டும். அப்படி வைக்கப்பட்டிருக்கிறதா என்று அப்போதைக்கப்போது, கம்பெனியாரால் நியமிக்கப்பட்ட சிப்பந்திகள் அடிக்கடி வந்து பார்வையிடவும் கம்பெனியாருக்கு அதிகாரமுண்டு

(5) எவ்வித இன்ஸூர்செய்த மோட்டார் வண்டிக்காவது, ஆபத்தேற்பட்டு சீர்கேடாய் அதினால் கம்பெனியாரிடமிருந்து நஷ்ட ஈடு அடையுங்காலத்தில் ஷை வண்டியானது மற்ற எந்தக்கம்பெனியிலும் வேறு இன்ஸூரம் செய்யப்படாமலிருக்கவேண்டும். அப்படி வேறு இன்ஸூரம் செய்திருப்பதாகத் தெரிந்தால், முதல்செய்த கம்பெனியார் பூரா நஷ்டத்தையும் கொடுக்கக் கட்டுப்பட்டவர்களல்ல ஆனால் வீதாசார நஷ்டத்துக்கு மாத்திரம் கட்டுப்படுவார்கள்.

(6) யாதொரு இன்ஸூரத்தையும் இன்ஸூரம் முடிவடைந்த ஏழு நாளைக்குள் புதுப்பிக்கலாம். ஆனால் அப்படி புதுப்பிக்க கம்பெனியார் சம்மதித்தாலும் சம்மதிக்கலாம். இல்லாவிடில் ரத்துசெய்தாலும் செய்யலாம். அல்லது இன்ஸூர் தினங்கள் பாக்கியிருக்கும் காலங்களிலேயே கம்பெனியார் ரத்துசெய்யவேண்டுமானாலும் செய்யலாம், அப்போது

இன்ஸூர் நின்ற தினங்களுக்குண்டான தொகையைக்கழித்துக்கொண்டு பாக்கிவீதாசாரத்தொகையைக் கொடுப்பார்கள். இன்ஸூர் செய்தவர் இன்ஸூர் செய்யப்பட்ட குறித்தகாலத்துக்கு முன்னதாகவே ரத்துசெய்யவேண்டுமானாலும் செய்யலாம். அப்படி செய்வதாயிருந்தால் அப்போது கம்பெனியாரால் நிர்ணயிக்கப்பட்ட (Short Period Rates) என்னும் ஓர் பாகத்தொகையைத்தான் திரும்பப்பெருவார்கள்.

(7) இன்ஸூர் செய்தவர் மத்தியகாலத்தில் வண்டியை மற்றொருவருக்கு விற்கிரையம் செய்தால் அந்தப்பாலிஸியின் பாத்தியதையை கிரையம் பெற்றவர்பேருக்கு மாத்திக்கொள்ளலாம். அப்போது கம்பெனியாருக்கு தெரியப்படுத்தி கம்பெனி புஸ்தகத்தில் பதிவுசெய்துகொள்ளவேண்டும்.

(8) இன்ஸூர்செய்த யாதானுமொரு மோட்டார் வண்டிக்கு ஆபத்தேற்பட்டு சீர்கேடாகி, அதினால் நஷ்டம் பெற விரும்புங்காலத்தில் இன்ஸூர் செய்தவருக்கும் கம்பெனியாருக்கும் ஏதாவது தகரார் ஏற்பட்டால் அப்போது கம்பெனியார் ஒரு பொதுமனிதரையும், இன்ஸூர்செய்தவர் ஒருபொது மனிதரையும் ஏற்படுத்தி அவர்களால் செய்யப்படும் பஞ்சாயத்து தீர்மானப்படி இன்ஸூர் செய்தவருக்கு கம்பெனியார் நஷ்டத்தைக்கொடுக்க கட்டுப்பட்டவர்களாவார்கள்.

இதுவரை மோட்டார் வண்டிகளின் விபரங்களைப்பற்றி சொன்னோம், இனி சாமான் ஏற்றிச்செல்லும் மோட்டார் வண்டிகள் இன்ஸூரம் செய்வதைப்பற்றிக் கவனிப்போம்.

அவைகளாவன: —

(1) லகுவான பாரம் அதாவது ஒருடன்னுக்கு அதிகப்படாமல் ஏத்திக்கொண்டு போகக்கூடியவண்டிகள்.

MOTOR CAR INSURANCE.

(2) மேற்சொல்லியபடி இரண்டு டன்னுக்கு அதிகப் படாமல் பாரம் ஏற்றிக்கொண்டு போகக்கூடிய வண்டிகள்.

(3) இரண்டு டன்னுக்கு அதிகமான பாரத்தை ஏற்றிக்கொண்டு போகக்கூடிய வண்டிகள்.

(4) வாடகைக்கு ஜனங்களை ஏற்றிக்கொண்டு போகக் கூடிய பெரிய வண்டிகள்.

(5) பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளை ஏற்றிக்கொண்டு போகக்கூடிய வண்டிகள்.

(6) பெற்றோல், எண்ணெய்டேங்குகளை இழுத்துக்கொண்டு போகக்கூடிய வண்டிகள்.

இவ்வகை பாரம் இழுக்கும் வண்டிகளுக்கு அவ்வண்டிகளின் வேகமான குதிரைப்பவர்களைக்கொண்டு அததற்கு கட்டணங்கள் விதிக்கப்படும். மோட்டார் சைக்கில்களும் இன்ஸுவர் செய்யலாம், அதற்கும் அது ஓடும்வேக குதிரைப் பவர்களைக்கொண்டுதான் கட்டணம் விதிக்கப்படும். இவ்வகையான வண்டிகளுக்கும், சைக்கில்களுக்கும் முன்சொல்லிய இரண்டுவகை இன்ஸுவரங்களும் செய்யலாம்.

முக்கிய குறிப்பு.

இதுவரை இன்ஸுவரம் செய்யும் விதங்களையும் மாதிரிகளையும்பற்றிச் சொன்னோம். இனி இன்ஸுவர்செய்து காயமோ, கைகால் ஊனமோ, அல்லது மரணமோ ஏற்பட்டால் அதில் என்ன பிரதிப்பிரயோஜனம், கம்பெனியார் கொடுக்கிறார்கள் என்பதைப்பற்றி கூறுவோம். சொந்தக்காரன் வண்டியில் இறந்துபோனால், ரூ. 15000.

இரண்டு கை, இரண்டு கண்கள் அல்லது ஒருகை, ஒரு கண் இவைகள் நாசமடைந்தால் ரூ. 7500.

ஒரு கை, அல்லது ஒரு கண் நாசமடைந்தால் ரூ. 3750.

அல்லது கைகால் முதலிய அவயவங்களுக்கு சீர்கேடு ஏற்பட்டு சிகிச்சைசெய்து செம்மையாகும்படி இருந்தால் அவ்வித சிகிச்சையிலிருக்கும் ஒவ்வொரு வாரத்துக்கும் ரூ. 75 வீதம் 26 வாரம்வரையும் கொடுக்கப்படும். இதற்கு சாதாரண இன்ஸூர் தொகைக்குமேல் ரூ. 30 ஜாஸ்தி கட்டணம் கொடுக்கவேண்டும்.

மோட்டாரை ஓட்டிச்செல்லுகிற டிரைவருக்கு மரணம் சம்பவித்தால் ரூ. 3000.

இரண்டு கைகளுமோ. கண்களுமோ அல்லது ஒரு கையும், ஒரு கண்ணுமோ ஊனமடைந்தால் ரூ 2251, ஒரு கை, அல்லது ஒரு கண் ஊனமடைந்தால் ரூ. 1500ம் கொடுப்பார்கள், இதற்கு அதிகக் கட்டணம் ரூ. 20.

திருட்டு.

வண்டியின்மேல் போட்டிருக்கும் துணிகளாவது, ராந்தல் முதலிய சில்லரைச்சாமான்களாவது களவுபோனல் அதற்குண்டான நஷ்டத்தையும் கம்பெனியார் கொடுப்பார்கள். இதற்கு அதிகக் கட்டணம் ரூ 15.

கட்டணம் இவ்வித மோட்டார் வண்டிகளுக்கு கட்டணம் செலுத்துவது எப்படியென்றால், மோட்டார் வண்டியின் கிரையத்தொகையின்பேரிலும், அது எவ்வளவு வேக குதிரை ஓட்டம் ஓடுகிறதோ அதன் பவரையொட்டியும் மேலேசொன்ன ஆபத்துக்களில் எந்தெந்தவகுப்புகள் இன்ஸூரம் செய்கிறவர் விரும்புகிறாரோ அவ்வவ்வகுப்புக்குத்தக்கபடியும் திருட்டுக்குவேண்டுமானல் அதற்குண்டான கட்டணமும் கொடுக்கவேண்டும். நாம் இதுவரை குதிரைகள், வண்

டிகள், மோட்டார்வண்டிகள் இவைகளின் இன்ஸூரத்தைப் பற்றியும் அவைகளில் ஏறிச்சவாரிசெய்யும் மனிதர்களின் இன்ஸூரத்தையும்பற்றிச் சொன்னோம். ஆனால் உலகத்தில் எல்லா ஜனங்களும் வண்டிகளிலும், மோட்டார்களிலும் ஏறிச்சவாரிசெய்யமுடியுமா, முடியாதாகையால் ஷெ சாதனங்களில்லாமல், பாதைசாரியாய் நடந்து செல்பவர்கள் அநேகம் பேர்களிருக்கின்றார்களே அவர்களுக்கும் ஆபத்துக்காக இன்ஸூரம் செய்யலாமா என்ற கேள்வியும் ஒன்று அவசியமாயிருக்கிறபடியால் அப்படிப்பட்டவர்களுக்கும் ஆபத்துக்காக, இன்ஸூர்செய்ய ஒருவிதமும் ஏற்பட்டிருக்கிறது. அதற்கு(**Personal Accident**)பேர்சனல் ஆக்சிடேண்ட் இன்ஸூரன்ஸ் என்று பெயர். அவ்வகை இன்ஸூரன்ஸையும் இதன் கீழ் விபரமாகக் கூறுவோம்.

(மோட்டார் கார் இன்ஸூரன்ஸ் முற்றிற்று.)

Personal Accident Insurance.

பேர்சனல் ஆக்ஸிடெண்ட் இன்ஸூரன்ஸ்.

அதாவது:

யாதாயினுமொரு மனிதனுக்கு அகஸ்மாத்தாய் திடீரென்று சம்பவிக்கக்கூடிய ஆபததுக்கு இன்ஸூர்செய்வது.

இத்தலைப்பெயர் வாய்ந்த இன்ஸூரன்ஸின் கருத்தாவது எந்த மனிதனுக்காவது அகஸ்மாத்தாய் திடீரென்று

PERSONAL ACCIDENT INSURANCE.

எதிர்பார்க்காத காலங்களில் சம்பவிக்கக்கூடிய விபத்துக்களினுல் நேரிடக்கூடிய ஆபத்துகளுக்கு இன்ஸுரர் செய்து கொள்வது.

அவை மூவகைப்படுகின்றது.

(1) சாதாரண ஆபத்துக்கள்.

(2) சாதாரண ஆபத்துக்களுடன் சிலவியாதிகளினுல் சீர்கேடேற்பட்டால் அதுவும் உள்பட.

(3) சாதாரண ஆபத்துக்களுடன் எல்லாவிதமான வியாதிகளினுல் ஏற்படக்கூடிய சீர்கேட்டுகளுக்கும் ஆபத்துகளுக்கும். இவ்விதமான இன்ஸுரரங்கள் ஏற்பட்டதற்குகாரணங்கள் என்ன என்பதையும் சற்றுகூறுவோம்.

1848ம் வருஷத்துக்குமுன் இப்போது ஓடிக்கொண்டிருக்கும் எக்ஸ்பிரஸ் ரயில் வண்டிகள் ஓடினதில்லை இவ்வருஷத்தில் எக்ஸ்பிரஸ் ரயில் ஓட ஆரம்பிக்கவே ரயிலில் பிரயாணம்செய்யும் பிரயாணிகளுக்கு அதிக ஆபத்துக்கள் ஏற்படவே, 1849ம் வருஷத்தில் இம்மாதிரியான இன்ஸுரன்ஸ் ஒன்று தேவையானதென்று ஆலோசித்து தீர்மானிக்கப்பட்டு ரயில்வே பாஸன்ஜர் அஷுரன்ஸ் கம்பேனி யென்று ஒன்று இங்கிலாந்து தேசத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. 1850 ஸூத்தில் ஆக்ஸிடென்ட் டெத் அஷுரன்ஸ் கம்பெனி ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. இக்கம்பெனி சில அதிகமான சீர்திருத்தங்களுடன் இவ்விதமான இன்ஷுரத்தை ஒப்புக்கொண்டு நடத்திவரவே 1880 ஸூத்துக்கும் 1897 ஸூத்துக்கும் இடையில் சுமார் நூறு கம்பெனிகள் ஸ்தாபிக்கப்பட்டு ஒவ்வொருகம்பெனியார்களும் இவ்விதமானஇன்ஷுரன்ஸை ஒப்புக்கொண்டு நடத்திவருகிறார்கள். 1892ஸூத்தில் லா ஆக்ஸிடேன்ட் அண்டு கண்டிஜென்ஸி சோஸையிட்டி என்

று ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு, அவர்கள் இவ்வித இன்ஸூரத்தில் முக்கியமான சிலவியாதிகளை மட்டும் ஒப்புக்கொண்டு நடத்திவந்தார்கள். இப்போது ஏறக்குறைய எல்லா கம்பெனியார்களும் சாதாரணமாய் எல்லாவிதமான வியாதிகளுடனும் ஒப்புக்கொண்டு இன்ஸூர் செய்துவருகிறார்கள்.

இம்மாதிரி எல்லாவிதமான இன்ஸூரன்ஸையும் ஒப்புக்கொள்ளக்கூடியதற்கு ஆக்ஸிடேண்ட் இல்னேஸ் இன்ஸூரன்ஸ் என்றுபெயர். இவைகள் மூவகையென முன்னமேயே கூறியிருக்கிறது, ஆனால் நாம் முதல்முதல் வாசித்த லைப் இன்ஸூரமானது வைத்தியபரிசோதனை மிகவும் அவசியமானதென்றும் அதன் விபரங்களையும் பிரபோசல் பாரத்தில் விடையளிக்கவேண்டிய அநேகவிஷயங்களையும் பற்றித்தெரிந்தோம் இப்போது வாசிக்கிற ஆக்ஸிடேண்ட் அண்டு ஸ்பேஷிபைட் இல்னேஸ் இன்ஸூரன்ஸுக்கு அம்மாதிரியான வைத்தியப் பரிசோதனை வேண்டுமென்கிற தேவையில்லை ஆனால் அடியிற்கண்ட பிரபோசல் பாரத்திலுள்ள கேள்விகளுக்கு மாத்திரம் செம்மையாய் பதில் எழுதியனுப்பவேண்டும்

அவைகளாவன:—

ஆக்ஸிடெண்ட் அண்டு ஸ்பெஸிபைட் இல்னெஸ் இன்ஸூரன்ஸை ஒப்புக்கொள்ளக்கூடிய கம்பெனிகளின் பொதுவான பிரபோசல் பாரம்.

1. இன்ஸூர் செய்யப்படுபவரின் முழுப்பெயர், விலாசம், பிறந்த வருஷம் மாதம் தேதி முதலியன.

2. ஷேயாரின் உயரம், நிரை.

3. அவருடைய தொழில்கள், ஒரு தொழிலுக்கு அதிகமாயிருந்தால் அதுவும்.

PERSONAL ACCIDENT INSURANCE.

4. எவ்விதமான தொழில் தொழில்ச்சாலையின் விலாசம் என்ன.

5. நீர் எப்போதாவது இம்மாதிரியான இன்ஸுரான்ஸ் செய்யவேண்டுமென்று எந்தக்கம்பெனியையாவது கேட்டதுண்டா?

6. அப்படி கேட்டபோது எந்தக் கம்பெனியாவது உம்முடைய இன்ஷுரான்ஸை ஒப்புக்கொள்ள முடியாதென்று மருதளித்ததுண்டா, அல்லது இன்ஷுர் செய்திருந்தால் அவ்வித இன்ஸுரான்ஸை மறுபடியும் புதுப்பிக்கும் காலத்தில் மருதளித்ததுண்டா?

7. அப்படி ஏதாவதிருந்தால் அதன் விபரங்கள். நீர் வேறுஎந்தக்கம்பெனியிலாவது இவ்விதமான இன்ஸுரான்ஸ் செய்து தற்காலம் அது அமுலிலிருந்து வருகிறதா.

8. அப்படியானால் எவ்வகையான இன்ஸுரான்ஸ், எந்தக்கம்பெனியில் எந்தக்காலத்தில் செய்தது. இப்பொழுது நீர் செய்வதாக உத்தேசப்படும் இன்ஸுரான்ஸ் எவ்வகைப்பட்டது?

9. உம்முடையகண்ணானது எப்போதாவது பலஹீனமடைந்ததுண்டா? அல்லது எப்போதாவது கண்வியாதியால் அவஸ்தைப்பட்டதுண்டா?

10. உம்முடைய திரேகம் எப்போதாவது சக்திக் குறைவடைவதுண்டா?

11. உமக்கு காதுநன்றாகக் கேட்கிறதா, உம்முடைய காதில் ஏதாவது வியாதிகள் நேர்ந்ததுண்டா, அப்படியானால் எப்படிப்பட்ட வியாதிகள் எத்தனை காலத்தில் எவ்விதமாய் நிவர்த்தியாயிற்று.

12. நீர் எப்போதாவது நரம்பு வியாதியிலாவது அல்லது மலமூத்திரங்களின் வியாதியிலாவது அல்லது வேறெந்த விதமான வியாதியிலாவது, பீடிக்கப்பட்டதுண்டா, அப்படியானால் எவ்விதமான வியாதி எப்பொழுது என்னவிதமாயிற்று?

13. உம்முடைய குழந்தைப்பருவமுதல் இதுவரை நீர் எவ்விதமான வியாதிகளாலாவது பீடிக்கப்பட்டிருந்து வந்திருக்கிறீரா?

14. இப்பொழுது உம்முடைய திரேகமானது திடமாகவும் நல்ல ஸ்திதியிலிருந்து வருகிறதா?

15. உம்முடைய திரேகம் எப்பொழுதும் ஒரே மாதிரியாகயிருக்கிறதா?

16. நீர் இதுவரை தொத்துவியாதிசம்மந்தமாய் பீடிக்கப்பட்டதுண்டா?

17. உம்முடைய குடும்பத்தவர்களில் யாருக்காயினும் மேலேசொன்ன வியாதிகள் உண்டா?

18. உம்முடைய தொழில்களினுல் ஏதாவது ஆபத்தேற்படக்கூடியதுண்டா? அப்படியானுல் எவ்வித தொழிலைக்கொண்டு வருகிறீர்?

19. நீர் செய்துவரும் தொழிலில் எந்தக்காரணத்திலாவது உமக்கு ஆபத்தாவது, காயலாவாவது நேரிடக்கூடியதென்று உமக்குத் தெரிந்திருந்தாலதுவும்.

20. நீர் எப்போதாவது ரயில்வண்டி மோட்டார் கார் அல்லது குதிரைவண்டி அல்லது மாட்டுவண்டி இவைகளில் உம்முடைய தொழிலுக்காக பிரயாணம் செய்வதுண்டா? அப்படி செய்வதாயிருந்தால் எந்தெந்தஊர்கள் எவ்விதமான பிரயாணங்கள் எந்தக்காலங்களில் செய்வது.

PERSONAL ACCIDENT INSURANCE.

21. நீர் குதிரைப் பந்தித்திலாவது, மோட்டார் பந்தியத்திலாவது அல்லது வேட்டையாடுவதிலாவது அல்லது மலைகளில் ஏறிப்போகும் பழக்கங்களில் சிரத்தையுடையவராவதுண்டா?

அப்படியானால் எவ்வளவு தொகை நஷ்ட ஈடுபெற பிரியப்பட்டு இன்ஸூர் செய்கிறீர், எவ்விதமான பாலிஸியை அடைய உத்தேசப்பட்டு இன்ஷூர் செய்கிறீர் என்ற விபரங்களை மேலேசொன்ன பிரபோசல்பாரத்தில் பூர்த்திசெய்து இன்னாருடைய குமாரன் இன்ன தொழிலையுடைய இன்னாராகிய நான் இன்னின்ன விதமான இன்ஸூரன்ஸ் செய்ய விருப்பமுடையவனாயிருக்கிறேன் என்ற சங்கதிகளை பூராவும் எழுதியனுப்பவேண்டும்.

அப்படி எழுதியனுப்பும் பிரபோசல் பாரத்தை கம்பெனியார் அங்கீகாரம் செய்துகொண்டு நீர் கோரியவிதப்படி இன்ஸூர் செய்தாலும் செய்யலாம். இல்லாவிடில் தள்ளிவிட்டாலும் தள்ளிவிடலாம்

மேலேசொன்ன எல்லா கேள்விகளுக்கும் இன்ஸூர் செய்யப்படுபவரால் அளிக்கப்பட்ட விடைகள் திருப்திகரமாயிருந்து கம்பெனியாரும் ஒப்புக்கொள்வதாயிருந்தால், இவ்விதமான பாலிஸியில் இன்னவருஷம் இன்னமாதம் இன்னதேதி முதல்கொண்டு இன்னவருஷம் இன்னமாதம் இன்னதேதி வரையில் இன்னபேருடைய இன்னார் குமாரர் இன்னாருக்கு இன்ன கம்பெனியார் ஆக்ஸிடெண்டு அண்டு ஸ்பெஸிபைட் இல்னேஸ் இன்ஸூரன்ஸ் என்னும் பாலிஸி பத்திரத்தை, அதில் மேற்சொல்லியபடி எந்தெந்தபாகங்களைச் சேர்த்து இன்ஸூர் செய்கிறார்களோ அந்தந்த பாகங்களுக்குண்டான அதிகமான பிரிமியத்தொகையுடன் இன்ஸூர்

பேர்சனல் ஆக்ஸிடேண்ட் இன்ஸுரன்ஸ்.

இன்ன கம்பெனியின் ஏஜண்டு இன்ன ஊரிலுள்ள, இன்னர் மேலே சொல்லப்பட்ட சகலவிதமான ஆபத்துக்களுக்கும் ஒப்புக்கொண்டு அதற்கேற்பட்டரூபாய் இவ்வளவு பெற்றுக் கொண்டு, இன்னவருஷம் இன்னமாதம் இன்னதேதி முதல் கொண்டு, இன்னவருஷம் இன்னமாதம் இன்னதேதிவரை பேர்சனல் ஆக்ஸிடேண்ட் அண்டு ஸ்பெஸிபைட் இல்நேஸ் என்னும் இன்ஸுரன்ஸை அதன் பாலிஸியில் கண்டவிதிப் படி ஒப்புக்கொள்ளுகிருர்கள் என்று மேலேசொல்லப்பட்ட படி ஒப்புக்கொண்டு பிரிமியத்தைப் பெற்றுக்கொண்டு பாலி ஸி கொடுப்பார்கள். இப்படி கொடுக்கக்கூடிய பாலிஸி அல் லது பீமாபத்திரத்துக்கு வைத்தியபரிசோதனை தேவையில் லையென்று முன்னமேயே சொல்லியிருக்கிறோம். அதிலும் இவ்விதமான இன்ஸுரம் ஒரு வருஷத்துக்குத்தான் செய் யலாம். அப்படி ஒருவருஷம்முடிந்தவுடன் கம்பெனியாருக்கு திருப்திகரமாய் இருந்தால் மறுபடியும் இவ்வித இன்ஸுரத் தை புதுப்பிக்கலாம் அப்படி புதுப்பிக்கும்போது இன்ஸுர் முடிவடைந்த 14 தினங்களுக்குள் இன்ஸுர் செய்தவர் தம் பிரிமியத்தை கம்பெனியாருக்கு செலுத்தக்கட்டுப்பட்டிருக் கிருர்கள், ஆனல் அப்படி புதுப்பிக்கும் காலத்தில் கம்பெனி யாருக்கு திருப்திகரமில்லையென்று தோன்றினல் அவ்வித இன்ஸுரத்தை கம்பெனியார் தள்ளிவிட்டாலும் தள்ளி விடலாம். அதுவிஷயமாய் எந்தவிதமான பாத்தியதையைக் கோருவதற்கு இன்ஸுர் செய்தவருக்கு எவ்விதமான அதி காரமுமில்லை. இம்மாதிரியான இன்ஷுரம் மூன்று வகை யென முன்னமேகூறியிருக்கிறோம், ஆயினும் அப்படி இன் ஷுரம் செய்யப்படுபவர்களேயும் மூன்று வகுப்பினர்களாக வகுக்கப்பட்டிருக்கின்றன.

PERSONAL ACCIDENT INSURANCE.

அவைகளாவன:—

1. கணக்கப்பிள்ளைகள், பாங்க்கர்கள், பாரிஸ்ட்டர்கள், வைத்தியர்கள், வியாபாரிகள், வியாபாரச்சங்கத்திற்கு உதவியாளர்கள், கைகால்கள் அல்லது ஒரு கை ஒரு கால் அல்லது ஒரு கண் அல்லது இரண்டு கண்கள் ஊனமேற்பட்டாலாவது மேல்சொல்லியபடி ஓராயிரத்துக்கு வருஷம் 1க்கு 7 ரூபாய் வீதமும், அல்லது ஒரு கை ஒரு கால் ஒரு கண் ஊனமடைந்தால் ரூ 1000க்கு 3—8—0வீதமும் பிரிமியம் செலுத்தினால் அவர்கள் ஊனமடைந்துசிகிச்சையிலிருந்தால் சொஸ்தப்படும் காலம்வரை வாரம் 1க்கு ரூ. 15வீதம் கொடுப்பதாகவும், அப்படி கொடுக்கப்படும் காலமானது 4 வாரத்துக்கு அதிகப்படக்கூடாததாகவும் 1, 2, வாரமானால் மேற்சொல்லியபடி வாரம் ஒன்றுக்கு 15 ரூபாய்வீதமும், அல்லது ஷியான் வேலைசெய்ய லாயக்கில்லாதவனாய் போய்விடும் காலத்தில் ரூபாய் ஆயிரமும் கொடுப்பதாகவும்.

2. பயிரிடுபவர்கள், இன்ஜினீர்கள், ஷி வேலைகளை மேற்பார்க்கக்கூடியவர்கள் இவர்களாயிருந்தால் மேல்சொல்லிய ஒன்றாவது வகுப்பில்கண்டபடி ரூபாய் 1000க்கு வருஷம் 1க்கு ரூபாய் 8 வீதமும் கிளாஸ் III மோட்டார் இன்ஜினீர்கள் அல்லது ஆடு மாடுகளுக்கு வைத்தியம்செய்பவர்கள் இவர்களாயிருந்தால் வருஷம் 1க்கு ஆபத்தேற்படும் காலத்தில் பெறக்கூடிய ஒவ்வொரு ஆயிரரூபாய் நஷ்ட ஈட்டுக்கும் சுமார் ரூபாய் 16 வீதம் பிரிமியம் கொடுக்கவேண்டும்.

இம்மாதிரி இன்ஸூரம்செய்ய விரும்புகிறவர்கள் மேலே சொல்லிய பிரபோசல் பாரத்தில்கண்ட விபரங்களைப்பூர்த்தி செய்து தாங்கள் இன்னவிதமான இன்ஸூரன்ஸூ செய்ய விரும்புகிறார்களென்று இவ்வித இன்ஸூரன்ஸை ஒப்புக்

கொள்ளும் எவ்வித கம்பெனியாருக்காவது அல்லது அவ்வித கம்பெனியாரால் ஏற்படுத்தப்பட்ட அதிகாரம்பெற்ற ஏஜண்டுக்காவது கம்பெனியின் பிரபோசல் பாரத்தை பூர்த்திசெய்து அனுப்பிவைக்கவேண்டும். அதன்பேரில் கம்பெனியார் அதற்குண்டான நியாயமான கட்டணத்தைப்பெற்றுக் கொண்டு இன்ஸூர் செய்யவிரும்புகிறவர் எம்மாதிரியான பாலிஸிப் பத்திரத்தை கோருகிருரோ அம்மாதிரியான பாலிஸி பத்திரத்தை அதற்குண்டான இன்ஸூரன்ஸ் ஸ்டாம்பையும் ஒட்டி கையெழுத்துச்செய்து கம்பெனியாரின் முத்திரையும், ஏஜண்டின் விலாசம், பேர் முதலியவைபடங்கிய முத்திரைச் சீலையும் வைத்து இன்ன கம்பெனிக்கு ஏஜண்டாராகிய இன்னூர் இன்னபேருடைய இன்ன ஊரிலிருக்கும் இன்னுரை பெர்ஸினல் ஆக்ஸிடண்ட் அண்டு ஸ்பெஸிபைடு இல்னெஸ் இன்ஸூரன்சாக ஒப்புக்கொண்டு இவ்வளவு தொகைக்கு ஏற்பட்ட பிரிமியம்ரூபாய் இவ்வளவையும் பெற்றுக் கொண்டு மேலேசொல்லப்பட்ட சட்டதிட்டங்களுக்குட்பட்டு இன்னவருஷம் இன்னமாதம் இன்னதேதிவரை அமுலிலிருக்கக் கட்டுப்பட்டதென்று இன்னதேதியில் கம்பெனியார் கையெழுத்து வைக்கின்றூர்கள். அல்லது ஏஜண்டாயிருந்தால் இன்ன கம்பெனியாருக்காக இன்ன ஊரிலுள்ள அதிகாரம்பெற்ற ஏஜண்டு இன்னூர் இன்னவருஷம் இன்னமாதம் இன்னதேதியில் கையெழுத்துச்செய்து அதற்குண்டான பிரிமியத்துகை ரூபாய் இவ்வளவையும் பெற்றுக்கொண்டிருக்கிருர்கள். ஆனல் இன்ஸூர்செய்யப்பட்டவர் ஒரு வருஷகாலத்திற்குள் எவ்வித ஆபத்துக்கும் உள்படாமல் இன்ஸூர்செய்த கம்பெனியினிடமிருந்து எவ்வித நஷ்டத்தையும் கோரப்படாமல் மருவருஷத்துக்கு மறுபடியும் இன்ஸூ

PERSONAL ACCIDENT INSURANCE.

ரம்செய்ய விரும்பினால் அவர்களுக்கு ஷேயார்கள் செலுத்தும் பிரிமியத்தில் 100க்கு இவ்வளவு தள்ளிக்கொடுப்பதாக கம்பெனியார் தீர்மானித்திருக்கிறார்கள். அப்படி அநேகவருஷம் மேல்சொல்லியபடி கம்பெனியாரிடமிருந்து நஷ்ட ஈடு பெறாமல் இன்ஷுர் செய்பவர்களுக்கு முன்சொல்லியதிலும் இன்னம் ஜாஸ்தியாக 100க்கு இவ்வளவுதள்ளிக்கொடுப்பது என்கிற சாதகத்தையும் கம்பெனியார் தீர்மானித்திருக்கிறார்கள். ஆனால் இன்ஸுர் செய்யப்பட்டவர் அடியிற்கண்ட பாலிஸியின் நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டிருக்கவேண்டும்,

அதாவது:— பாலிஸி

(1) இன்ஷுர் செய்யப்பட்டவர் யுத்தகளத்தில் காயமடைந்தாலாவது அல்லது மரணமடைந்தாலாவது

(2) ஷேயார் குதிரைப்பந்தியங்களில் ஏரிச்சவாரி செய்து அதினால் விபத்து ஏற்பட்டாலாவது.

(3) அல்லது வண்டிப்பந்தியங்களில் சவாரிசெய்யும் காலத்தில் ஏற்படக்கூடிய ஆபத்துக்காவது

(4) அல்லது பொதுஜனங்களோடு சண்டைபோட்டு அதினால் ஏற்படக்கூடிய ஆபத்துக்காவது.

(5) அல்லது எவ்வித ரயில்பாதையில் அல்லது டிராம் வண்டிப்பாதைகளில், சட்டவிரோதமாய் நடந்துகொண்டிருக்கையில் ஏற்படக்கூடிய ஆபத்துக்காவது.

(6) அல்லது கப்பல்துறைகளில், சட்டவிரோதமான இடங்களில் நடந்துகொண்டிருக்கும்போது ஏற்படக்கூடிய ஆபத்துக்காவது

(7) அல்லது கோபுரங்கள் அல்லது உயரமான ஸ்தம்பங்கள் இவைகளில் ஏறும்போதாவது இறங்கும்போதாவது உண்டாகக்கூடிய ஆபத்துகளுக்கும்.

கம்பெனியார் ஒப்புக்கொள்ளமாட்டார்கள் என்று இவ்வித நிபந்தனைகளையுங்கண்ட பாலிஸிக்கு, பேர்ஸனல் ஆக்ஸிடேன்ட் ஸ்பெஸிடைடு இல்னேஸ் இன்ஸூரேன்ஸ் என்று பெயர்.

நேயர்களே! இதுவரை மனிதர்களுக்கு சாதாரண சமயங்களில் ஏற்படக்கூடிய ஆபத்துக்கும் வியாதிக்கும் உண்டான இன்ஷூரன்ஸைப்பற்றிச் சொன்னோம். இனி கூலி ஆள்கள் வேலைசெய்யும் காலத்தில் ஏற்படக்கூடிய ஆபத்துக்கும் ஒரு இன்ஷூரன்ஸ் இருக்கிறது. அதற்கு வொர்க்மென் காம்பென்சேஷன் இன்ஷூரன்ஸ் என்றுபெயர். அதன் முக்கிய விபரத்தையும் இதன்பின் கூறுவோம்.

(பேர்சனல் ஆக்ஸிடேண்ட் இன்ஸூரன்ஸ் முற்றிற்று)

Work Men's Compensation Insurance.

வொர்க்மென் காம்பன்சேஷன் இன்ஷூரன்ஷ்.

இப்பெயர் வாய்ந்த இன்ஷூரத்தின் பொருள் என்னவென்றால், கூலியாள்கள் வேலைசெய்யும் காலங்களில் அகஸ்மாத்தாய் சம்பவிக்கக்கூடிய ஆபத்துக்களுக்கு ஷியார்கள் கூலிக்குத்தக்கபடி ஷியார்கள் சௌகர்யமடையும்வரை ஷியார்களை போஷிப்பதற்காக கொடுக்கக்கூடிய பிரதிப்பிரயோஜனம். இவ்வகையான இன்ஷூரன்ஸ் எப்படி உண்டாயிற்று என்பதையும் சற்றுகூறுவோம்.

1846ஷு முதல்முதல் பேட்டல் ஆக்ஸிடென்ட் ஆக்ட் என்று ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. அதன்பிறகு 1880ஷுத்

தில் இங்கிலாந்து தேசத்தில் எம்ப்லாயர்ஸ் லயபிலிடி ஆக்ட் என்று ஒன்று ஏற்பட்டது. 1906 ஹூ த்தில் இப்பெயர்வாய்ந்த வோர்க்மேன் காம்பன்சேஷன் ஆக்ட் வெளிவந்தது. அக்காலமுதல் இவ்வகைச் சட்டமானது அப்போதைக்கப் போது வேண்டிய மாறுபாடுகளுடன் நடைபெற்று 1923 ஹூ த்தில் அநேக முக்கிய மாறுபாடுகளுடன் ஊர்ஜிதப்படுத்தப்பட்டு செம்மையாய் நடந்தேறிவருகிறது. இதன் கருத்தாவது எந்ததொழில்சாலையிலாவது, கட்டிடவேலைகளிலாவது, ரசாயனம் அதாவது உலோகங்களை உருக்கக்கூடிய தொழிற்சாலைகளிலாவது, பூமியிலிருந்து வெட்டி எடுக்கப்படும் தங்கம், வெள்ளி, இரும்பு, நிலக்கரி முதலிய தொழிற்சாலைகளிலாவது வேலைசெய்யும் கூலிஆள்களுக்கு அகஸ்மாத்தாய் சம்பவிக்கக்கூடிய ஆபத்துகளுககு பிரதிப்பிரயோஜனம் செய்வதேயாகும். இவ்வகையான இன்ஷூரமும், பலவகைப்படும், அதாவது மேலேசொல்லப்பட்ட தொழில்சாலைகளில் வேலைசெய்பவர்களைத்தவிர அடியிற்கண்ட தொழிற்சாலைகளில் வேலை செய்யப்படுபவர்களுக்கும் இவ்வகையான இன்ஷூரம் செய்துகொள்ளலாம்.

(1) வெடிமருந்து தொழிற்சாலையில் வேலை செய்பவர்கள்

(2) நெருப்புப்பெட்டி பாக்டரிகளில் வேலை செய்பவர்கள்.

(3) பருத்தியரைக்கும் யந்திரங்களில் வேலை செய்கிறவர்கள்.

(4) அரிசி அரைக்கும் யந்திரங்களில் வேலைசெய்பவர்கள்.

(5) ஜூட் அதாவது சணல்நாரினால் நெசவு செய்யப்பட்ட யந்திரங்களில் வேலை செய்பவர்கள்.

(6) துணி நெசவு செய்யும் யந்திரங்களில் வேலைசெய் பவர்கள்

(7) கம்பளித்துணி நெசவு செய்யும் யந்திரங்களில் வேலை செய்பவர்கள்.

இம்மாதிரியான தொழிற்சாலைகளில் வேலைசெய்யும் காலத்தில் ஏதாவது அகஸ்மாத்தான ஆபத்தேற்பட்டு அவ்விதமான கூலியாள்கள் வேலைசெய்ய சக்தியற்றவர்களாய் ஏற்படும் காலத்தில் அவர்களின் வைத்திய சிகிச்சைக்காகவும் சாப்பாட்டு சிலவுக்காகவும் பிரதிப்பிரயோஜனமாகக் கொடுக்கக் கூடிய நஷ்டஈடு.

எப்படி இன்ஸூர் செய்வது.

இம்மாதிரியான இன்ஸூரன்ஸ் ஒரு பேக்ட்டரி அல்லது ஒரு குதாம்பில் வேலைசெய்யும் மானேஜர் உள்பட எல்லா சிப்பந்திகளுக்கும் சேர்த்துதான் இன்ஷூரன்ஸ் செய்யப்படவேண்டும். அப்படி இன்ஷூர்செய்து நடந்துவருங்காலத்தில் இன்ஸூர்செய்யப்பட்ட எவ்வித கூலியோ, மானேஜரோ, சிப்பந்திகளோ, இன்ஸூரம் முடிவடையுமுன் அக்கம்பெனியைவிட்டு நீங்கிவிட்டாலாவது அல்லது வேறு எவ்வித காரணத்திலாவது வேலையைராஜிநாமா செய்துவிட்டாலாவது அப்படிப்பட்டவர்களின் இன்ஸூரத்தை அவர்களுக்கு பதிலாக வேலைபார்க்கும் சிப்பந்திகளின்பேரில் டிரான்ஸ்பர்செய்துகொள்ளலாம். அப்படி டிரான்ஸ்பர் செய்யுங்காலத்தில் எல்லாவிதமான விபரத்துடன் கம்பெனியாருக்கு தெரியப்படுத்தி கம்பெனி புஸ்தகத்திலும் பதிவுசெய்துகொள்ளவேண்டும்.

நஷ்ட ஈடு அடைவது.

மேலே சொல்லப்பட்ட குதாம்புகளில் வேலைசெய்பவர்கள் வேலைசெய்யுங்காலத்தில் எவ்விதமான அகஸ்மாத்தான ஆபத்துக்குட்பட்டு வேலைசெய்ய சக்தியற்றவர்களாய் ஏறபடும் காலத்தில் ஷியார்களின் கூலிக்குத்தகுந்தபடி மறுபடியும் வேலைக்குத்திரும்பிவர முடியுமட்டும் சாப்பாட்டுக்காகவும், வைத்திய சிகிச்சைக்காகவும், வாரத்துக்கு இவ்வளவு என்று அந்தஸ்துக்குத்தக்கபடியும், சம்பளம் அல்லது கூலிக்குத்தக்கபடியும், கம்பெனியார் நஷ்டஈடு கட்டிக்கொடுக்க சம்மதப்படுகிறார்கள். ஆனால் இன்ஷூர் செய்யப்பட்டவர் வேலைசெய்யாத இதர நேரங்களில் வழியில் போய்க்கொண்டிருக்கும்போதாவது அல்லது சண்டை சச்சரவுகளினாலாவது, ஏற்படக்கூடிய அகஸ்மாத்தான சம்பவங்களினால் விளையக்கூடிய ஆபத்துக்களுக்காவது பிரதிப்பிரயோஜனம்கொடுக்க கம்பெனியார் கட்டுப்பட்டவர்களல்ல ஆனால் மேலே சொல்லப்பட்டபடி சிப்பந்திகள் வேலைசெய்யும் காலத்திலும்கூட இன்னசெய்கையினால் இன்ன ஆபத்தேற்படக்கூடுமென்று தெரிந்திருந்து அம்மாதிரியான விஷயத்தை தலைவருக்குத் தெரியப்படுத்தாமல்போனாலும், அல்லது அதற்குண்டான பாதுகாப்புச்செய்ய அசட்டையாயிருந்து அதினால் ஆபத்தேற்பட்டு சிப்பந்திகள் திரேகக்குறைவு அல்லது சீர்கேட்டை அடைந்தால் அவ்வித நஷ்டத்தைக் கொடுக்கவும் கம்பெனியார்கள் கட்டுப்பட்டவர்களல்ல.

ஒரு தொழிற்சாலையின் சிப்பந்திகளோ, அல்லது கூலியாட்களோ இன்ஷூரன்ஸ் கம்பெனியிடமிருந்து எவ்வித நஷ்டஈட்டைப்பெற விரும்புவார்களானால், அப்போது ஷி சிப்பந்திகளுக்கோ, கூலியாட்களுக்கோ, நேர்ந்தவிபத்தா

WORK MEN'S COMPENSATION INSURANCE.

து கம்பெனியின் கட்டிடத்தில் வேலைசெய்யும் காலத்தில் இன்னவிதமான தவருதலினுல் இன்னவிதமான ஆபத்தேற்பட்டு இன்னவிதமான கஷ்டத்துக்குள்ளானுர்களென்பதை கம்பெனியாருக்கு திருப்திகரப்படுத்தவேண்டும்.

உதாரணம்

இதன் விஷயமாக சில உதாரணங்களையும் இங்கு விவரிப்போம், இப்போது ஏதாவது ஒரு தொழிற்சாலையை எடுத்துக்கொள்வோம் அதாவது நிலக்கரி தொழிற்சாலையில் வேலைசெய்யும் கூலி ஆட்கள் இன்ஷூர் செய்திருக்கிறுர்கள் என்று வைத்துப்பேசுவோம். இப்படி வேலைசெய்துகொண்டிருக்கும்போது, அநேககூலிகளில் ஒருவன் தொழிற்சாலைக்கு வெளியேபோய் தண்ணீர்சாப்பிடப்போகிறுன் அவன்திரும்பிவேலைக்கு வரும்போது வழியில் ஏதாவதவனுக்கு ஆபத்தேற்பட்டால் அவ்வித ஆபத்துக்கு கம்பெனியார் நஷ்டஈடு கொடுக்க கட்டுப்படமாட்டார்கள். ஏனென்றுல் தொழிற்சாலையில் கூலிகளுக்கு போதுமான தண்ணீர் வைக்கப்படாத தோஷம் தொழிற்சாலையை நடத்துபவருடைய அசட்டையேயாகும்.

வொர்க்மென் காம்பன்சேஷன் இன்ஷூரன்ஸ் (முற்றிற்று)

Guarantee Insurance.

கேரண்டி இன்ஷூரன்ஸ்.

நேயர்களே! இதுவரை பலவிதமான இன்ஷூரங்களைப் பற்றி வாசித்தோம், இப்போது காரண்டி இன்ஷூரன்ஸ் என்னும் இப்பெயர்வாய்ந்த இன்ஷூரன்ஸின் விபரம் என்ன

என்பதையும் கவனிப்போம். இதன் முக்கியகருத்தாவது, ஒரு மனிதனுக்காக மற்றொருசங்கத்தார் அல்லது கம்பெனியார் ஜாமீன் ஒப்புக்கொள்வது இவ்விதமான இன்ஷுரன்ஸ் 1720 ஞூமுதல் ஆலோசனையிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக நடைபெற்று 1840 ஞூத்தில் காரண்டி சோசையிடி என்று ஒரு கம்பெனி லண்டன் நகரத்தில் ஸ்தாபிக்கப்பட்டு இவ்விதமான இன்ஷுரன்ஸை ஒப்புக்கொண்டு நடத்திவந்தது, அதன்பிறகு ஏராளமான கம்பெனிகள் ஏற்பட்டு இப்போது அநேக கம்பெனியார்கள் இவ்விதமான இன்ஷுரன்ஸை ஒப்புக்கொண்டு நடத்திவருகிறார்கள், இம்மாதிரிஜாமீன் கொடுக்கப்படும். காரண்டி இன்ஸுரன்ஸும் பலவகைப படுகின்றன, அவைகளாவன:—

(1) பாங்கிகளிலும், ரயில்வே கம்பெனிகளிலும் வேலை பார்க்கும் குமாஸ்தாக்கள்.

(2) வியாபார சம்பந்தமாய் நியமிக்கப்பட்ட சிப்பந்திகள், காஷ்கீபர்கள் அதாவது பொக்கிஷதாரர்கள்.

(3) பொதுவாய் ஸ்தாபிக்கப்பட்ட கம்பெனிகளில் வேலைபார்க்கக்கூடிய மானேஜர்கள், செகிரெடெரிகள்.

(4) வியாபாரத் தொழில்முறையில் நிலுவை வசூல் செய்யப்பட்டவர்கள்,

(5) தபாலாபீஸில் வேலைபார்க்கக்கூடிய சிப்பந்திகள்

(6) பில் கலெக்ட்டர்கள்.

(7) வேறு எந்தவிதமான உத்தியோகமுடையவராவது, பணப்பொருப்புக்குட்பட்டிருப்பது.

இம்மாதிரியானவர்கள் செல்வவான்களாய் இருந்தாலும் இருக்கலாம். அல்லது ஏழைகளாயிருந்தாலும் இருக்கலா

ம். அப்படி ஏழைகளாயிருந்து அவர்களால் ஜாமீன்கொடுக்க சக்தியற்ற காலத்தில் யார் யார் எங்கெந்த வேலையில் இருக்கிறார்களோ அவர்களுக்கு எவ்வகையான ஜாமீன் தேவையிருக்கிறதோ, அவ்வகையான ஜாமீன்கொடுக்க கம்பெனியார் கட்டுப்பட்டு அதற்கு 100க்கு ரூ 1க்கு இவ்வளவு ரூபாய் கட்டணம் வீதம் பிரிமியம் பெற்றுக்கொண்டு அடியிற்கண்ட பிரபோசல் பாரத்தையும் பூர்த்திசெய்து அனுப்பியதின்பேரில், பிரபோசல் செய்துகொண்ட நபருக்கு காரண்டி இன்ஷூரன்ஸ் என்னும் பாலிஸி கொடுப்பார்கள். இம்மாதிரி கொடுக்கப்பட்ட பாலிஸியை, பாலிஸிதாரர் தங்களுக்கு எந்த இடத்தில் ஜாமீன்கேட்கிறார்களோ, அந்த இடத்தில்கொடுத்து வேலையை ஒப்புக்கொள்ளலாம்.

பிரபோசல் பாரம்.

1 உன் முழுப்பெயர், விலாசம், இருப்பிடம் முதலியவை.

2 உன் முழுவயது, எந்தத்தேதியில் ஜெனனம்.

3 உமக்கு சொந்தமான வீடு உண்டா?

4 நீர் குடும்பமுடையவரா அப்படியானால் குழந்தைகள் எத்தனை?

5 எத்தனை நபர்கள் உன் கையின்கீழ் போஷிக்கப்பட்டு வருகிறாகள்?

6 நீர் கோருகிற ஜாமீன்துகை எவ்வளவு?

7 நீர் என்ன வேலை செய்யப்போகிறீர்?

8 எப்போதும் உம்மிடம் இருக்கக்கூடிய அல்லது உம்மை நம்பக்கூடிய துகை எவ்வளவு, உம்முடைய கையிலிருக்கும்?

9 உம்முடைய உத்தியோகத்தில் மாதம் என்ன சம்பளம் கிடைக்கிறது?

10 சம்பளம்தவிர வேறு ஏதாவது சன்மானம் உமக்குக்கிடைக்கிறதா?

11 இந்த உத்தியோகத்தைவிட வேறு தொழில் ஏதாவது செய்கிறீரா, அப்படியானல் அதில் எவ்வளவு வரும்படி வரும்?

12 நீர் இதற்குமுன் யாருக்காவது ஜாமீன் நின்றிருக்கிறீரா?

13 நீர் எப்போதாவது கடன் பட்டதுண்டா, அப்படியிருந்தால் அக்கடனை தீர்க்கமுடியாமல் இன்சால்வென்ட் ஆனதுண்டா?

14 உமக்கு சொந்தக்கடன் இப்போது உண்டாயிருந்தால் எவ்வளவுதுகை.

15 சென்ற பத்து வருஷகாலமாக எவ்விதமான தொழிலைச்செய்து வந்திருக்கிறீர்?

16 நீர் இதற்குமுன் எந்தக்கம்பெனியிலாவது இம்மாதிரியான ஜாமீனைக்கோறினதுண்டா? அப்படியானல் அதன்முடிவு என்ன?

POLICY FORMS.

பாலிஸிகளின் விபரங்கள்.

இவை மூவகைப்படுகின்றன அவைகளாவன:—

(1) வியாபாரவிஷயமாய் ஏற்படக்கூடிய ஜாமீன் பத்திரங்கள், அதாவது பாங்குகளிலாவது, ஒரு வியாபாரச் சங்கங்களின் பொருட்டாவது, வெளியூர்களில்போய் வசூல்

GUARANTEE INSURANCE.

செய்யும் ஏஜண்டுகளாவது. அல்லது ஆபீசில் கியாஷ்கீபர், அல்லது கஜானச்சிவேலையை ஒப்புக்கொள்ளப்படுகிற ஏதாயினுமொரு நபருக்காவது.

(2) கவர்ன்மெண்டுக்கு சம்மந்தப்பட்ட எவ்வகையான ஜாமீன் அல்லது போஸ்டாபீஸ்கள், லோகல் கவர்ன்மெண்டு, அல்லது கஸ்டம்ஸ்டூட்டி வசூலிக்கபபடும் ஆபீசுகள் அல்லது எக்ஸைஸ் ஆபீஸ் அதாவது அபின், கள்ளு, சாராயம் முதலியவைகளை கவர்ன்மெண்டார் உத்திரவுப்படி கிரையவிற்கிரையம் செய்ய அதிகாரம்பெற்ற ஏஜண்டுகள், இவ்வகை ஜாமீன் ஒப்புக்கொள்ளப்படும் சமயத்திலாவது.

(3) சட்டசம்மந்தமாய் ஏற்படக்கூடிய ஆபிஷல் அஸைனி அல்லது மற்றொருவர் சொத்துக்காக கவர்ன்மெண்டார் பாதுகாக்கக் கடமைப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்திலாவது அல்லது மற்றொருவருடைய சொத்தையாவது நீதி செலுத்தும்பொருட்டு கவர்ன்மெண்டார் ஏலம் அல்லது விற்கிரையம் செய்புங்காலத்திலாவது பொருப்பாயுள்ள நபர்களுக்கும், இவ்வகையான மேலேகண்ட விஷயங்களில் கொடுக்கும் ஜாமீனுக்கு கேரண்டி இன்ஸூரன்ஸ் என்றுபொருள்படும், இவ்வித பாலிஸிகளை அநேகமாய் முதல்தரமான இன்ஷூரன்ஸ் கம்பெனிகள் மாத்திரம் ஒப்புக்கொண்டு நடத்தி வருகின்றன.

இப்படி இன்ஸூர்செய்வதில் ஒவ்வொரு கம்பெனியாரும் அதிக சிரத்தையும் பாதுகாப்புமுள்ளவர்களாயிருக்கின்றார்கள். அதிலும் சில கம்பெனிகள் தங்கள் தங்கள் பில் கலெக்ட்டர்கள் அல்லது கம்பெனிக்குண்டான துகையை வசூல்செய்யும் சிப்பந்திகளுக்கு தாங்களே ஷை கேரண்டி இன்ஸூரன்ஸ் அல்லது ஜாமீன் இன்ஸூரத்துக்குவேண்டிய

சந்தா தொகைகளை செலுத்தி அவ்விதமான பாலிஸிகளை கம்பெனியாரின் பாதுகாப்புக்காக பெற்றுக்கொண்டு ஷேயார்களின் ரிக்கார்டில் பதிவுசெய்து பைலில்வைத்து வருகிறார்கள்.

நாம் கேரண்டி இன்ஷூரன்ஸ் என்பதை சுருக்கமாகச் சொன்னோம் இனி பர்க்லரி (Burglary) திருட்டு இன்ஷூரம் என்பதையும் என்ன என்று தெரிவோம்.

(கேரண்டி இன்ஷூரன்ஷ் முற்றிற்று)

Burglary Insurance.

பர்க்லரி இன்ஷூரன்ஷ்.

நாம் இதற்குமுன் கேரண்டி இன்ஷூரன்ஸைப்பற்றி தெரிந்தோம் இப்போது பர்க்லரி இன்ஸூரன்ஸ் என்பது என்ன என்று விவரிப்போம் இவ்விதமான இன்ஸூரன்ஸானது, பொதுவாக ஜனங்கள் திருட்டுக்கும், கொள்ளைக்கும், செய்துகொள்ளக்கூடிய இன்ஸூரன்ஸ் இது திருட்டுக்கு இன்ஸூரன்ஸ் என்று பொருள்படும். இவ்விதமான இன்ஷூரன்ஸை ஒப்புக்கொள்ளக்கூடிய கம்பெனிகள் சாதாரணமாய் முக்கியமாய் உயர்தரநிலைமையிலிருக்கிற ஐரோப்பியர்களிடத்தில் தான் அதிகமாக சம்பந்தப்பட்டிருக்கிறது, ஆனால் இந்தியர்களிலும் உயர்தரமானவர்களுக்கும் கூட சில கம்பெனிகள் ஒப்புக்கொள்ளுகிறது. ஆயினும் இது ஏற்பட்ட காரணம் என்ன? எந்த காலமுதல் வழங்கிவருகிறது. இதன் விஷயம் என்ன? என்பதின் முக்கிய சாராம்சத்தையும் விவரிப்போம். இவ்விதமான இன்ஷூரத்தை 1846-ம்

BURGLARY INSURANCE.

வருஷத்தில் இங்கிலாந்து தேசத்தில் லண்டன்மாநகரத்தில் தீ பிராப்பர்டி புரோடக்ஷன் இன்ஸூரன்ஸ்கம்பெனியானது ஒப்புக்கொள்ள ஆரம்பித்தது அதன்பிறகு 1853வருஷத்தில் தி ஜெனரல் இண்டெம்னிடி இன்ஸூரன்ஸ் கம்பெனி திருட்டுக்கும் கொள்ளைக்கும் ஒப்புக்கொள்வதாக முன்வரவே அதன்பிறகு கொஞ்சகாலத்துக்குள் சுமார் அறுபத்தைந்து கம்பெனிகள்வரை இம்மாதிரியான இன்ஸூரங்களை ஒப்புக்கொள்வதாக மும்முரமாய் வெளியேறின இப்பொழுது அதிலும் ஜாஸ்தியான அநேக கம்பெனிகள் இம்மாதிரியான இன்ஸூரத்தை ஒப்புக்கொள்ளுகின்றன, தனவந்தர்களுக்கும், அதிக செல்வவான்களுக்கும், வியாபாரிகளுக்கும், இவ்விதமான இஸூரன்ஸ் எண்ணற்ற உபகாரத்தையளிக்கின்றன.

இது இருவகைப்படும்:—

(1) வாஸ்தவமாய் திருட்டுப்போன சொத்துக்களுக்கும்.

(2) திருட்டுப்போன கடைக்கோ, அல்லது வீட்டுகளுக்கோ, அல்லது சரக்குகளின் பாகங்களுக்கோ, ஏற்படக்கூடிய ஹானிக்கும், நஷ்டஈடு கட்டிக்கொடுக்க ஒப்புக்கொள்வது.

இதன் உள்பிரிவு:—

தான் குடியிருக்கும் தனிமையான வீட்டில் சொந்த உபயோகத்துக்காக அல்லது சதா உபயோகித்துவரக்கூடிய சாமான்களுக்கா? அல்லது தான் வியாபாரம் செய்யும் வியாபாரக்கடையிலிருக்கும் சாமான்கள் திருட்டாவது, கொள்ளையாவது அடிக்கப்பட்டால், அவ்விதமான நஷ்டத்துக்கா? என்பதை விபரமாகக்கண்டு இன்ஸூர் செய்யவேண்டும். ஒரே மனிதன் எல்லாவிதமான இன்ஸூரங்களை வேண்டுமானாலும்

செய்துகொள்ளலாம். அல்லது தனிபாக எந்த இன்ஸுரேத்தையும் செய்துகொள்ளலாம் அப்படி தனிமையாக இன்ஸுர் செய்யப்பிரியப்பட்டால் அடியிற்கண்ட இன்ஸுரேன்ஸ்களில் எதையாவது செய்துகொள்ளலாம்.

அவைகளின் விபரங்கள்.

1. பர்க்லரி அதாவது திடகாத்திரமாய் துரோகம் செய்யவேண்டும் என்கிற எண்ணத்துடன் ஒரு வீட்டிலாவது ஒரு வியாபாரக்கடையிலாவது காலை 6 மணிமுதல் மாலை 9 மணிவரை யாதாயினுமொரு எதிரி அல்லது எதிரிகளால் மேற்சொன்னபடி துரோகம் செய்யவேண்டுமென்கிற கெட்ட எண்ணத்துடன் திடகாத்திரமாய் உள் நுழைவது.

2. ஹவுஸ் ப்ரேக்கிங், இதன் பொருள் காலை 6 மணிமுதல் மாலை 9 மணிவரையில் மேலே சொல்லப்பட்டபடி கட்டிடங்களை உடைத்து உள் நுழைவது.

3, லார்ஸேனி அதாவது வீட்டிலாவது, வியாபாரக்கடையிலாவது, உள்ள வேலைக்காரர்களால் திருடப்பட்ட சொத்துக்களும், அல்லது எந்தவிதமான ஆயுதப்பிரயோகமும், அல்லது குத்துச்சண்டையும் செய்யாமலே திருடப்படும் ஆசாரத்திருட்டுக்கும்.

இவ்வித திருட்டுக்களில் எவ்விதமான திருட்டுக்கு இன்ஸுர்செய்யப் பிரியப்படுகிறார்களோ அவ்விதமான இஸுரான்ஸ்களை அநேக கம்பெனிகள் ஒப்புக்கொள்ளுகின்றது. ஆனால் மேலே சொல்லப்பட்ட 3வது அயிட்டத்தில்கண்ட ஆசாரத்திருட்டை வெகுவாய் எல்லாக் கம்பெனிகளும் ஒப்புக்கொள்ளுகிறதில்லை,

BURGLARY INSURANCE.

கட்டணம்.

இப்படிப்பட்ட இன்ஸுரான்ஸை ஒப்புக்கொள்ளும் காலத்தில் கட்டணம் வாங்கும்போது நான்குவிதமாகப்பிரித்து அததற்குத்தக்கபடி பிரிமியம் வாங்கப்படுகிறது.

அவைகளாவது:—

1. பலசரக்கு வியாபாரங்கள், மருந்துக்கடைகள், ரொட்டிக்கடைகள், புஸ்தகக்கடைகள், சீனு பீங்கான் கடைகள் இரும்புக்கடைகள், போடோ படம்பிடிக்கும் இடங்கள் நாற்காலி மேஜை விற்கும் கடைகள், முதலிய இம்மாதிரியான கடைகளுக்கு ஒருவிதமான கட்டணமும்.

2. துணிக்கடைகள் பூட்ஸ் சூஸ், தைக்கும்கடைகள் அழகிய சாமான்கள் விற்கும்கடைகள், கொடைக்கடைகள், முதலிய இம்மாதிரியான கடைகளுக்கு ஒரு மாதிரி கட்டணமும்.

3. சுருட்டுக்கடைகள், சைக்கிள்கடைகள், படக்கடைகள், கிளாத்தபாலாபீஸ்கள், முதலிய இயமாதிரியான கடைகளுக்கு ஒருவிதமான கட்டணமும்

4. ஸ்பெஷல் ரிஸ்க்ஸ் அதாவது நகைக் கடைகள், தட்டான்கடைகள், பான்ஷாப்புகள், முதலிய இம்மாதிரியானகடைகளுக்கு ஒருவிதமாகவும் கட்டணம்வாங்கப்படுகிறது

இம்மாதிரியான இன்ஸுரங்களைச்செய்ய விரும்பும் காலத்தில அடியிற்கண்ட பிரபோசல் பாரத்தைப்பூர்த்தி செய்து கமபெனிக்கு அனுப்பவேண்டும்.

அவையாவன:—

(1) பிரபோஸருடைய அல்லது இன்ஸுரர்செய்யவிரும்புகிறவருடைய பெயர், தொழில், இருப்பிடம்

(2) சொத்துக்கள் வைக்கப்பட்டிருக்கிற கட்டடத்தின் விபரம்.

(3) இவ்விதமான இன்ஸூரன்ஸ் முன்னமே யேதாகிலும் இருக்கிறதா?

(4) எந்தக் கம்பெனியாவது இம்மாதிரியான உம்முடைய இன்ஸூரன்ஸை ஒப்புக்கொள்ளமுடியாதென்று மறுதளித்ததுண்டா?

(5) இம்மாதிரியான இன்ஸூரத்தில் நீர் எப்போதாவது இதற்குமுன் நஷ்டமடைந்ததுண்டா?

(6) இன்ஷூர் செய்யக்கூடிய சாமான்கள் சொந்த உபயோகப்படுத்தக்கூயதாயிருந்தால் அதன் விபரங்கள்.

(7) தங்கம், வெள்ளி பாத்திரங்கள் கைக்கெடியாரம் முதலியவைகளின் கிரையம்,

(8) குதிரை வண்டிகளை நிறுத்தக்கூடிய லாயத்தில் உள்ள ஜீனி முதலியவைகளின் கிரையம்.

(9) வாத்தியப்பெட்டிகளின் கிரையம்.

(10) இந்த சாமான்களை வைக்கப்பட்டிருக்கிற வீட்டின் கதவுகள் எம்மாதிரியாக அமைக்கப்பட்டிருக்கிறது.

(11) ஷை வீட்டில் ராத்திரி சாலங்களில் குடியில்லாமல் பூட்டப்பட்டிருக்கிறதா?

பாலிஸியின் விபரங்கள்.

மேலே சொல்லப்பட்ட பர்க்லரி ஹவுஸ் பிரெக்கிங் லார்சனி என்னும் மூன்றுவிதமான இன்ஸூரங்களை தனித்தனியாவது, ஒருமித்தாவது செய்யலாம். அப்படி செய்யும் தாற்

BURGLARY INSURANCE.

பரியமாவது இன்ஸுர் செய்தவருடைய, சொத்துக்கள், திருட்டுப்போனாலாவது அல்லது கொள்ளையடிக்கப்பட்டாலாவது, அதன் கிரையத்துகையை முன்னமேயே கண்டு கொடுக்கப்பட்டிருக்கும் லிஸ்ட்டில் கண்டபடி அதற்குண்டான நஷ்டத்தைக் கொடுக்க கம்பெனியார் கட்டுப்பட்டவர்கள் தவிரவும் இன்ஸுர் செய்தவர் வருஷத்தில் இரண்டு மாதம் வரை வீட்டைப்பூட்டிவிட்டு வெளியூர்களுக்குப் போகலாம் என்கிற சாதகத்தையும் கண்டு பாலிஸி பெறலாம். ஆனால் வீட்டிலுள்ள குடும்பத்தைச்சார்ந்தவர்களில் யாராவது சொத்துக்களைத் திருடினால் அவ்வித திருட்டுக்கு கம்பெனியார் ஜவாபுதாரியாகமாட்டார்கள். இந்தப் பாலிஸின் ஒப்பந்தமானது திருட்டுப்போன யாதானுமொரு சொத்தின் நிஜமான கிறையத்தைமாத்திரம் இன்ஸுர் செய்தவருக்கு கம்பெனியார் நஷ்டஈடு செய்துகொடுக்க, கட்டுப்பட்டது என்றாலும், அப்படி திருட்டுப்போன சொத்து திரும்ப கிடைக்கக்கூடுமானால் அந்த சொத்தானது கம்பெனியாரைச்சார்ந்ததேயொழிய இன்ஸுர் செய்தவருக்கு அதைப்பற்றி யாதொருபாத்தியதையும் கிடையாது என்று இவ்வித முக்கிய சங்கதிகளடங்கிய பாலிஸி (Burglary Insurance) பர்க்லரி இன்ஸுரன்ஸ் பாலிஸி என்று பொருள்படும்.

நாம் பர்க்லரி இன்ஷுரம் என்ன என்று தெரிந்தோம். இனி (Plate Glass Insurance) பிளேட்டு கிளாஸ் இன்ஷுரம் என்னவென்று தெரிவோம்.

(பர்க்லரி இன்ஸுரன்ஸ் முற்றிற்று)

Plate Glass Insurance.

பிளேட்டு கிளாஸ் இன்ஸூரன்ஸ்.

நாம் இதற்குமுன் பர்க்லரி இன்ஷூரத்தைப்பற்றி யறிந்தோம் இனி பிளேட் கிளாஸ் இன்ஸூரன்ஸ் என்பது என்ன என்று தெரிவோம். முதல் முதல் இங்கிலாந்து தேசத்தில் 1852 வருஷத்தில் பிளேட் கிளாஸ் இன்ஸூரன்ஸ் கம்பெனி ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு இவ்விதமான இன்ஷூரத்தை நடத்த ஆரம்பித்தது இதன் தாற்பரியம் என்னவென்றால் வீட்டுகளிலாவது, வியாபாரக்கடைகளிலாவது அமைக்கப்பட்டிருக்கும் கதவு ஜன்னல் இவைகளிலுள்ள கண்ணாடிகள் உடைந்துபோனால் அதை மறுபடியும் செப்பனிட்டுக் கொடுப்பது இன்னும் சுவர்களில் அமைக்கப்பட்ட வியாபாரச்சங்கங்களின் பெயரும், கம்பெனிகளின் பெயரும். உலோகங்களினால் வெட்டப்பட்டு, கம்பெனிகளின் வெளிச்சுவர்களில் மாட்டப்பட்டிருக்கும் போர்டுபலகைகள், திருட்டுப்போகும் பக்ஷத்தில் அவைகளை மறுபடியும் முன்போல செய்துகொடுப்பது, இப்மாதிரி இன்ஸூரத்தை இக்கம்பெனி நடத்த ஆரம்பித்தபிறகு 1875ம் வருஷத்தில் அநேக கம்பெனிகள் இப்மாதிரி இன்ஸூரத்தை நடத்த ஸ்தாபிதம் செய்யப்பட்டது. இப்பொழுது ஏறக்குறைய பெரிய பட்டணங்களில் எல்லா கம்பெனிகளும் இப்மாதிரியான இன்ஸூரத்தை நடத்திவருகின்றன.

இவ்வித இன்ஸூரன்ஸ் செய்யப்பிரியமுள்ளவர்கள் அடியிற்கண்ட பிரபோசல் பாரத்தை பூர்த்திசெய்து கம்பெனியாருக்கு அனுப்பவேண்டும்.

PLATE CLASS INSURANCE

பிரபோசல் பாரம்.

1 எவ்விதமான கட்டடம், துரந்த ரஸ்தாவில் இருக்கிறதா? அல்லது சந்துகளில் இருக்கிறதா?

2 அல்லது இரண்டு தெருவும் கூடும்படியான முகனையிலிருக்கிறதா?

3 அதில் எம்மாதிரியான வியாபாரம் செய்யப்பட்டு வருகிறது?

4 சென்ற ஒருவருஷத்துக்குள், ஏதாவது சேதமுண்டா?

5 இதற்குமுன் இம்மாதிரி இன்ஸுரம் செய்ததுண்டா?

6 அப்படி செய்திருந்தால் அதன் விபரம்.

7 கண்ணாடியின் கனம் எவ்வளவு?

8 பிளேட் கிளாஸாயிருந்தால் அதாவது அல்லது பேர் வெட்டப்பட்ட போர்டு பலகைகளாயிருந்தால் அதன் விபரமும்.

கண்டெழுதி கம்பெனியாருக்கு அனுப்பவேண்டும் அப்படியனுப்பினதின்பேரில் அடியிற்கண்ட பாலிஸி கம்பெனியார்கள் கொடுப்பாரகள்.

பாலிஸியின் கண்டிஷன்.

(1) உடைந்துபோன கண்ணாடிகளை உடைந்துபோயிற்றென்று இன்ஸுர் செய்தவரால் கம்பெனியாருக்குத் தெரியப்படுத்தின நேரமுதல் 24-மணிநேரத்துக்குள் அவைகளை மறுபடியும் முன்போலவே செய்துகொடுக்க கம்பெனியார்கள் கடமைப்பட்டிருக்கிறார்களென்றும்.

(2) அப்படி செய்துகொடுக்கும்போது முன் உடைந்துபோன கண்ணாடிகள் கம்பெனியாரைச் சேர்ந்ததென்றும்

(3) அப்படி உடைத்தவர்கள் இன்னாரென்று தெரியும்பக்ஷத்தில் அவர்களின்பேரில் வழக்குத்தொடரவும், நஷ்டத்தைப்பெறவும், கம்பெனியார் தாங்களே வழக்குத்தொடங்கும் பாத்தியதையையும் அடைய உரிமைப்பட்டவர்களென்றும்.

(4) மேலே 1வது கலத்தில் கண்டபடி உடைந்தபாகத்தைமறுபடியும் செப்பனிடும் மத்தியகாலத்தில், இன்ஸுர் செய்தவருடைய கடையில் வியாபாரக்குறைவோ, நஷ்டமோ ஏற்படும் பக்ஷத்தில் அவைகளுக்கு கம்பெனியார் ஜவாபுதாரிகளல்லவென்றும் இம்மாதிரி நிபந்தனைகளடங்கியபாலிஸி கொடுப்பார்கள்.

கட்டணம்.

இவ்வித இன்ஸுரன்ஸுக்கு கட்டணம் கண்ணாடியின் கனத்தைப்பொருத்தும் அளவு அதாவது அகலம், நீளம், உயரம் இவைகளைப்பொருத்தும ஏற்படுத்தியிருக்கிறது.

(பிளேட் கிளாஸ் இன்ஸுரன்ஸ் முற்றிற்று)

Marine Insurance.

மெரைன் இன்ஸுரேன்ஸ்.

நாம் இதற்குமுன் பிளேட் கிளாஸ் இன்ஷுரன்ஸ் இன்னதென்று தெரிந்தோம், இப்பொழுது மெரைன் இன்ஸுரன்ஸ் என்ன என்று தெரிவோம், அதாவது "வியாபாரிகள்

MARINE INSURANCE.

ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்கு கடல்மூலமாய் அனுப்பும் சரக்குகளுக்கு, கடல் நீரினாலாவது, நெருப்பினாலாவது, அல்லது கப்பலோடு கப்பல் முட்டிமோதி அதினால் உண்டாகும் சீர்கேட்டினால் விளையப்பட்ட நஷ்டத்துக்காவதுபிரதிப் பிரயோஜனம் அதாவது நஷ்ட ஈட்டை அடைவது.

இத்தலைப்பெயர் வாய்ந்த இம்மாதிரி இன்ஸுரன்ஸ் 1601 வருஷத்தில் இங்கிலாந்து தேசத்தில் குவீன் எலிஜெபெத் மகாராணி அரசாண்ட காலத்தில் பார்லிய மெண்டில் ஒரு சட்டமாக பாவித்து தீர்மானிக்கப்பட்டது.

அதன்பிறகு அப்போதைக்கப்போது வேண்டிய சீர்திருத்தங்களுடன் செப்பனிட்டு இப்போது அநேக இன்ஸுரன்ஸ் கம்பெனியார்கள் இவ்விதமான இன்ஸுரன்ஸை எவ்விதமான ஆக்ஷேபணையுமின்றி அதற்கேற்பட்டிருக்கும் சட்டதிட்ட நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு மிகு ஆவலுடன் ஒப்புக்கொண்டுவருகிறார்கள். காரணம் என்னவெனில், நாம் இதுவரை அநேக பலவித இன்ஸுரன்ஸ்களை வாசிக்குங்காலத்தில் எல்லா இன்ஸுரன்ஸ்களின் ஒப்பந்தக்காலமானது ஒரு வருஷத்துக்கும் உயிர் இன்ஸுரன்ஸின் ஒப்பந்தம்மாத்திரம் குறிப்பிட்டு ஒப்புக்கொண்ட வருஷங்களுக்கென்றும், தெரிந்திருக்கிறோமல்லவா, இப்பொழுது பிரஸ்தாபத்திலிருக்கிற மெரைன் இன்ஸுரன்ஸ் அப்படிப்பட்டதல்ல, ஆனால் எப்படி? ஒரு ஊரில் சரக்கு ஏத்தி எந்த மற்றொரு ஊருக்கு கப்பல்மார்க்கம் அனுப்பப்படுகிறதோ, அந்த ஊருக்கு கப்பல் சரக்கைக்கொண்டுபோய் சேர்க்கும்வரைதான் இந்த இன்ஸுரன்ஸ் கட்டுப்பட்டு அமுலிலிருக்கும், குறிப்பிட்ட ஊருக்கு கப்பல் சேர்ந்துவிட்டதென்று விளம்பரம் அறிந்தால்

மேரைன் இன்ஸூரன்ஸ்.

இந்த இன்ஸூரன்ஸூம் ரத்தாய்விடும். சாதாரணமாய் உலகத்திலுள்ள ஊர்களுக்கு எல்லாம் ஒவ்வொரு ஊர்களிலிருந்தும் மற்றொவ்வொரு ஊர்களுக்கும் பிரயாணம் செய்யும் எல்லாக்கப்பல்களும் சிலதினங்களிலேயோ, அல்லது சில வாரங்களிலேயோ, அல்லது அதிகதூரமான அர்த்தங்களுக்கு சில மாதங்களிலேயோ போய்ச்சேர்ந்துவிடுகிறது. இம்மாதிரி பிரயாணம் செய்யும் கப்பல்கள் மற்ற இதற்குமுன் வாசித்தறிந்த இன்ஸூரன்ஸ்களில் அடிக்கடி ஏற்படக்கூடிய விபத்துக்களைப்போல் இத்தலைப்பெயர்வாய்ந்த மெரைன் இன்ஷூரத்தில் ஏற்படுகிறதில்லை. ஆனால் எப்போதாவது ஒரு மாதத்துக்கு அல்லது சில மாதங்களுக்கு ஒருமுறை அபாயம் ஏற்படுவதுமுண்டு, அப்படி ஏற்படும் அபாயத்திலிருந்து தப்பித்துக்கொள்வது பல, உட்பட்டுக்கொள்வது சில, ஆனதினால் கம்பெனியாருக்கு அதிக நஷ்டத்தையுண்டாக்குகிறதில்லை, என்கிற காரணத்தைக்கொண்டு எல்லா கம்பெனியார்களும் அதிக ஆவலாக ஒப்புக்கொள்ளுகிறார்கள். இதிலும் பலவகுப்புகள் உண்டு. அதாவது:—

(1) கப்பலில் சரக்கை எத்தும்போது தவறி தண்ணீரில் விழுந்து அதினால் நஷ்டமேற்படுவது.

(2) கப்பலிலிருந்து சரக்கை இறக்கும்போது தண்ணீரில் விழுந்து அதினால் நஷ்டமேற்படுவது.

(3) கப்பல் ஓடிக்கொண்டிருக்கும்போது புயல் காற்றினால் சமுத்திரஜலம் கப்பலுக்குள் நுழைந்து அதினால் நஷ்டமேற்படுவது.

(4) கப்பல் முழுகிப்போய் அதினால் நஷ்டமேற்படுவது.

MARINE INSURANCE.

கட்டணம்.

இன்ஷூர் செய்கிறவர்கள் எம்மாதிரியான மேலேசொல்லப்பட்ட பாகங்களை சேர்த்து இன்ஷூர்செய்ய விரும்புகிறார்களோ அதையொட்டியும் சறக்கு ஏற்றப்படும் கப்பல்களின் வகுப்பை ஒட்டியும் எந்த ஊரிலிருந்து எந்தஊருக்கு சாக்கு ஏற்றுமதி செய்கிறார்களோ, அந்த ஊர்களின் துறைமுகைத்தையொட்டியும், எந்தெந்த காலங்களில் இன்ஸூர் செய்கிறார்களோ அந்தந்த காலங்களை ஒட்டியும் அததற்குத் தக்கபடி கட்டணம் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

பாலிஸி.

இன்ன ஊரிலிருக்கும் இன்னாருடைய இன்னவிதமான சரக்கை இன்ன ஊருக்குப்போகும் இன்ன பெயருடைய கப்பலில் இன்னின்னவிதமான மேலே சொல்லப்பட்ட வகுப்புகளின் இன்ஸூரன்ஸ் செய்ய ஒப்புக்கொண்டு இன்ன ஊரிலிருக்கும் இன்ன கம்பெனியார் அல்லது ஏஜண்டு அதற்குண்டான கட்டணம் ரூ இவ்வளவையும் பெற்றுக்கொண்டு குறிப்பிட்ட ஊருக்கு குறிப்பிட்ட கப்பல் போய் சேரும் வரை மெரைன் இன்ஸூரன்ஸ் ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

முக்கிய குறிப்பு.

நாம் இதற்குமுன் வாசித்தறிந்த இன்ஷூரன்ஸ்களின் பாலிஸிகளை கட்டணம் செலுத்தி ரசீதுகிடைத்தபின் சௌகரியம்போல் பெற்றுக்கொள்ளலாம். ஆனால் மெரைன் பாலிஸி என்றும் இப்பாலிஸியை மாத்திரம் கப்பல் புறப்படுவதற்குமுன் உடனே பெற்றுக்கொள்ளவேண்டியது.

இதில் இன்னொருவித இன்ஷூரமு முண்டு அதற்கு (Baggage Insurance.) பேக்கேஜ் இன்ஷூரான்ஸ் என்று பெயர், அதாவது கப்பலில் பிரயாணம் செய்யப்பட்ட யாதொரு பிரயாணியினுடைய சாமான்கள், மூட்டைகள், இவைகள் களவு போனாலாவது வேறு எவ்வித நஷ்டமடைந்தாலாவது குறிப்பிட்ட இடத்துக்கு கப்பல் போய்ச்சேர்ந்தவுடன், அவ்வித நஷ்டத்தை கம்பெனியாரிடமிருந்து இன்ஸூர் செய்பவர் அடைவது. இவ்வித இன்ஸூரத்தில் பிரயாணிகளின் மூட்டை முடுச்சுகள் பெட்டிகளைத்தவிர ரொக்க நாணயங்களுக்கும், தஸ்தாவேஜுகளுக்கும், கரன்ஸி நோட்டுகளுக்கும் இன்ஸூரான்ஸ் ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.

நாம் ஏறக்குறைய எல்லாவிதமான இன்ஸூரன்ஸ்களையும் படித்தறிந்தோம், ஆனால் முக்கியமாய் அறியவேண்டிய நெருப்பு இன்ஸூரான்ஸ் (Fire Insurance) ஒன்று இருக்கிறது அதன் விபரங்களையும் இதன்பின் கூறுவோம்.

(மேரைன் இன்ஸூரன்ஸ் முற்றிற்று)

Fire Insurance.

நெருப்பு பீமாபத்திரம்.

இத்தலைப்பெயர் வாய்ந்த இன்ஷூரம் ஏற்பட்ட காரணத்தையும், காலத்தையும், ஆரம்பமுதல் பூராவும் எழுதுவதாயிருந்தால், ரொம்பவும் விரிவாயும் படிப்பவர்கள் மனதை ரம்மிக்கச்செய்யாததும் ஆகும். ஆனதுபற்றி பூர்வ சரித்திரங்களின் சில முக்கிய விஷயங்களைமாத்திரம் இங்கு கூறுவோம்.

FIRE INSURANCE.

1666 வருஷத்தில் லண்டன்மா நகரத்தில், பெரிய தீ விபத்து ஒன்று எற்பட்டது, இச்சம்பவத்தையாவரும் எதிர் பார்த்ததாயில்லை, அக்காலத்தில் இத்தாலியாதேசத்தில் மாத்திரம் லாம்பார்ட்ஸ் என்னும் ஒருவகை ஜாதியார் சரக்குகளுக்குமாத்திரம் பீமாபத்திரம் ஒப்புக்கொள்ளும்பழக்கத்தை அனுசரித்து வந்தார்கள். ஆனல் 1660 வருஷத்தில் லண்டன்மா நகரத்தை பாபாலித்துவந்த (**King Charless II** இரண்டாவது சார்லஸ் என்னும் அரசன் முன்னிலையில் தீ விபத்தினின்று நஷ்டாீடு அடையவேணும் என்கிற (**Fire Insurance**) நெருப்பு பீமாபத்திரம் ஆலோசனைக்கு வைக்கப்பட்டது. அதுசமயம் ஆலோசனை சபையார் எல்லோரும் ஒன்றுகூடி யோசித்து தீர்மானம் செய்ததாவது, இவ்வித நஷ்டாீட்டுக்கு தனித்தனியாகவுள்ள மனிதர்களை ஒப்புக்கொள்ளச்செய்வது யுக்தமில்லையென்றும், ஆனலும் நகர பரிபாலன விஷயங்களில் இவ்விதமான நஷ்டாீடுகளுக்கு கட்டிக்கொடுக்க எதாவது போதுமான அளவு வருமானம் இருக்கவேண்டுமென்றும் அப்படிக்கில்லாமல் இவ்விதமான விஷயங்களில் தலையிடுவது அவ்வளவு யுக்தமாயில்லையென்றும் தீர்மானித்தார்கள். இவ்விதமாக யோசனைகள் அநேககாலம் முடிவுக்கு வராமலிருந்து கடைசியாக டாக்டர் பார்பன் என்பவர் ஒரு (பயர் ஆபீஸ்) அதாவது நெருப்பு பீமாபத்திரம் கொடுக்கக்கூடிய ஒரு ஆபீஸ் ஒன்றை 1680 வருஷத்தில் மெதுவாக திறக்க ஆரம்பித்தார், 1696 வருஷம் சிலமுக்கிய மனிதர்கள் சேர்ந்து ஒருபயர் ஆபீஸ்திறந்தார்கள். அது இபபோது வழங்கிவரும் (**Commercial Union Assurance Co., Ltd.**) என்பதோடு சேர்க்கப்பட்டிருக்கிறது. 1710 வருஷம் அநேக கம்பெனிகள் சட்டப்படி ரிஜிஸ்ட்டர் செய்து ஸ்தாக்கப்பட்டது. அக்காலத்தில் ஒவ்வொரு கம்

பெனிகளும் ஒப்புக்கொள்ளும் தொகை சொல்பமாகவும், அதற்குசெலுத்தவேண்டிய பிரிமியம் தொகையும் பலவிதமாக ஏற்பட்டிருந்தது. அதன்பிறகு நாளுக்கு நாள் கம்பெனிகள் அதிகப்பட்டுக்கொண்டே வந்தது, பிறகு லண்டன் நகரத்தில் (**Fire Insurance Committe**) என்று ஒரு சங்கம் ஏற்பட்டு அச்சங்கத்தில் எல்லா கம்பெனிகளையும், ரிஜிஸ்ட்டர் செய்து அச்சங்கத்தார்மூலமாக அப்போதைக்கப்போது வேண்டிய விதிகளை ஏற்படுத்தியும், பழைய விதிகளை சீர்திருத்தம் செய்தும் நடத்திவருகிறார்கள். இஃதிப்படியிருக்க இந்தியாவில் முக்கியமாய் பம்பாய், கல்கத்தா முதலிய இடங்களில் ஹிந்து தேசத்தார்கள் சேர்ந்து சில கம்பெனிகளை ஸ்தாபிதம் செய்தார்கள், அவைகளும் இப்போது நடைபெற்றுவருகின்றன. இனி இன்ஸுர்செய்யவேண்டிய சட்டங்களில் விவரித்திருக்கிறபடி இன்ஸுர் செய்கிறவர்களுடையவும், இன்ஸுரம் ஒப்புக்கொள்ளுகிறவர்களுடையவும், கடமையைப்பற்றி கூறுவோம். அதாவது நெருப்பு இன்ஸுர் என்பதை நான்கு விதமாக வகுக்கப்பட்டிருக்கிறது.

கிளாஸ் 1, ஏ. பி. ஸி. கிளாஸ் 2, கிளாஸ் 3, கிளாஸ் 4.

விபரங்களாவன.

கிளாஸ் (1 ஏ) என்பதாவது யாதொரு கட்டிடமானது கதவு நிலவு ஜன்னல்களைத்தவிர மற்றெல்லாம் செங்கல்லினுலாவது, சிமெண்ட்டினுலாவது கட்டப்பட்டிருக்கவேண்டும்,

கிளாஸ் (1 பி) என்பதாவது யாதொரு கட்டிடமானது கதவு நிலவு ஜன்னல்களைத்தவிர மற்றெல்லாம் செங்கல்லினுலாவது, சிமெண்ட்டினுலாவது கட்டப்பட்டு தகரத்தினுலாவது ஓட்டினுலாவது, கூறையிடப்பட்டிருக்கவேண்டும், இது இரண்டு அடுக்குக்குமேல்பட்டிருக்கவேண்டும்.

FIRE INSURANCE.

கிளாஸ் (1 சி) அதாவது யாதொரு கட்டிடமானது செங்கல்லினுல் கட்டப்பட்டு ஓட்டினுலாவது, தகரத்தினுலாவது கூறையிடப்பட்டிருக்கவேண்டும்.

கிளாஸ் 2 அதாவது கீழ்ப்பாகம் பகுதி செங்கல்லினுலும், பகுதி மரத்தினுலும், அல்லது பூராவும் தகரத்தினுல் கட்டப்பட்டு தகரத்தினுல் கூறையிடப்பட்டிருக்கவேண்டும். ஒருபக்கம் அல்லது இரண்டுபக்கம் மரத்தினுல கட்டப்பட்டிருந்தாலும் அது 3வது கிளாஸ் ஆகவே பாவிக்கப்படும்.

கிளாஸ் 4 எவ்வித கட்டிடமாவது தேக்கை, மூங்கில், ஓலை, இவைகளால் கூறையிடப்பட்டிருககிறதோ, அதெல்லாம் நான்காவது கிளாஸ் ஆகப்பாவிக்கப்படும்.

இப்போது கட்டடங்களின் வகுப்பைபற்றிக்கூறி வந்தோம், இனி அவைகள் எவ்வெவ்விதமாய் அனுபவிக்கப்பட்டு வருகிறதோ அவ்வவ்வித தொழில் காரியங்களைக்கொண்டுதான் கட்டணங்கள் விதிக்கப்படுகின்றனவென்பதை நேயர்கள் ஞாபகததில் வைத்துக்கொள்ளவேண்டியது, அதிலும் ஒரு வீடு கிளாஸ் 1 ஆய் இருந்து அடுத்த வீடானது 25 அடிக்குள் கிளாஸ் 2 அல்லது 3 ஆய் இருந்தால் அடுத்த வீட்டின் கட்டணம்தான் இந்த வீட்டுக்கு ஏற்பட்டதென்றும் ஒரு வீடு கிளாஸ் 2 ஆய் இருந்து அடுத்த வீடு 50 அடிக்குள் கிளாஸ் 3 ஆய் இருந்தால் அடுத்த வீட்டின் கட்டணம்தான் இந்த வீட்டுக்கு நேமிக்கப்படவேண்டும் என்றும், ஒரு வீடு கிளாஸ் 3 ஆய் இருந்து அடுத்த வீடு 100 அடிக்குள் கிளாஸ் 4 ஆய் இருந்தால் அடுத்த வீட்டுக் கட்டணம் தான் இந்த வீட்டுக்கு ஏற்பட்டதென்றும் நேயர்கள் அறிந்துகொள்ளவேண்டியது. ஆனுல் இப்படிப்பட்ட கட்டணம்

நெருப்பு இன்ஸூரன்ஸ்.

இரங்கோன் டவுனுக்கும், கன்டோன்மென்ட்டுக்குள்பட்ட கட்டடங்களுக்கு எப்படியென்றால் யாதொரு வீடு அல்லது கடை இன்ஸூர்செய்யப்படுகிறதோ அக்கட்டடத்தின் கட்டணத்தையும் அடுத்த வீட்டுக்கட்டடத்தின் கட்டணத்தையும் கூட்டி இரண்டாக வகுத்து வரக்கூடிய தொகையை கட்டணமாக கொடுக்கவேண்டும். இப்படிக்கொடுக்கும் கட்டணமானது குடியிருக்கும் வீட்டுக்கு வேறு வாடகைக்கு விட்ட வீட்டுக்கு வேறு அதில் கடைவைத்து வியாபாரம் செய்தால் வேறு, அதில் மண்ணெண்ணை, நெருப்புப்பெட்டி மெழுகுவத்தி முதலிய ஆபத்தான வஸ்துக்கள் வைத்து விற்பனைசெய்தால் அதற்கு கட்டணம் வேறு இவைகளை இங்கு விபரமாகக்கூறுவோம். ஒருவீட்டில் பத்து அறைகள் இருந்து எல்லா அரைகளும் குடியிருக்க உபயோகிக்கப்பட்டு அதில் ஒரு அரைமாத்திரம் வியாபாரம் செய்யும் கடையாயிருந்தால் அந்தவியாபாரக்கடைக்குண்டான கட்டணம்தான் அந்த வீட்டுக்குக் கொடுக்கப்படவேண்டும்.

முதலில் இரங்கோன் டவுனையும் கண்டோன்மென்ட்டையும் பற்றிக்கூறுவோம்.

கிளாஸ் 1 ஏ பி ஸி இவைகளின் கட்டட அமைப்பைப் பற்றி முன்னமே கூறியிருக்கிறோம், ஷை கட்டடங்களில் சொந்தக்காரர்கள் குடியிருந்தாலாவது, கோவில்கள், பள்ளிக்கூடங்கள், பாங்குகள், பொதுவான ஆபீஸ் கட்டடங்கள் இவைகளாக உபயோகப்படுத்தப்பட்டாலாவது கட்டணம் 100க்கு முறையே வருஷம் 1க்கு கிளாஸ் 1 ஏக்கு 3 அணுவும், 1 பிக்கு 4 அணுவும், 1 ஸிக்கு 5 அணுவும் இவைகள் வாடகைக்கு விடப்பட்டிருந்தாலும், ஓட்டலுக்கு உபயோ

கப்படுத்தப்பட்டிருந்தாலும், 5, 6, 7, அணாவாகவும் ஆபத்துக்குட்படாத வஸ்துக்கள்வைத்து வியாபாரம் செய்வதாயிருந்தால் 6, 7, 10, அணாவாகவும், அதில் ஆபத்தான வஸ்துக்கள்வைத்து வியாபாரம் செய்வதாயிருந்தால் 10, 12, 16, அணா கட்டணமும் முறையே கொடுக்கப்படவேண்டும். ஷை ஆபத்தான வஸ்துக்களின் ஜாபிதா ஒன்று இதன்முடிவில் காணலாம். ஷை கட்டடங்களை குதாம்புகளாகமாத்திரம் உபயோகிப்பதாயிருந்தால் ஆபத்தில்லாத வஸ்த்துக்களுக்கு வருஷம் 1க்கு 3, 4, 5, அணாவாகவும், ஆபத்துடைய வஸ்த்துக்களுக்கு வருஷம் 1க்கு 4, 5, 6, அணாவாகவும், முறையே கட்டணங்கள் கொடுக்கப்படவேண்டும். இதைத்தவிர பொதுப்படையாக குறிப்பிட்ட சிலகட்டடங்கள் அதாவது மார்க்கெட்டுகள், கப்பலடியில் சரக்குவைக்கும் கட்டடங்கள் மரக்கடைகள், இன்னும் சில கட்டடங்களுக்கு வருஷம் 1க்கு இன்ன கட்டணம்தான் கொடுக்கப்படவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

ஜில்லாக்களில்.

கிளாஸ் 2 இக்கட்டடத்தின் விபரத்தையும் முன்னமே சொல்லப்பட்டிருக்கிறது. இது குடியிருக்கும் வீடாயிருந்தால் வருஷம் 1க்கு 100க்கு 12 அணா வீதமும் ஆபத்தில்லாத சரக்குகள்வைத்து வியாபாரம்செய்யும் கடையாயிருந்தால் 100க்கு வருஷம் 1க்கு 18 அணா வீதமும், ஆபத்தான சரக்குகள்வைத்து வியாபாரம் செய்வதாயிருந்தால் 100க்கு வருஷம் 1க்கு 24 அணா வீதமும், கட்டணம் கொடுக்கப்படவேண்டும். இக்கட்டடத்துக்கு 50 அடிக்குள் கூறை வீடுகள் இருந்தால் அக்கூறை வீட்டுக் கட்டணம்தான் கொடுக்கப்படவேண்டும். கிளாஸ் 3 இவ்வித கட்டட அமைப்பின் விபரமும், மேலே கூறப்பட்டிருக்கிறது இது குடியிருக்கும் வீ

டாயிருந்தால் 100க்கு வருஷம் 1க்கு 16 அணு வீதமும், ஆபத்தில்லாத வஸ்துக்கள்வைத்து வியாபாரம் செய்வதாயிருந்தால் 100க்கு வருஷம் 1க்கு 24 அணு வீதமும், ஆபத்தான வஸ்த்துக்கள்வைத்து வியாபாரம்செய்தால் 100க்கு வருஷம் 1க்கு 32 அணுவீதமும் கட்டணம் கொடுக்கப்படவேண்டும். இதற்கு அருகாமையில் 100 அடிக்குள் கூறைவீடுகள் இருந்தால் அக்கூறைவீட்டின் கட்டணம்தான், இவ்வீட்டுக்கு கொடுக்கப்படவேண்டும், இவ்வித 3வது வகுப்பு கட்டடம் மரத்தினாலாவது, மூங்கில் தட்டியினாலாவது கட்டப்பட்டு மேலே தகரம் போடப்பட்டிருக்கவேண்டும் என்று சொல்லப்பட்டதையும் நேயர்கள் அறிவீர்கள், இதை குதாம்பாக உபயோகப்படுத்தினல் ஆபத்தில்லாத வஸ்த்துக்களடங்கியதானல் வருஷம் 1க்கு 100க்கு 16அணுவீதமும் ஆபத்தான வஸ்த்துக்களடங்கியதாயிருந்தால் வருஷம் 1க்கு 100க்கு 24 அணு வீதமும் கட்டணம் கொடுக்கப்படவேண்டும். முக்கியமாய் பெரும்பாலும் பர்மாவில் நெல்லுக்குதாம்புகள் எல்லாம்மரத்தினாலாவது, மூங்கல்தட்டியினாலாவது கட்டப்பட்டு மேலே தகரம் போடப்பட்டிருக்கும், இவ்வித குதாம்புகளை தனியாகவும் அதில் நெல்லுப்போடுங்காலங்களில் 3மாதம், 4மாதம், 6மாதங்களுக்குமாத்திரம் சரக்குகளுக்கு இன்ஸுவர் செய்துவருகிறார்கள். இப்படி குறைந்த மாதங்களுக்கு இன்ஷுவர் செய்வதாயிருந்தால் கட்டணம் கூடக்கொடுக்கப்படவேண்டும். அதாவது 6மாதத்துக்கு இன்ஷுவர் செய்தால் 100க்கு 12 அணுவீதமும் 4மாதத்திற்கானல் 100க்கு 10 அணுவீதமும், 3மாதத்திற்கானல் 100க்கு 8 அணுவீதமும் 2மாதத்திற்கானல் 100க்கு 6 அணுவீதமும், ஒருமாதத்திற்கானல் 100க்கு 4 அணுவீதமும், ஒரு வருஷத்திற்கானல்

FIRE INSURANCE.

ஒரு ரூபாய்வீதமும் கட்டணங்கள் கொடுக்கப்படவேண்டும் இம்மாதிரி நெல்லு இன்ஸூரம் செய்யும் விஷயத்தில் எனது நண்பர்களுக்கு சில சந்தேகங்கள் ஏற்படுகின்றன. அவைகளில் முக்கியமான விஷயத்தை சற்று விவரிப்போம்,

அதாவது நெல்லு பூராவும் போட்டபிறகு இன்ஸூர் செய்கிறதா? அல்லது நெல்லு போட்டுக்கொண்டிருக்கும் போது இன்ஸூர் செய்கிறதா? ஏதாவது ஆபத்து ஏற்பட்ட காலத்தில் இதற்கு எப்படி விமோசனம், என்கிற சந்தேகம் அநேகர்களுக்கு நீங்காமலேயிருக்கிறது. அதாவது ஒருகுதாம்பில் நெல்லுப்போட ஆரம்பிக்கும்போதே, அவர்கள் இவ்வளவு கூடைதான் இருப்புவைக்கப்போகிருர்கள் என்பதை தீர்மானித்து, அதற்குண்டான தொகைக்கு இன்ஸூரம் செய்துகொள்ளலாம் அப்படி செய்யும் இன்ஸூர பீமாபத்திரத்தில் இதுவரை போடப்பட்டதும், இனிமேல் போடப்படுவதுமான சரக்கு என்றுகண்டெழுதி வாங்கிக்கொள்ளவேண்டும். அப்படி செய்துகொண்டால் ஆபத்தேற்பட்ட காலத்தில் இன்ஸூர் செய்தவர் அதாவது பீமாபத்திரம்பெற்றவர் ஆபத்தேற்பட்ட காலத்தில் எவ்வளவு துகைக்குண்டான சரக்கு குதாம்பில் வைத்திருந்தார் என்று ஷியார் கணக்கு மூலம் ரூபிக்கிருரோ, அவ்வளவு துகைதான் அவர் அடைய பாத்தியப்பட்டவர், ஆகையால் முதலில் சரக்குப்போடும் போது பகுதித்தொகைக்குண்டான சரக்குக்கும் போட்ட பிறகு பகுதித்தொகைக்கும் இன்ஸூர் செய்துகொண்டால் அதில் கொஞ்சம் லாபமடைவார்கள், இதை நேயர்களே! மேலே சொல்லப்பட்ட கட்டணவிபரக்களிலிருந்து கணக்கிட்டுத்தெரிந்துகொள்ளலாம். ஏனென்ருல், நெல்லுவாங்கிக் கட்டும் எல்லா வியாபாரிகளும் நாளுக்குநாள் கொஞ்சம்

கொஞ்சமாகத்தான் வாங்கிசேர்ப்பார்கள். ஆகையால் அவர்கள் ஒரே காலத்தில் பூரா தொகைக்கும் இன்ஷூர் செய்ய வேண்டிய அவசியமில்லை. ஓரே காலத்தில் தாங்கள் உத்தேசித்த அளவு நெல்லு வாங்கிசேர்க்க முடியாது. ஆனால் ஒரு கம்பெனியில் கொஞ்சம் தொகைக்கு இன்ஷூர் செய்த பிறகு, அதே கம்பெனியில், அதே சறக்குக்கு மறுபடியும் இன்ஷூரம் செய்யலாமா என்கிற சந்தேகமும் சிலருக்கு ஏற்படும். அதைப்பற்றி அக்கரையில்லை, ஒரே குதாம்பில், ஒரே கம்பெனியில், எத்தனை முறைவேண்டுமானாலும், எத்தனை மாதத்துக்கு வேண்டுமானாலும் (ஒரு வருஷத்துக்குள்) இன்ஷூர் செய்யலாம். ஆனால் ஒருமுறை ஒரு கம்பெனியில் சொஞ்சம் தொகைக்கு இன்ஷூர் செய்து அதே குதாம்பில் உள்ள, சறக்கை, மருமுறை மற்றொரு கம்பெனியில் இன்ஷூர் செய்வதாயிருந்தால், அப்படி இன்ஷூர் செய்திருக்கிற கம்பேனியின் விபரத்தையும் தொகையையும அறிவித்துச் செய்வது சிலாக்கியம். ஜில்லாக்களில்.

என்னும் தலைப்பின்கீழ் நாம் வகுப்புகளையும் கட்டணங்களையும் விவரித்துக்கூறியபோது கிளாஸ் 2, 3, 4, என்பதை மாத்திரம் வாசித்தோம், ஆனால் கிளாஸ் 1 என்பதையும் அதற்குண்டான கட்டணங்களையும் தெரியவேண்டியதவசியமாகையால் அதைஇங்குகாணலாம். கிளாஸ் 1 என்பதாவது எவ்வித கட்டடமாவது பூரா செங் கல்லினால் கட்டப்பட்டு தகரத்தினாலாவது ஓட்டினாலாவது கூறையிடப்பட்டிருக்க வேண்டும். இது ஒரு அடுக்காயிருந்தாலும் இருக்கலாம். அல்லது ஒரு அடுக்குக்குமேல்பட்டு எவ்வளவு அடுக்கானாலும் சரி இப்படிப்பட்ட கட்டடம் குடியிருப்பதற்கு உப

FIRE INSURANCE.

யோகப்படுத்தப்பட்டால் அதற்கு வருஷம் 1க்கு 100க்கு 8அணு வீதமும் ஆபத்தில்லாத வஸ்துக்கள்வைத்து வியாபாரம் செய்வதாயிருந்தால் 100க்கு வருஷம் 1க்கு 12 அணு வீதமும் ஆபத்தேற்படும் வஸ்துக்களடங்கிய கடையாயிருந்தால் அதற்கு வருஷம் 1க்கு 100க்கு ஒரு ரூபாய் வீதமும் கட்டணம் செலுத்தவேண்டும் அதிலும் இப்படிப்பட்ட கட்டடங்களின் பக்க கட்டடங்கள் கிளாஸ் 2 அல்லது 3 ஆயிருந்தால் அக்கட்டடங்களின் மத்தியில் எவ்விதமான கதவாவது ஜன்னல்களாவது அள்ளைப்புரங்களில் இருக்கப்படாது. அப்படியேதாயினுமிருந்தால் அவைகள் இரண்டு பக்கங்களிலும் இரும்புத்தகட்டினுல் ரிவிட் செய்திருக்கவேண்டும் இதற்கு Fire Froof Doors என்று பெயர்.

ஆபத்தான வஸ்துக்கள் என்று மேலே பலசந்தர்ப்பங்களில் சொல்லியிருக்கிறேமல்லவா, அவைகளை இங்கு கூறுவோம். அதாவது ஜல்தியாய், நெருப்யுப்பற்றக்கூடியது. மூங்கில் பாய்கள், கதம்பைக்கயிர்கள் கல்பூரம் மெழுகுவத்தி விஷமருந்துகள், தேங்காய் எண்ணை, நல்லெண்ணை, நெய், மண்ணெண்ணை, சணல்நார், தீப்பெட்டி, கோணிப்பைகள், பஞ்சு, தார் எண்ணை, வார்னீஸ்கள், ஸ்பிரிட்டுகள், இன்னும் இதைப்போல், ஜடுதியில் நெருப்பு பற்றக்கூடியவைகள். ஆனுல் தீப்பெட்டி இல்லாமல் வீட்டில் விளக்கேற்ற முடியுமா இதைப்போல் இன்னம் அநேக வஸ்த்துக்கள், மனிதர்களுக்கு அத்தியாவசியமாய் வேண்டியிருக்கிறபடியால். அடியிற்கண்ட வஸ்த்துக்களை சொந்த உபயோகத்திற்காக, குடியிருக்கும் வீட்டுகளிலாவது, வியாபாரக்கடைகளிலாவது, வைத்துக்கொள்ளலாம்.

நெருப்பு இன்ஸூரன்ஸ்.

அவைகளாவன:—உபயோகத்துக்குத் தகுந்த கொஞ்சம் அளவுள்ள, எண்ணெகள், போத்தல்களில் அடைக்கப்பட்ட ஸபிரிட் முதலியவைகள் ஆயிரம் நெருப்புபெட்டிகள் வரையிலும், 10 பெட்டி மெழுகுவத்திகளும், 3 பெட்டி அல்லது 6 டின் மண்ணெண்ணெயும், 500க்கு அதிகப்படாத சோணிப்பைகளும் வைத்திருக்கலாம். இப்படி வைத்திருப்பதற்கு அதிக கட்டணம் கொடுக்கவேண்டியதில்லை.

நஷ்ட ஈட்டின் உடன்படிக்கை. நெருப்பு பீமாபத்திரமாவது, ஒருவர் மற்றவருக்கு அல்லது ஒரு சங்கத்தார் மற்றவர்களுக்கு குறிக்கப்பட்ட சொத்துக்களுக்கு குறிப்பிடப்பட்ட காலத்துக்கு, நெருப்பினல் ஆபத்தேற்பட்டு அதினல் உண்டாகிற நஷ்டத்தை கட்டிக்கொடுக்க கடமைப்பட்டவர்கள். அப்படிப்பட்ட கடமையிலும் இன்ஸூர் செய்யப்பட்ட சொத்தின் தொகையிலிருந்து நாளதுவரை அனுபவிக்கப்பட்டதற்குண்டான, தொகையைக்கழித்து எந்தக்காலத்தில் ஆபத்தேற்படுகிறதோ அந்தக்காலத்தில் சொத்து எவ்வளவு பெருமான முடையதோ அந்தத்தொகையைத்தான் கொடுப்பார்கள்.

இவ்வித பீமாபத்திரத்தில் கண்ட நிபந்தனைகள் சற்றேறக்குறைய எல்லா கம்பெனிகளிலும் ஒன்ருகவே இருக்கும் அதன் முக்கிய விவரங்களையும் இங்கு கூறுவோம்.

(1) எவ்விதமான கட்டடம் இன்ஸூர் செய்யப்படுகிறதோ அக்கட்டடத்தின் அமைப்பு சரிவரசொல்லப்படாமல் போனலும் அது எவ்விதமாக உபயோகிக்கப்பட்டு வருகிறதென்பதையும், சரிவரசொல்லப்படா விட்டாலும், ஆபத்தேற்பட்ட காலத்தில் நஷ்ட ஈடுகொடுக்க பீமாபத்திரம், கட்டுப்பட்டதல்ல.

FIRE INSURANCE.

(2) யாதொரு சொத்தாவது அல்லது சரக்காவது இன்ஸூர் செய்த பிறகு ஷை கட்டடம் புதுப்பிக்கப்பட்டாலும் இன்ஸூரத்தில் கண்ட சரக்குகளைவிட வேறு சரக்குகள் வைக்கப்பட்டாலும் உடனே கம்பெனியாருக்கு தெரியப்படுத்தி எவ்வித மாறுதல்கள் செய்யப்பட்டதோ அவ்வித மாறுதல்களை எண்டார்ஸ்மெண்டு மூலமாய் சரியாய் பதிவுசெய்துகொள்ளவேண்டும் அப்படி செய்துகொள்ளத் தவறினால் ஆபத்தேற்பட்ட காலத்தில் நஷ்ட ஈடுகொடுக்க பீமாபத்திரம் கட்டுப்பட்டதல்ல.

(3) எவ்வித பீமாபத்திரத்திலும் இன்ஷூர் செய்யப்படுகிற வஸ்துக்கள் தன்னுடையதாவது தன்னிடத்தில் பிறரால் ஒப்புவிக்கப்பட்டதாவது தான் கம்மிஷனுக்கு ஒப்புக்கொண்டதென்றாவது சொல்லப்படாவிட்டால் அவ்வித சொத்துக்களுக்கு ஆபத்தேற்படுகிற காலத்தில் பீமாபத்திரம் நஷ்ட ஈடுகொடுக்க கட்டுப்படமாட்டாது.

(4) யாதொரு சொத்தாவது இன்ஷூர் செய்யப்பட்டு அதன் பாத்தியதை மற்றவர்கள் அடையவிரும்பினால் அச்செய்தியை உடனே கம்பெனிக்கு தெரியப்படுத்தி இன்ஷூர் செய்தவரிடம் எழுதி வாங்கி கம்பெனியின் புஸ்தகத்திலும் பதிவுசெய்து எண்டார்ஸ்மெண்டு பெற்றுக்கொள்ளவேண்டும் அப்படிபெற்றுக்கொள்ளாத பக்ஷம் பீமாபத்திரம் பாத்தியதையை அடையவிரும்புகிறவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க கட்டுப்படாது. சொத்துக்கு பாத்தியமுடைய சொந்தக்காரர்கள் இன்ஷூர் செய்துகொள்ளலாம் அல்லது அடமானதாரர்களும் இன்ஷூர் செய்துகொள்ளலாம் ஆனால் சொந்தக்காரர்கள் இன்ஷூர் செய்திருந்து பீமாபத்திரப்படி சரியான கட்டணம் கொடுக்கப்பட்டிருந்தால் சொந்தக்

காரர்கள் சகல பாத்தியதைகளையும் அடைவார்கள் அடமான தாரர் இன்ஷூரத்தை தங்கள் பேருக்குசெய்து சரியான கட்டணமும் பீமாபத்திரப்படி கொடுத்திருந்தால் அவர்கள் எவ்வளவு தொகை அடமானம் கொடுத்திருக்கிறார்களோ அந்த தொகையைத்தான் அடைவார்கள். இதே நேயர்கள் நன்றாக ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டியது.

(5) பீமாபத்திரமுடைய எவ்வித சொத்துக்களுக்காவது தீயினால் விபத்துண்டாகி நஷ்டம்ஏற்படுமாகில் அவ்வித பீமாபத்திரம் பெற்றவர் ஆபத்து ஏற்பட்ட தேதி முதல் பதினைந்து நாளைக்குள் எந்தக்கம்பெனியில் பீமாபத்திரம் பெற்றிருக்கிறாரோ அந்தக்கம்பெனிக்காவது அல்லது அக்கம்பெனியாரால் நேமிக்கப்பட்ட ஏஜண்டுக்காவது அறிக்கை செய்யவேண்டும் அப்படி மேல்கண்ட பதினைந்து தினத்தில் அறிக்கை செய்யத்தவரினால் பீமாபத்திரத்தின் பாத்தியதையை இழந்தவராவார் அப்படி அறிக்கை செய்வதிலும் கம்பெனியாரால் கொடுக்கப்படும் Fire loss Form இதில் சொல்லப்படும் சங்கதிகளை விபரமாக எழுதிக்கொடுக்கவும் வேண்டும் அவ்விபரமாவது ஆபத்து ஏற்பட்டகாலம், இன்ன விதமாய் நெருப்புபற்றினது, இவ்வளதுகை பெருமான சொத்து நஷ்டம். இந்த நஷ்டத்தைக்காட்டக்கூடிய கணக்குகள், வவுச்சர்கள் முதலிய நியாயமான கேள்விகளுக்குண்டான விடைகளுடன் கம்பெனியாருக்கு திருப்திகாமாகும்படி எழுதிக்கொடுக்கவேண்டும் அப்படி எழுதிக்கொடுக்கத் தவரினால் எழுதிக்கொடுக்கப்படும் காலம் வரையிலும் நஷ்டஈடுகொடுப்பதை நிறுத்திவைக்கப்படும்.

FIRE INSURANCE.

(6) யாதொரு பீமாபத்திரம் பெற்றவர் நெருப்பினுல் ஆபத்து ஏற்பட்டு பீமாபத்திரத்தின் பாத்தியதையை அடைய விரும்பும் காலத்தில் அவர் சொல்லும் சங்கதிகள் பொய்யாய் இருந்தாலும் அல்லது வேறு விதங்களினுல் பொருநதம்படி சொல்லப்பட்டாலும் அல்லது பீமாபத்திரம் பெற்றவர் தாமாகவே நெருப்பு வைத்ததாக ரூபிக்கப்பட்டாலும் பீமாபத்திரத்தில் கண்ட எவ்வித பாத்தியதையும் இழந்து விட்டவராவார்.

(7) பீமாபத்திரம் பெற்ற யாதொரு சொத்தாவது தீயினுல் ஆபத்து ஏற்பட்டு பூராவாவது அல்லது யாதாயினுமொரு பாகமாவது சேதப்படுத்தப்பட்டால் அவ்வித சொத்தை திரும்பவும் பழயபடி கட்டிக்கொடுக்கலாமென்று கம்பெனியாருக்குத்தோன்றினுல் அதை மறுமடியும் முன் இருந்ததுபோல் செய்துகொடுக்க கம்பெனியாருக்கு பாத்தியமுண்டு. அப்படி செய்வதிலும் செய்ய உத்தேசிக்கும் தொகையானது இன்ஸூர் செய்யப்பட்ட தொகைக்கு குறைவாயிருந்தாலொழிய கம்பெனியார் சம்மதிக்கமாட்டார்கள்.

அடியிற்கண்ட ஆபத்துகளினுல் நெருப்பு ஏற்பட்டால் அதற்கு பீமாபத்திரம் கட்டுப்படமாட்டாது. நெருப்பு பிடிக்கும் சமயத்திலாவது அதன் பின்னுவது திருட்டுப்போகும் சொத்துக்களுக்கும் ஊரை ஆளப்பட்ட அதிகாரிகளால் நெருப்பு வைக்கப்பட்டு சேதமுண்டானுல் அவ்வித நஷ்டத்துக்கும்

(9) தரையின் கீழ் அல்லது பூமியின் கீழிருந்து கொதித்துவரும் நெருப்பினுல் விபத்து ஏற்பட்டு நஷ்டமுண்டானுல் அவ்வித நஷ்டத்துக்கும்

நெருப்பு இன்ஸூரன்ஸ்.

(10) பூகம்பத்தினுலாவது எரிமலையினின்று வரும் தீயினுலாவது புயல் காற்றினுலாவது நஷ்டமுண்டானுல் அவ்வித நஷ்டத்துக்கும் பீமாபத்திரம் கட்டுப்படமாட்டாது.

யாதொரு பீமாபத்திரம் பெற்றவர் தன்னுடைய சொத்துக்களை பீமாபத்திரம் முடிவடைகிற காலத்துக்கு முன் விற்கிறயம்செய்துவிட்டு தனக்கு பீமாபத்திரம் தேவையில்லையென்று நினைத்தால் அவ்விதபீமாபத்திரத்தை எந்தக்காலத்தில் வேண்டுமானுலும் ரத்துசெய்துகொள்ளலாம். அப்படி ரத்துசெய்துகொள்ளும் காலமானது ஒரு மாதமானுல் கால்பாக கட்டணத்தையும் 2 மாதமானுல் எட்டில் மூன்று பங்கு கட்டணத்தையும் 3 மாதமானுல் அரை பாகத்தையும் 4 மாதமானுல் எட்டில் 5 பாகத்தையும் 6 மாதத்துக்குட்பட்டிருந்தால் முக்கால் பாகத்தையும் பிடித்துக்கொண்டு பாக்கி தொகையை வாபீஸ் கொடுப்பார்கள். ஆனுல் கம்பெனியாருக்கும் எவ்வித இன்ஸூரத்தையும் எந்தக்காலத்திலும் ரத்துசெய்ய அதிகாரமுண்டு அப்படி ரத்துசெய்யபட்டால் எத்தனை நாள் கழித்து ரத்து செய்யப்பட்டதோ அத்தனை நாள்களுக்குண்டான வீதாசாரத்தொகையைப் பிடித்துக்கொண்டு பாக்கி தொகையை வாபீஸ் கொடுப்பார்கள் இன்ஸூர் செய்தவர் ஆறு மாதத்துக்குபின் கேன்சல் செய்வதாயிருந்தால் அவர்கள் யாதொரு பாகத்தையும் திரும்ப அடையமாட்டார்கள். நாம் இதுவரை வீடுகள் கடைகள் வியாபாரச் சரக்குகள் முதவியவைகளின் இன்ஸூரத்தைப் பற்றி சொன்ஞேம். இன்னம் அரிசி குதாம்புகள் மரமில்கள் பருத்தி மில்கள் இவைகளின் நெருப்பு இன்ஸூரத்தையும் இதன்பின் கூறுவோம்.

Rice Mill Insurance.

அரிசி அறைக்கும் குதாம்புகளுக்கு இன்ஸூரன்ஸ் செய்வது.

இவ்விதமான இன்ஷூரேமும் நெருப்பு இன்ஸூராத்தின் ஒருபாகத்தைச் சேர்ந்தது அதாவது குதாம்பினுடைய கட்டடங்கள் ஆபீஸ்கள் பக்க கட்டடங்கள் இன்ஜின்கள் பாய்லர்கள் ஹஸ்க் ஹவுஸ்கள் (உமியறை) பாய்லர்களை மூடிக் கொண்டிருக்கும் கட்டடங்கள் இவைகள் நெருப்பு பிடித்து அதினால் ஆபத்துண்டாகி நஷ்டமேற்பட்டால் அதற்கு பிரதி பலனாக நஷ்டங்கட்டிக்கொடுப்பதாக ஒப்புக்கொள்ளும் நெருப்புஇன்ஷூரான்ஸ். இம்மாதிரிஇன்ஸூரன்ஸ் செய்யப்படும் கட்டடங்களைப் பல வகுப்புகளாக பிரிக்கப்பட்டிருக்கிறது. அப்படி உயர்தரமான கட்டடங்கள் ரங்கூன், மோல்மேன், பாஸின் இவ்விடங்களில் மாத்திரம் கொஞ்சம் மில்கள் இங்கிலீஷ்காரர்களால் கட்டப்பட்டு நடந்துவருகிறது அவைகளுக்கு கட்டடங்களுக்குத்தக்கப்படி கட்டணங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது ஆனால் இவைகளைத் தவிற மற்ற எல்லா மில்களும் சற்றேறக்குறைய பர்மாவில் பூராவும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கும். இப்படிப்பட்ட மில்களுக்கும் அவைகளின் கட்டடங்களுக்குத் தக்கப்படி கட்டணங்கள் ஏற்படுத்தியிருக்கிறது ஆனாலும் பொதுவாய் எல்லாவித மில்லுகளிலும் செய்யும் இன்ஸூரங்களை இரண்டு பிரிவாக வகுக்கப்பட்டிருக்கிறது.

அவையாவன:—

1. கார்கோமில் அதாவது நெல்லின்மேல் உள்ள உமியை மாத்திரம் நீக்குவது.

2. வைட்மில் நெல்லின் மேலுள்ள உமியை நீக்குகிறதுடன், அவ்வரிசியின் மேலுள்ள தவிட்டையும் குத்திநீக்குவது.

இன்ஸூரப்செய்யும் காலத்தில் மேலேசொல்லப்பட்ட கார்கோமில்லா அல்லது வைட்மில்லா என்று கண்டு இன்ஸூரம் செய்யப்படவேண்டும் அப்படி செய்யும் மில்லானது கார்கோமில்லாயிருந்தால் கொஞ்சம் குறைந்த கட்டணமும் வைட்மில்லாயிருந்தால் கொஞ்சம்கூடிய கட்டணமும் கொடுக்கவேண்டும், அப்படி செய்யும் இன்ஸூரத்திலும் அடியிற்கண்ட விஷயங்களையும் அனுசரிக்கவேண்டும். மில்லின் கட்டடம் 5 அடுக்குக்கு அதிகமாயிருந்தால் அதற்கு 100க்கு 2 அணு ஜாஸ்தியாயும் மில்லுக்கும் பாய்லர் ஹவுஸ் அதாவது நெருப்பு எரிகிற இடத்துக்கும் 25 அடிதூரத்துக்குள் பட்டிருநது அதற்கு மத்தியில் சுவரில்லாமலிருந்தால் அதற்காக 100க்கு 6 அணு அதிகமாகவும உமிவீடானது இரும்பிஞல் கட்டப்படாமல் மாத்திஞல் கட்டப்பட்டிருந்தால் அதற்காக 100க்கு 4 அணு அதிகமாகவும் ஷைமில்லில் எலெக்டிரிக் விளக்கில்லாமல் மண்ணெண்ணெ விளக்கு உபயோகப்படுத்துவதாயிருந்தால் அதற்காக 100க்கு 4 அணு அதிகமாகவும் மேலே சொல்லப்பட்டவைகள் கார்கோமில்லாயிருந்தால் இதற்கேற்பட்ட கட்டணம் 100க்கு ரூ. 1-4-0 உடன் மேலே சொல்லிய விவரப்படி உண்டான கட்டணங்களையும் கூட்டி மொத்தம் சேரக்கூடிய தொகையையும் வைட்மில்லாயிருந்தால் அதற்கேற்பட்ட கட்டணம் நூற்றுக்கு ரூபா

RICE MILL INSURANCE.

ஒன்னறை வீதம் மேலே சொல்லப்பட்ட இதர கட்டணங்களையும் கூட்டி உண்டாகும் தொகையை கட்டணமாகக்கொடுக்கவேண்டும். இம்மாதிரி மில்லுகளுக்கு அருகாமையிலிருக்கும் குதாம்புகளுக்காவது அல்லது குதாம்பில்வைக்கப்பட்ட சரக்குகளுக்காவது இன்ஸுரர் செய்யுங்காலத்தில் அவ்வித குதாம்புகள் ஷை மில்லுக்கு 50 அடி தூரத்துக்கப்பால் இருந்தால் அதற்கு சாதாரண கட்டடமும் 50 அடிக்குட்பட்டிருந்தால் அதற்கு மில்லுக்குண்டான கட்டணமுங்கொடுக்கப்படவேண்டும். யாதொருகட்டடமுமில்லாத தரையில் நெல்லுகளை குவித்து அம்மாதிரியான நெல்லுகளுக்கும் நெருப்பு இன்ஸுரம் செய்துகொள்ளலாம். அப்படிப்பட்ட குவியலானது யாதொரு கட்டடத்தையும் சேராமலிருந்தால் அதற்கு அதிகக்குறைவான கட்டணம் விதிக்கப்படும். மில்லுகள் ஓடிக்கொண்டிருக்கும்போதாவது அல்லது ஓடாமலிருக்கும் காலங்களிலாவது இன்ஸுரர் செய்யலாம். இவ்வித இன்ஸுரன்ஸையும் ஒரு வருஷத்துக்கு அதிகப்படாத எவ்வளவு குறைந்தகாலத்துக்கு வேண்டுமென்றாலும் இன்ஸுரர் செய்துகொள்ளலாம்.

அப்படி இன்ஸுரர் செய்கிற சமயத்தில் மில்லுக்குத் தனியாக ஒரு இன்ஸுரமும் அதில் இருக்கக்கூடிய சரக்குகளுக்குத்தனியாக ஒரு இன்ஸுரமும் இருப்பது சிலாக்கியம். அப்படி மில்லைத்தனியாய் இன்ஸுரர் செய்யும் சமயத்திலும் மில்லின் கட்டடங்கள் இவ்வளவுதுகை ஆபீஸ் கட்டடங்கள் இவ்வளவு துகை, இன்ஜின் இவ்வளவுதுகை, பாய்லர் இவ்வளவு துகை, பாய்லர் ஷெட்டு இவ்வளவு துகை, (ஹஸ்க் அவுஸ்) உமிவீடு இவ்வளவு இன்னம் மைத்த கட்டடங்கள் இருந்தால் அக்கட்டடங்களுக்கும் தனித்தனியாக

ரைஸ் மில் இன்ஷூரன்ஸ்.

ஒவ்வொன்றுக்கும் இவ்வளவு இவ்வளவு துகையென்று அதனதன் மதிப்புக்குத்தக்கபடி உண்டாகிய எல்லாத்துகையையும் கூட்டிவருகிற ஒரு பெருந்துகைக்கு மேலேகண்ட விபரங்களை பாலிஸியில் எழுதி இன்ஷூர் செய்துகொள்வது ரெம்பவும் மேன்மை. சரக்குகளுக்கு மாத்திரம் தனியாக செய்வதாயிருந்தால் இன்னமில் இன்னகுதாம்பில் உள்ள நெல்லுக்கு இவ்வளவு தொகையென்றும் அதில் அரிசி குருணைகள் இருந்தால் அவைகளுக்கு இவ்வளவு தொகையென்றும் தவிடு இருந்தால் அதற்கு இவ்வளவென்றும் கோணிப்பைகள் இருந்தால் அவைகளுக்கு இவ்வளவு தொகையென்றும் ஒவ்வொன்றையும் விபரமாக தனித்தனியாக செய்த எல்லா துகையும்கூட்டி மொத்தமாகிற ஒரு பெருந்துகைக்கு இன்ஷூர் செய்துகொள்ளுகிறது நலம். ஆனால் இன்ஷூரம்செய்பவர் சொந்தக்காரராயிருந்தாலும் சரி அல்லது அடமானதாரராயிருந்தாலும்சரி அப்படி அடமானதாரராயிருந்து இன்ஷூர் செய்கிற சமயத்தில் தாங்கள் அடமானதாரர் என்று பாலிஸியில் கண்டு செய்துகொள்ளவேண்டும்.

அப்படி செய்யும் சமயத்திலும்கூட அடமானதாரர் எவ்வளவு துகையை யடைய அடமானப்பத்திரப்படி பாத்தியமுடையவர்களாயிருக்கின்றார்களோ அவ்வளவு துகைதான் அவர்கள் கம்பெனியாரிடமிருந்து அடைவார்கள். சொந்தக்காரர் தாங்களே இன்ஷூரம் செய்து அடமானதாரர் பேருக்கு அப்பாத்தியதையை மாற்றிக்கொடுக்கலாம். அப்படி மாற்றிக்கொடுக்கப்பட்ட யாதாயினுமொரு சொத்தானது நெருப்பினால் ஆபத்தேற்பட்டு அதற்கு நஷ்டஈடு அடையுங்காலத்தில் அடமானதாரர் தங்களுக்கு எவ்வளவுகிடைக்கவேண்டுமென்று ரிகார்டு மூலமாய் ரூபிக்கிறார்களோ, அவ்வளவு து

RICE MILL INSURANCE.

கையைத்தான் பெருவார்கள். ஆனல் சொந்தக்காரர் தாமே இன்ஷுவர் செய்து அடமானதாரருக்கு அப்பாத்தியதையை மாற்றிக்கொடுக்கும் சமயத்தில் ஷை சொத்துக்கு நெருப்பினல் ஆபத்தேற்பட்டு கம்பெனியாரிடமிருந்து நஷ்டஈடு அடையும் சமயத்தில் அடமானதாரர் தங்களுக்குண்டான தொகையை எடுத்துக்கொண்டு மிகுதிதுகையை சொந்தக்காரருக்கு கொடுக்கப்படவேண்டும் என்கிற ஒப்பந்தம் அதாவது எக்ரிமெண்ட் செய்யப்பட்டிருந்தால் அப்போது அடமானதாரர் தங்கள் துகையையும சொந்தக்காரர் மீதி துகையையும் அடைய பாத்தியமுள்ளவர்களாகிருர்கள். அன்பர்களே இது ரெம்பவும முக்கியமான விஷயமாகையால் இதைக் கூர்ந்து கவனிக்கவேண்டியது. மில்லுகளிலிருக்கும் சாக்குகளுக்கு தனிபாய் இன்ஸுவர்செய்தாலும் அந்த மில்லுக்குண்டான கட்டணம்தான் சரக்குக்கும் கொடுக்கப்படவேண்டும். (ரைஸ் மில் இன்ஸுரன்ஸ் முற்றிற்று.)

Saw Mill Insurance.

மரம் அறுக்கும் யந்திரத்தின் இன்ஷுரன்ஸ்.

நாம் இதற்குமுன் நெல்லுகுத்தும் மிஷன்களின் இன்ஸுரத்தைப்பற்றி அறிந்தோம். சா மில் இன்ஸுரன்ஸ் மரம் அறுக்கும் யந்திரத்தின் இன்ஸுவர் என்ன என்பதையும் தெரிவோம்.

இம்மாதிரியான மில்கள் பர்மாவில் சாதாரணமாய் ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறது. ஆனல் இரங்கூனில்மாத்திரம் சிலஐரோப்பியர்களால் நடத்தப்பட்டுவருகிற சிலமில்கள் மாத்திரம் வித்தியாசப்படுகின்றன. இம்மாதிரியான மில்லுகள் வேலைசெய்துகொண்டிருக்கும் காலத்திலாவது அல்லது வே

லையில்லாமல் வேலை நிறுத்தம் செய்யப்பட்டிருக்கும் காலத்திலாவது எப்பொழுது வேண்டுமானாலும் இன்ஸூர் செய்து கொள்ளலாம். அப்படி செய்யப்பட்ட மில்லுகளுக்கெல்லாம ரேட்டு ஏறக்குறைய ஒன்றாகத்தானிருந்து வருகிறது நாம் இதற்குமுன் வாசித்த அரிசி மில் இன்ஸூரத்தில் மில்லின் இன்ஸூரன்ஸ் வேராகவும் சரக்கின் இன்ஸூரன்ஸ் வேராகவும் செய்யவேண்டுமென்று சொன்னதுபோலவே இந்த சா மில் இன்ஸூரத்திலும் மில்லுவேராகவும் அதில் இருக்கப்பட்ட சரக்கு அதாவது மரங்களுக்கு வேராகவும இன்ஸூர் செய்துகொள்ளவேண்டும். அதேமாதிரி மில்லைச்சேர்ந்த குதாம்புகள் ஏதாவது இருந்தால் அககுதாமபுக்கு தனியாகவும் அதில் சரக்குகள் அடுககப்பட்டிருந்தால் அச்சரக்குகளுக்கு தனியாகவும் அப்படிப்பட்ட சரக்குகள் அறுக்கப்பட்டு சையிசு செய்யப்பட்டிருந்தால அதற்கு தனியாகவும அறுக்கப்படாமலிருக்தால் உருண்டை வடிவமான மரங்களுக்கு தனியாகவும் அல்லது அறுத்திருக்கிறதும் இனி அறுககப்போகிறதுமான கல்லாவித மரங்கள் என்று கண்டு ஒரு பாலிஸி பெற்றுக்கொள்ளவேண்டும். இதற்குமுன் சொன்ன அரிசி மில் இன்ஸூரத்தில் கண்டபடி நெருப்பினால் ஆபத்தேற்பட்ட காலததில் நஷ்ட ஈட்டை சுளுவில்கண்டுபிடிக்க மேலே சொல்லப்பட்டவைகள் உபகாரமாகின்றன இது இருதிறத்தினர்களுக்கும் நன்மையைக் கொடுக்கக்கூடியது இப்பாலிஸிப் பாத்தியதை மாத்துவதைப்பற்றியும் புதுப்பிப்பதைப்பற்றியும் கேன்ஸல் செய்வதைப்பற்றியும் கூட்டிக்குறைப்பதைப்பற்றியும் சொந்தக்காரர் தாமே இன்ஸூரன்ஸ் செய்வதைப்பற்றியும் அடமானதாரர் தானே இன்ஸூர் செய்வது என்பதைப்பற்றியும் சொந்தக்காரர் இன்ஸூர் செய்

SAW MILL INSURANCE.

வதற்கும் அடமானதாரர் இன்ஸூர் செய்வதற்கும் வித்தியாசம் என்ன? என்பதைப்பற்றியும் சொந்தக்காரர் தம்பேரால் இன்ஸூர் செய்து அடமானதாரருக்கு பாத்தியதை டிரான்ஸ்பர் செய்துகொடுப்பது என்பதைப்பற்றியும் இதற்கு முன்சொன்ன அரிசிமில் இன்ஸூரத்தில் கண்டவைகளே இந்த சா மில் இன்ஸூரத்துக்கும் உள்ளதாகையால் அதை மறுபடியும் திருப்பி எழுத அவசியமில்லாதபடியால் அவைகளின் தலைப்பெயர்களை மாத்திரம் மேலே சொல்லப்பட்டிருக்கிறது.

பாலிஸி.

சாதாரணமாய் எல்லா இன்ஸூரன்ஸ்களுக்கும் பயர் பாலிஸி ஒன்றே. அரிசிமில் இன்ஸூரன்சாயிருந்தாலும் சரி சா மில் இன்ஸூரன்சாயிருந்தாலும் சரி ஆயில் மில் இன்ஸூரன்சாயிருந்தாலும்சரி ஜின்னிங்கு மில் இன்ஸூரன்சாயிருந்தாலும் சரி அல்லது முன்சொல்லப்பட்ட ஒன்றாவது வகுப்புக்கட்டடங்கள் இரண்டு மூன்றாவது வகுப்புகள் குடியிருக்கும் வீடுகள் வியாபாரம் செய்யும் கடைகள் வியாபாரச் சரக்குகள் முதலிய இம்மாதிரி இன்ஸூர் செய்யும் எல்லாவற்றிற்கும் பயர் இன்ஸூரன்ஸ் பாலிஸி ஒன்றுதான். ஆனால் கட்டணம் கட்டவேண்டியது மட்டும் மாறுபடும் அவைகளையும் அங்கங்கு கூறியிருக்கிறது. இப்போதுதற்காலம் பர்மாவில உள்ள ஏறக்குறைய எல்லா சா மில்களுக்கும் கட்டணம் நூத்துக்கு ஒண்ணேகால் ரூபாய்வீதம் வாங்கப்பட்டுவருகிறது. ஆனால் இப்படிப்பட்ட மாம் அறுக்கும் மில்லுக்கு சமீபமாயுள்ள குதாம்புகளில் சரக்குகள் வைக்கப்பட்டிருந்தால் அப்படிப்பட்ட குதாப்பானது மில் கட்டடத்திற்கு 50 அடி தூரத்துக்கப்பால் இருக்குமாகில் அதற்கு குறைந்த கட்டணம் ஏற்படுத்தியிருக்கிறது சாதாரணமாய் எல்லா சா மில் களுக்கு 50 அடி தூரத்தில் இருக்கப்பட்ட குதாம்புகளில் வைக்கப்பட்டிருக்கும் சரக்குகளுக்கு 100க்கு 12அணு வீதம் வாங்கப்பட்டுவருகிறது.

(சா மில் இன்ஸூரன்ஸ் முற்றிற்று.)

Cotton Ginning Mill Insurance.

பருத்தியறைக்கும் யந்திரத்தின் இன்ஷூரன்ஸ்.

நாம் இதுவரை சாமில் அதாவது மரம் அறுக்கிற யந்திரங்களின் இன்ஸூரத்தைப்பற்றி சொன்னேம். இனி ஜின்னிங் மில் அதாவது பருத்தியறைக்கும் யந்திரங்களினுடையவும் பருத்தி பஞ்சு கொட்டை முதலிய இவைகளின் இன்ஸூரம் என்ன? என்று தெரிவோம் இவ்வகை இன்ஸூரமானது இரண்டு விதமாக வகுக்கப்பட்டிருக்கின்றன.

அதாவது;— 1. பக்கா கட்டடம் 2. கச்சா கட்டடம்.

பக்கா கட்டடம் என்பது மில்லின் கதவு நிலே ஜன்னல் இவைகளைத்தவிர மற்றெந்தபாகமும்மரச்சம்மந்தமில்லாதது கச்சா கட்டடம் என்பது தேக்கை அல்லது மூங்கலினுல் கூறையிடப்படாத மற்றெவ்விதமான கட்டடமும் இம்மாதிரி கட்டடங்களை இன்ஸூர் செய்யும்போது மில்மிஷினரிக்கு தனித்தனியாய் இவ்வளவு தொகையென்றும் கட்டடத்துக்கு தனியாய் இவ்வளவு தொகையென்றும் அதிலுள்ள பருத்தி பஞ்சு பருத்திக்கொட்டை முதலியவைகளுக்கெல்லாம் தனித்தனியாய் இவ்வளவு தொகையென்று விபரமாக கண்டெழுதி இன்ஸூரன்ஸ் செய்துகொள்ளவேண்டியது. அப்படி இன்ஸூரம் செய்வதில் பக்கா கட்டடத்துக்கு கட்டணம் குறைவாகவும் கச்சா கட்டடத்துக்கு கட்டணம்கொஞ்சம் ஜாஸ்தியாகவும் வாங்கிவருகிறுர்கள்.

ஆனல் இவ்வித மில்லுக்கு சமீபமாயுள்ள குதாம்புகளில் சரக்குகள் வைக்கப்பட்டிருந்தால் அப்படிப்பட்ட குதாம்புகள் ஷை மில்லுக்கு 50 அடி தூரத்துக்கப்பாலிருக்குமாகில் அதற்கு குதாம்பின் கட்டடத்துக்குத் தக்கபடி 100க்கு வருஷம் 1க்கு இவ்வளவு கட்டணம் கொடுக்கவேண்டியதென்று தீர்மானித்திருக்கிறுர்கள். அப்படிப்பட்ட குதாம்புகளில்

COTTON GINNING MILL INSURANCE.

(லூஸ்) அதாவது குவியல் குவியலாய் போடப்பட்டிருந்தால் அதற்கு கட்டணம் கொஞ்சம் கூடுதலாயும் (**Pressed Bales**) அதாவது அமுக்கப்பட்டதும் லகுவாய் எடுக்கமுடியததது மான பேல்களாயிருந்தால் அதற்கு கட்டணம் கொஞ்சம் குறைவாகவும் வாங்கிவருகிறார்கள். இதைத்தவிர குதாம்பில் போடாமல் மில் கம்பவுண்டுக்குள் யாதொரு கட்டடமுமில்லாத வெட்ட வெளியில் போடப்படும் சரக்குகளுக்கும் இன்ஸுரம் செய்துகொள்ளலாம். அப்படி வெட்டவெளியில போடப்படும் சரக்கானது ஒரு (கூபிக்பீட்டு) அதாவது ஒரு அடி அகலம் ஒரு அடி உயரம் ஒரு அடி நீளம் இந்த அடைப்புள்ள இடத்தில் 35பவுனுக்குமேல்போடப்படாததாயிருக்கவேண்டும், ஷெடிமில்லானது எலெக்டிரிக் லைட் இல்லாமல் சாதாரணமாய் கிரெஷன் எண்ணெயினால் விளக்கிடப்படுவதாயிருந்தால் அதற்குதனிக்கட்டணம் கொடுக்கவேண்டியதும் தவிர ஷெடி விளக்குகளும் எண்ணெயும் தனியாக ஒரு கட்டிடத்தில் வைக்கப்படவேண்டும். சாதாரணமாய் இப்படிப்பட்ட மில்கள் வேலைசெய்து கொண்டிருக்கும்போதும் வேலை செய்யாமலிருக்கும்போதும எந்தக்காலத்தில் வேண்டுமானாலும் இன்ஸுர் செய்துகொள்ளலாம். ஆனால் வேலை செய்யப்படாமல் இருக்கும்காலத்தில் இன்ஸுர் செய்தால் கட்டணம் ரெம்பவும குறையும ஆகையால் எவ்வளவுகாலம் வேலை செய்யப்படுமென்று இன்ஸுர் செய்கிறவருக்குத்தோன்றுகிறதோ அத்தனை நாளைக்குமாத்திரம் (**Short Period Rate**) என்ற குறைந்தகாலத்துக்குண்டான இன்ஸுரன்சும் வேலை செய்யப்படாமலிருக்கும் காலத்தில் குறைந்தகாலத்துக்குண்டான மற்றப்பகுதி இன்ஸுரன்ஸையும செய்துகொண்டால் இன்ஸுரர் செய்கிறவருக்கு எல்லாகாலத்துக்கும் மில் இன்ஸுரன்ஸுக்கு கட்டுப்பட்டிருப்பதோடு கூட கட்டப்படும் கட்டணத்தில் சொல்பதுகை மிகுதி ஏற்படுகின்றது. ஏனெனில் எல்லாகாலங்களிலும் பருத்தி கிடைப்பது சாத்தியமில்லை.

(நெருப்பு இன்ஸுரன்ஸ் முற்றிற்று)

பர்மாவிலுள்ள எல்லா இன்ஷூரன்ஸ் கம்பெனிகளின் பெயர்களும், அவைகளின் ஏஜண்டுகளின் பெயர்களும்.

கிரஹாம்ஸ் டிரேடிங் கம்பெனி லிமிடேட் ஏஜண்ட்ஸ்.

பிரிடிஸ் அமெரிகா அஸூரான்ஸ் கம்பெனி.
வெஸ்ட் ஆப் ஸ்காட்லண்ட் இன்ஸூரன்ஸ ஆபீஸ் லிமிடெட்.
எம்லாயீஸ் அஸூரன்ஸ கார்போரேஷன் லிமிடெட். [Ltd.
லண்டன் அண்டு லங்காஷயர் பயர் இன்ஸூரன்ஸ் கம்பெனி
நார்விச் யூனியன் பயர் இன்ஸூரன்ஸ் சொசைடிலிமிடெட்.
லண்டன் & ஸ்காட்டிஸ் அஸூரன்ஸ் கார்போரேஷன் ,,

ஹார் பேரிங்குஸ்மித் அண்டு கம்பேனி லிமிடேட்.

நேஷனல் யூனியன் இன்ஸூரன்ஸ சொசைடி லிமிடெட்.
ஈகுல் ஸ்டார் அண்டு பிரிடிஷ் டொமினியன் இன்ஸூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.
ஸ்காட்டிஸ் யூனியன் & நேஷனல் இன்ஸூரன்ஸ் கம்பெனி [லிமிடெட்.

எப். சி. ஹரே அண்டு கம்பேனி லிமிடேட்.

பாலடைன் இன்ஸூரன்ஸ கம்பெனி லிமிடெட்.
நேஷனல் அஸூரன்ஸ் கம்பெனி அப் அயர்லாந்து.
கம்மர்ஸியல் இன்ஸூரன்ஸ கம்பெனி அப் அயர்லாந்து Ltd.
அஸூரன்ஸ் பிரான்கோ ஆஸியாடிக் சாங்கே.

எப். டபிள்யூ. ஹேல்ஜேர்ஸ் அண்டு கம்பேனி.

லிவர்பூல் அண்டு லண்டன் அண்டு குலோப்பு இன்ஸூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.
லா யூனியன் பயர் இன்ஸூரன்ஸ் கம்பெனி ஆப் பாரீஸ்.

AGENTS & INSURANCE CO'S NAMES.

இண்டுபர்மா அன்டர் ரைட்டர்ஸ் லிமிடேட்.

கிரேட் அமெரிகன் இன்ஸூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.
பிரிடிஷ் இண்டியா ஜெனரல் இன்ஸூரன்ஸ் கம்பெனி ,,
கிரெஸன்ட் இன்ஸூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

ஸ்டீல் பிரதர்ஸ் அண்டு கம்பேனி லிமிடேட்.

அட்லாஸ் அஸூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.
ராயல் இன்ஸூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.
லா யூனியன் அண்ட் ராக் இன்ஸூரன்ஸ் கம்பெனி ,,
யூனியன் இன்ஸூரன்ஸ் சொஸைடி ஆப் கேன்டன் ,,
க்வீன்ஸ்லண்ட் இன்ஸூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

எம். எம். இஸ்பானி.

ராயல் எக்சேன்ஜ் அசுரன்ஸ் கார்போரேஷன்.
டிரிடான் இன்ஸூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

அங்லோ பர்மா ரைஸ் கம்பேனி லிமிடேட்.

யூனியன் அசுரன்ஸ் சொஸைடி ஆப் லண்டன்.

பல்தஜார் அண்டு சன் லிமிடேட்.

யார்க் ஷையர் இன்ஸூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.
மோடார் யூனியன் இன்ஸூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.
ஹோம் இன்ஸூரன்ஸ் கம்பெனி ஆப் நியூ யார்க் லிமிடெட்.

ஜார்ஜ் கார்டன் அன்கோ பர்மா லிமிடேட்.

இம்பீரியல் இன்ஸூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.
மோடார் யூனியன் இன்ஸூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.
நார்தன் அசுரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

இன்ஸூரன்ஸ் கம்பெனிகளும், ஏஜண்டுகளின் பெயர்களும்

ஜார்ஜ் கில்லஸ் பீ அன்கோ.

கார்டியன் அசுரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

வெஸ்ட்டார்ன் அசுரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

பின்லே பிளீமிங் அண்டு கம்பெனி.

லன்காசயர் இன்ஸூரன்ஸ கம்பெனி.

பொனிக்ஸ் அசுரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

ராயல் எக்சேன்ஜ் அசுரன்ஸ் கார்பொரேஷன்

மேன்செஸ்ட்டர் அசுரன்ஸ கம்பெனி.

சவுத் பிரிடிஷ் இன்ஸூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

படேவியா சீ. அண்டு பயர் இன்ஸூரன்ஸ் கம்பெனி.

பேர்வேதர் ரிச்சார்ட்ஸ் அண்டு கம்பெனி.

எக்களுமிக் இன்ஸூரன்ஸ கம்பெனி லிமிடெட்.

எம். டு. காமோ லோபோ அண்டு கம்பெனி.

வல்கன் இன்ஸூரன்ஸ் கம்பெனி லிமிடெட் (பம்பாய்)

சி. ஆர் காவி அண்டு கம்பெனி.

ஸ்டேட் அசுரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

இன்ஸூரன்ஸ் ஆபீஸ ஆப் ஆஸ்ட்ரேலியா லிமிடெட்.

தாமஸ் குக் அன்சன் லிமிடெட்.

சவுத் பிரிடிஷ் இன்ஸூரன்ஸ கம்பெனி லிமிடெட்.

நியூ ஜீலாந்து இன்ஸூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

மேனேஜர்கள்

எல்லர்மன் அரகன் ரைஸ் அண்டு டிரேடிங் கம்பெனி Ltd.

லண்டன் அண்டு லங்காஷையர் பயர் இன்ஸூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

AGENTS & INSURANCE CO'S NAMES.

கார்டியன் அசுரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

பொனீக்ஸ் அசுரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

வெஸ்ட்டர்ன் அசுரன்ஸ் கம்பெனி.

ஸ்காட்டிஸ் யூனியன் அண்டு நேஷனல் இன்ஸுரன்ஸ கம்பெனி லிமிடெட்.

வொர்ல்டு ஆக்ஸிலரி இன்ஸுரன்ஸ கார்போரேஷன் லிமிடெட்.

ஆங்லோ பர்மா ரைஸ் கம்பெனி லிமிடெட்.

யூனியன் அசுரன்ஸ் சொசைடி ஆப் லண்டன்.

ஜே. ஏ. பிக்பீ அண்டு கம்பெனி.

ஸெண்ட்ரல் இன்ஸுரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

பின்னிங் அண்டு கம்பெனி.

பேட்டிரியாடிக் அசுரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

பிரிடிஷ் கிரவுன் அசுரன்ஸ் கார்போரேஷன் லிமிடெட்.

யாங்ஸ்டீ இன்ஸுரன்ஸ அசோசியேஷன் சாங்கே.

பிளாம் அண்டு வான் டோர்.

இன்ஸுரன்ஸ் கம்பெனி நெதர்லாண்டு லிமிடெட்.

பாம்பே பர்மா டிரேடிங் கார்போரேஷன்.

நார்த் பிரிடிஷ் அண்டு மெர்க்கண்டைல் இன்ஸுரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

வில்லியம் ஜேக்ஸ் அண்கோ.

க்ரெஷாம் பயர் அண்டு ஏக்ஸிடெண்ட்டு இன்ஸுரன்ஸ் சொசைடி லிமிடெட்.

ஜாவாசீ அண்டு பயர் இன்ஸுரன்ஸ் கம்பெனி லிமிடெட் மேனேஜர்.

இன்ஸூரன்ஸ் கம்பெனிகளும், ஏஜண்டுகளின் பெயர்களும்

ஜூபிடர் ஜெனரல் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்
பிரான்சு மேனேஜர்

லண்டன் ரங்கூன் டிரேடிங் கம்பெனி லிமிடெட்.

நார்விச் யூனியன் பயர் இன்ஸூரன்ஸ் சொசைடி லிமிடெட்

ரிலையன்ஸ் மேரைன் இன்ஸூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

கலோடோனியன் இன்ஸூரன்ஸ் கம்பெனி.

நியூ இண்டியா அசூரன்ஸ கம்பெனி லிமிடெட்.

நார்த் பிரிடிஷ் அண்டு மெர்க்கண்டைன் இன்ஸூரன்ஸ் கம் பெனி லிமிடெட்.

மார்சால் காட்டரேல் அண்கோ லிமிடெட்-

ஜெனரல் ஏக்ஸிடெண்ட் பயர் அண்டு லைப் அசூரன்ஸ் கார் போரேஷன் லிமிடெட்.

மேஸின்க் அண்டு கம்பெனி லிமிடெட்

ஜெனரல் ஏக்ஸிடென்ட் பயர் அண்டு லைப் அசூரன்ஸ் கார் போரேஷன்.

ஸ்டாண்டார்டு இன்ஸூரன்ஸ் கம்பெனி லிமிடெட் ஆம்ஸ் டர்டாம்.

மவுங் பா. ஓ.

இம்பீரியல் இன்ஸூரன்ஸ் கம்பெனி

மிட்சு புசட் கெய்ஸா லிமிடெட்.

நிப்பன் பயர் இன்ஸூரன்ஸ் கம்பெனி டொக்கியோ.

யோகஹாமா பயர் அண்டு மேரைன் இன்ஸூரன்ஸ் கம்பெ பெனி யோகஹாமா.

எஸ். ஓப்பன் ஹேமர் அண்டு கம்பெனி லிமிடெட்.

யூனியன் பயர் இன்ஸூரன்ஸ் கம்பெனி பாரீஸ்.

ராயல் இன்ஸூரன்ஸ கம்பெனி லிமிடெட் (ரெஸிடென்ட் சிகர்டேரி)

AGENTS & INSURANCE CO'S NAMES.

ராபர்ட் ஸ்ன் அண்டு கம்பேனி.

லிவர்பூல் மேரைன் அண்டு ஜெனரல் இன்ஸூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

கே. பி ராய் சவுதரி அணடு கம்பேனி.

கிரெஸன்ட் இன்ஸூரன்ஸ்கம்பெனி லிமிடெட் பாம்பே.

யூனிவர்சல் பயர் அண்டு ஜெனரல் இன்ஸூரன்ஸ் கம்பெனி லிமிடெட் பாம்பே.

பைடலிடி பினிக்ஸ் பயர் இன்ஸூரன்ஸ் கம்பெனி லிமிடெட் ஆப் நியூயார்க்.

இ. டி. சாசூன் அண்டு கம்பேனி.

பிரிடிஷ் இக்விடபுள் அசூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

ஏ. ஸ்காட் அண்டு கம்பேனி.

அட்லாஸ் அசூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

சென்டா அண்டு கம்பேனி லிமிடெட்.

பூஸோ மேரைன் அண்டு பயர் இன்ஸூரன்ஸ் கம்பெனி Ltd.

ஆர். டி. டாடா அண்டுகோ லிமிடெட்.

நியூ இண்டியா அசூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

கூஜின் டீக்

ஓவர்சீஸ் அசூரன்ஸ் கார்போரேஷன் லிமிடெட்.

டிரேடிங் கம்பேனி.

நெதர்லன்ட்ஸ பயர் அண்டு லைப் இன்ஷூரன்ஸ் கம்பெனி.

உர் அண்டு கம்பேனி.

எக்ஸஸ் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

இன்ஸுரன்ஸ் கம்பெனிகளும், ஏஜண்டுகளின் பெயர்களும்

வாட்சன் மெக் இவன் அண்டு கோ லிமிடெட்.

லிவர்பூல் லண்டன் அண்டு குலோப்பு இன்ஷுரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

வாட்சன் அண் சன் லிமிடெட்.

ஹோம் இன்ஷுரன்ஸ் கம்பெனி ஆப் நியூயார்க் லிமிடெட்.

வைட்மன் அண்டு கோ லிமிடெட்.

யூனியன் அசுரன்ஸ் சொஸைடி லிமிடெட்.

ஈஸ்ட்டர்ன் இன்ஷுரன்ஸ் கம்பெனி ஆப் கல்கத்தா.

வில்சன் அண்டு கம்பெனி.

சைனு பயர் இன்ஷுரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

வில்சன் லேதம் அண்டு கோ லிமிடெட்.

யார்க் ஷையர் இன்ஷுரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

வி. ஜாலிகாபர் அண்டு கம்பெனி.

தி' நார்தர்ன் அசுரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

(இன்ஷுரேன்ஸ் கம்பெனிபெயர்கள் முற்றிற்று)

MEMORANDUM. ஞாபகக்குறிப்பு.

சொத்துவிபரம்.	கம்பெனியின் பெயர்.	ஏஜண்டின் பெயர்.	பாலிஸி நெ.	எந்த உ முதல் எந்த உ வரை	எவ்வளவு தொகைக்கு.	செலுத்தின கட்டணம்.

Memorandum. ஞாபகக்குறிப்பு.

Renewals. புதுப்பித்த விவரங்கள்.

கம்பெனி பெயர்.	பாலிஸி நெ.	செலுத்திய கட்டணம்	புதுப்பித்த ௵ ௴ ௳	அடுத்த வாய்தா.

Memorandum. ஞாபகக்குறிப்பு.

Settlement of Fire Loss. நஷ்டஈட்டின் தீர்மானம்.

கம்பெனி பெயர்.	நஷ்டத் தொகை.	ஆபத்தேற் பட்டகாலம்	பாலிஸி நெ.	தீர்மானம்

LET NOT ....

YOUR ....

WIFE & CHILDREN

STARVE.

SOLVE THIS PROBLEM

BY

INSURING WITH

BENGAL MERCANTILE

LIFE INSURANCE Co. Ltd,

CHIEF AGENTS:-

B. N. CHATTERJEE & Co.,

69, Merchant Street, Rangoon.

BRANCHES:-

MANDALAY &

TAVOY

உங்கள் குடும்பத்தார்கள், வருத்தப்படாமலிருக்க வேண்டுமானால் உங்கள் உயிர் இன்ஸூரன்ஸை பெங்கால் மெர்க்கண்டைல் லைப் இன்ஷூரன்ஸ் கம்பெனியில் அஷ்யூர் செய்யுங்கள்.

பி. என். சாட்டர்ஜி அண்டு கோ.

சீப் **ஏஜண்டுகள்:**

69, மெர்ச்சன்ட்வீதி, இரங்கோன்.

கிளை ஆபீஸ்கள்:- மாந்தலே அண்டு டவாய்.